ശ്രീകൃഷ്ണവിലാസം.

വെൺമണി [illegible]

T·D·R·e- 3324
RRNo 20 1-1-90.

O-,892 MN03,V
M84

DIGITIZED

117520

உ

கடவுள்துணை

சிவசுப்பிரமணியர்மணம்புணர்ந்த

# வள்ளியம்மைநாடகம்

மதுரைஜில்லா

எட்டியாபுரம்-சமஸ்தானவித்துவான்

கடிகை - முத்துசாமிபுலவர், மாணாக்கராகிய

முத்துவீரக்கவிஞர்

இயற்றியது.

இஃது.

சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரால்

பார்வையிடப்பட்டு,

சித்தூர்

வீராசாமிநாயுடு

அவர்களால்


தமது,


வித்யாவிநோத அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1889

விலை-அணா—உ.





உ

கடவுள் துணை,

# வள்ளியம்மை நாடகம்.

விநாயகர் துதி-வெண்பா.

திங்களணிசெஞ்சடையன் செல்வனெனவேயிலகுந்
துங்கவைங்கரன்றனையே துதித்துப்-பொங்கமுடன்
வள்ளியம்மைநாடகத்தை மானிலத்தியம்புதற்குக்
கள்ளமில்லாக்கணபதியின் காப்பு.

இதுவும து-விருத்தம்,

மதுராசத்தமிழ்தழைத்து விளைந்தநாடு
வளம்பெருகுங்கழுகுமலை தன்னில்வாழும்
சதிர்பெருகுமந்தர சடாக்ஷரகுமாரன்
சண்முகவேள்மணந்தவள்ளி சரிதைதன்னை
விதிமுறைநூல் தெரிந்திசைநாடகமாய்ப்பாடி
மேதினியெலாந்துதித்து விளங்கவேண்டி
அதிகமதமொழுகுதந்தி முகத்தோன்றேந்தி
ஐங்கரவிநாயகன்பொன் னடிகாப்பாமே

முருகர் துதி-விருத்தம்

சீருலவும்பங்கயப்பூ மாதுசேர்ந்து
செழித்தவளம் பொருந்திவளர்சிவசம்பாதி
தாருலவுஞானசிவ சுப்ரமண்யர்
தழுவுமலைபுணர்ந்தசவுந் தாவிலாச
வாருலவுகொங்கைமின்னாள் வள்ளியம்மை
மகிமைபெறுநாடகத்தை வளமாய்க்கூற
கலருவுங்கழுகுமலை தன்னில்வாழுங்
காங்கேயதிருபத்தைக் கருத்திலவைப்பாம்

சிவன்-உமையவள் துதி-விருத்தம்

ததிக்குகவும்புண்ணிய சகாயனெங்கள்
சம்பாதிகழுகுமலை தன்னில்வாழுங்
கதிக்கடவுள் குருபர சண்முகக்குமார
கந்தவேள்புணர்ந்தவள்ளிக் கனியைவெள்ளை
மதிக்குநிகர்முகம்விளங்கும் விழியாள்சுந்தர
வையகத்தோர்புகழ்ந்திட நாடகமாய்ப்பாடித்
துதிக்கமதிதிமுடிக்குஞ் சடையோன்ஞான
சுந்தரசம்புவுமையாள் பதந்துதிப்பாம்.

அவையடக்கம்-விருத்தம்,

கஞ்சமலர்த்தடஞ்சூழுஞ் சிவசுப்பாதி
கடவுள்சம்புலிங்கர்மனங் களித்துமேவும்
கொஞ்சுகிளிமொழியகி லாண்டவ்டன்பாலன்
குழந்தைவடிவேலன்மணம் புணர்ந்தமாது
வஞ்சிருறவள்ளி நாடகம்யான்பாட
வையகத்திற்கற்றறிந்தோர் குரவோர்மூத்தோர்
மிஞ்சுதமிழ்ப்புலவரிதிற் பிழைகண்டாலும்
வேலர்சரித்திரமென்றே விளம்புவாரே.

இதுவுமது,

திருவளர்காரணவருடமகரமாதஞ், சிறந்தவெள்ளிரோகணிநட்சத்திரத்தில், கருணைமுருகனைப்பணியுங் கந்தசாமி கவிஞன்புத்திரன் சம்பன்னன்மேன்மை, குருமுனிக்குநிகர்கடிகைமுத்துசாமிகுருவினுபதேசமுந்துவீரப்பேந்த்ரன், பருவமதன்வள்ளி நாடகத்தைநன்றாய்ப் பாடினனே சோபனங்கள்கொண்டாடினனே.

விநாயகர்வருகிற-பொதுவிருத்தம்

சொற்பொருட்குதவுஞான சுந்தரக்குமாரன்மேவும்
அற்புதகவியாம்வள்ளி யம்மைநாடகங்கொண்டாடப்
பொற்பதவரத்தான்மீது பொருந்துமைங்கரத்தன்றெய்வ
கற்பகமுகத்தான்ஒருந்திக் கணபதிதோன்றினாரே.

விநாயகர்வருகிற-தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

நாயகர்தோன்றினரே மந்தர விநாயகர்தோன்றினரே
நாயகர்தோன்றி சகாயனெனவாசன்
நேயன்கணபதி மாயன்மருகனென்னும் (நாயகர்)

ஐந்துமணிபுயத்தான்-விகசித-தொந்திபெருவயற்றான்
தந்தியினதுமுகத்தான் விதிமுச் சந்தியுறஞ்சுகத்தான்
வித்தைவிகசித்தந்தரமிகுமஞ்சுத்தபுளகிதமந்தரகிர்பாகர (நாய)

தேவர்பணியும்வாசன்-கைலைமகா-தேவாளனுநேசன்
பூவினிலுபதேசன் தமிழுக்குநாவக்கந்திடமீசன்
தேவியாம்வல்லபை மேவியவல்லவன்மூவுலகுகனிலுலாவிய
செல்வவி (நாயகர்)

வெள்ளிமலையின்வேடர் உதவிய-வள்ளியின்கதைபாட
தெள்ளியதமிழ்நாட-நமதுயவள்ளிவேலைலங்கேட
வெள்ளைக்கிரணமதி-பிள்ளைக்கிணைமருப்பு-வெள்ளையராடிப்பிள்ளைக்கணபதி (நாய)

குருக்கள்வருகிற-பொதுவிருத்தம்.

காங்கேயன்கழுகுமலைக் கந்தவேளை



யோக்கியமூலப்பொருளாய் வந்தென்னுவி
லுதவுகணபதியெனுநற் பிள்ளையார்க்கு
மாங்கனியும்பொரிகடலை பழந்தேங்காயும்
மாலையுஞ்சந்தன தூபதீபமுங்கை
தாங்கிமெள்ளநடந்தும்தர வேதஞ்சொல்லி
சரவணப்பட்டருஞ் சபையிற்றான்வந்தாரே

குருக்கள்வருகிற-தரு-இ-ம்-பத்தியமாவதி-ஆதிதாளம்

சோதியாம்வெண்மைவிபூதியும்பூசி-சுகந்தபரிமளமூக்குமேசாதியின்முறைபாய்வேதங்களோதுஞ் சரவணப்பட்டருந்தோன்றினர்

வாத்தியமுழங்க-கெய்வேத்தியங்கொண்டுமேடித்த-சோமனுருடுத்தியேசாத்திரம்பொய்யாதோதிரஞ்செயுஞ் சரவணப்பட்டருந்தோன்றினர்

மூஷிகவாகனமோதுகஅஸ்தனும்போதக்கணபதிநாதனுக்கே,காசனைவ்றேசிவபூஜைகள்செய்யுஞ் சரவணப்பட்டருந்தோன்றினர்.

குருக்கள்சொல்-ஸ்லோகம்,

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்சதுர்ப்புஜம் பிரசன்னவதனந்தியாயே சர்வவிக்நோபசாந்தயே.

விநாயகர்-அர்ச்சனை-வசனம்

ஓம் கஜமுகாயநம: ஓம் லம்போதராயநம: ஓம் விகடாயநம: ஓம்விக்னவிநாயகாயநம: ஓம் கணாதிபதயேநம: ஓம் காமாட்சிசுதாயநம: ஓம் சாமளவற்ணாயநம: ஓம் சங்குசக்கிராயநம: ஓம் பிரணவசொரூபாயநம: ஓம் மூலதாரபீடாயநம: ஓம் முத்திசொரூபாயநம: ஓம் விபூதிகாருவித கெந்தபரிமள புஷ்பதூபதீபநைவேத்தியந் தாம்பூலஞ்சமர்ப்பயாமி.

கட்டியக்காரன்வருகிற-பொதுவிருத்தம்.

சட்டமிட்டாடித்தோகை தலைவிரித்திசையாய்கூவி
வட்டமிட்டுலாவும்புள்ளி மயில்மிசையேறுமுன்னங்
கொட்டமிட்டசுரரைவென்ற குமரவேள்கதைக்குநன்றாய்
கட்டுமெட்டாகப்பாடி கட்டியக்காரன்வந்தான்

கட்டியக்காரன்-வருகிற-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்

மந்திரவெண்ணீறணிந்து வல்லபஞ்சொல்லத்துணிந்து
கந்தனைநாடிப்பணிந்து கட்டியக்காரனுந் தோன்றினான்

துலக்கமாய்சிங்காரம் பொட்டிகுந்தரஜாருந்தொட்டு
கலக்கமில்லாதமெட்டு கட்டியக்காரன் தோன்றினான்

ஓங்கியேமீசைமுறுக்கி ஒன்னலரைக்கண்டுறுக்கி
காங்குகச்சையிறுக்கி கட்டியக்காரன் தோன்றினான்

பழமைக்கதைகள்பேசி பழகுமந்திரவாள்வீசி
களபசவ்வாதுபூசிக் கட்டியக்காரன் தோன்றினான்

கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்

விண்ணுபுகழ்கழுகுமலை தன்னில்வாழும் வேலர் சிவசுப்பிரமண்ணியகுமாரன்கந்தன் - புள்ளிமயிலேறிபெருபுவியைக்காக்கும் பூரணசெவ்

வேல்முருகன்பொருந்துகாட்டில்-வெள்ளிமலைச்சிற்றூருக்குடிசெல்வாழும் வேடிவர்களானவர்கள்குன்றக்குறவர்கோமன்-வள்ளியைப் பெயர்படைத்தநம்பிராஜன்வல்லமைபெறுந்திருக்கொலுவில்வருகின்றனே.

வசனம்.

அகோரெப்படியென்றால் இப்படிக்கு கமுகாசலசுப்பிரமணியக்கடவுள் பொருந்தியிருக்கும்காட்டில்வேழ்விமலைசிற்றூரைச்சேர்ந்தகாட்டில்வேடர்வில்லியர்குறவர்களுக்கு இராசாதிராஜனுகிய நம்பியமகாராசன் கொலுவுக்குவருகிறவிதம் எப்படியென்றால்.

நம்பியராசன்வருகிற-தரு-இ-ம-கியால் ஆதிதாளம்.

சோதிவயிரிபக்கோமேதக — யிலங்க
சொர்னமணிமகுடமுடிமின்னிய — துலங்க
தாதுலவும்மார்பில்முத்துத்தாவடம் — குலுங்க
தாசாதிதாசன்போல்நம்பி — ராசனும்வந்தானே
அம்புவில்லுந்தூணிரமும் கொம்புகளும் — யெடுத்து
ஆக்ரமதாகவெகுபராக்ரமும் — கொடுத்து
கும்புபெரும்வேடுவரைக்கூட்டிவலுக் — கொடுத்து
குறிஸிலநம்பிராஜேந்திரன் — விரைவுடன்வந்தானே
பளபளென்னச்சரிகைகையங்கிபட்டைக் — கட்டும்
பதித்தமுத்துக்கடுக்கஞெளும் பரந்துபுக — மெட்டும்
களபமணமபொருந்துத்துகிர்கலவை — மணிப்பட்டும்
காசினியோர்புகழ்நம்பி — ராசனும்வந்தானே
ஓவிபமுத்தொழுகியபற்காவியொளி — தெரிய
உடமுறுஞ்சிங்கமியனென்றுலகுமெங்கு — மறிய
தாவுமயிலேறுசண்முகனுக் — குரிய
தாசன்விகடாசனநம்பி — ராஜனும்வந்தானே
தங்கஜேபங்கிதொட்டுதொங்கல்முரு — கணிந்து
சந்தனஞ்சவ்வாதணிந்துசிந்தூரமு — மணிந்து
மங்களகல்யாணமறைவேதியரைப் — பணிந்து
வாசன்விகவாசகம்பி — ராஜனும்வந்தானே

இராஜன்சொல்-போற்றிவிருத்தம்.

வேதமாய்முடிவாய்ச்சோதி விண்ணவர்னந்தமாகி
நாதமாய்பிந்துமாகிசானிலத்துயிர்களாகி
பூதமுமைந்தாகிப் புலனுமாய்பொறியுமாகி
நீதியுடையநம்பி சேயறுமெவள்ளியைபோற்றி

வள்ளியம்மைநாடகம்.

இராஜமது விருத்தம்.

கனைவென்றிசையோர்கவுங்கட்டியக்காரரெனாய்
சுகமிகிறத்தாள்வால அந்தரிபொன்னுக்கிய
முகவஜிகரத்தாள்நங்கை மோகினிபெண்ணுடனே
மகிமைசேர்சொல்லமுன்பாக மகிழ்த்தினியழைத்துவாராய்

வசனம்.

அகோவாரும் காவல்கட்டியக்கார கமதூசனைபக்கு வனதுகயபத்தினியானிய நங்கைமோகினிப்பெண்ணை அதிசிக்கிரமாக அழைத்துவாரும் பிள்ளாய் (கட்டியக்-வசம்) அப்படியே அழைத்துவருகிறேனையாகவாமி.

கட்டியக்காரன்கங்கைமோகினிக்குச்சொல்-விருத்தம்.

கல்லவதென்றோரிக்காட்டியன் கவிரமதிதலைமுபாட்டு
நல்லுதாமருழ்வாள்கங்கை யதிகவனைப்பணிந்துபோன்றி
வல்லியிலுமைமெய்க்கோ னும்பர்சொலுக்சனைமுபுமென்றான்
மெல்லவேவாருமென்ன விரைந்தவள்வருகின்றாளே.

வசனம்.

சாரணஞ்சாரணம்மாதாயே நமதுஜூராசாதிஇராசனுகிய நம்பியமகாராசன் கொலுவிற்கு தங்களை அதிசிக்கிரமாக அழைத்துவரச்சொன்னுர் வாருமம்மாதாயே (நங்கை வசனம்) நல்லது அப்படியேவருகிறேன் கட்டியம்பிள்ளாய்.

பொது விருத்தம்.

அங்கைசெழும்வண்ணச்சேர்வெள்ளிக்கைமலைசமகியிலுள்ள
சிகைவேடிவர்கள்கோமான்சிறுகுடிநம்பிராசன்
மங்களமன்னவியான்வைசாருதீதகவில்தார
நங்கைமோகினிப்பெண்வந்தாளுடன்தோன்றினளே

நங்கைமோகினிவருகிற-தரு-இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

நங்கைமோகினியும்வந்தாள் — கொலுவினில்
நங்கைமோகினியும்வந்தாள்
மங்களமொழிப்பெண் — சிரோமணிவிசுவாசி (நங்)
பித்திசெல்பகுந்து — நல்லடவனம்
பெண்கருடனைநடை
உச்சிதத்தமிழ்பாடி — உத்தமிகலந்தோட (நங்)
குந்தளமேவாலேயிலங்க — முத்துமணிக்
கோர்வைத்தாவடங்குலுங்க — முத்துமணிக்
சுந்தரமதிமுகமு — காசிரத்னவடங்குலங்க (நங்)
அன்னம்போல்நடையுந்தி — மங்கைக்
கரிபோல்மொழிசிந்தி
கன்னிமாருடன்கொஞ்சிக் — சுகமாதிபுஞ்சி (நங்)
கஸ்தூரிமஞ்சள்பூசி — மணிக்கடக
வைரவளையல்சக்கிவீசி
வில்லதரமைகம்பி — விரைந்துசுகாசி (நங்)

| | |
|---|---|
| கன்னுபிமார்க்குபகாரி | சித்தூர்நம்பி |
| நாசன்மேவியபாரி | |
| புண்யபூதிக்காரி | புத்திலதிகாரி (௩௩) |

நங்கைமோகினிசொல்-விருத்தம்.

வேடர்குன்றவர்கோமானே வெள்ளியங்கிரிவாழ்வேந்தே
ஆடவர்க்கரசேஎன்மேலநமைக்காதலனேகேளீர்
கூடியுந்நக்கேயோர் குழந்தையில்லாதபாக்யந்
தேடியும்பலனொன்றில்லை செய்தவக்குறையோமன்னா

வசனம். சரணஞ்சரணமென் பிராணநாதா தாங்கள்என்னைக்கொலுவிற்கு வரும்படிசெய்தகாரணமென்ன நல்லது இப்போது நமதுகுறைதீரும்பொருட்டு ஒருபெண்குழந்தை யில்லாதபாக்கியம்-ஒருபாக்கியமோ என்னசெய்வோமபிராணநாதா.

நங்கைமோகினி புலம்பல்-கண்ணிகள்

இம்-முகாரி-தாளம்-துருவம்

| | |
|---|---|
| விள்ளுபுகழ்நாட்டுவோரேஎன்னைமேவுகின்ற | வேடவரே |
| வெள்ளிவரைதன்னவரோஎன்னைமேவுகின்ற | மன்னவரோ |
| எப்படிவாழ்ந்தும்பெண்பிள்ளைநமக்கில்லையோஇதென்னம் | கொல்லே |
| கைப்பிடித்தவேளைகாணேபெண்கண்மணியில்லாத் | தேனே |
| வேலவனன்னூர்சேர்ந்தும் நான்வெள்ளியங்கிரியில் | வாழ்ந்தும் |
| பாலனுமில்லாதிருக்கஐயோ பண்டிவிதிப்படி | தானே |
| சாத்தகன்னிமாரேதாயே மலைச்சாத்தாவேதம் | பிரானே |
| புத்திரியைவேண்டிநாங்கள்இப்போபுலம்புவதுங்கேட் | கொணுதோ |
| வல்லமைத்தெய்வமேகேளீர் நல்லவனப்பேச்சி | பத்ரகாளி |
| இவ்விலொருபெண்குழந்தை இப்போதெங்களுக்கரு | ளொணுதோ |
| வைபகததுமிருகங்களை நாங்கள்வாய்க்கட்டினதோஷந் | தானோ |
| கைபனைத்துழைத்தபிடப்பெண்கண்மணியில்லாத் | தேனோ |
| தென்குறிஞ்சிவேலவனைவளர்திருவருணைக் | காவலனே |
| அன்புடனோர்பெண்குழந்தைஎனக்கருணமயாயரு | ளொணுதோ |

பொது-சந்தவிருத்தம்,

சித்ரநங்கைமோகினிப்பெண் சிந்தைகூர்ந்து
தெளிந்தும்பிரசனுமொழிந்தேயோர்பெண்
புத்ரியில்லைபினிஎமென் செய்வோமென்று
புலம்புவதைமனதில்நன்றாய் பொறுந்தக்கேட்டு
மெத்தமனமகிழ்ந்து தர்மதெய்வமாக
விசையவெள்ளிமலையினெட்டுதிசையைக்காக்குஞ்
சத்தகன்னிமார்கணங்கைதுயரந்தீர்க்கத்
தாயெனவேதயவாகத் தாம்வந்தாரே



வசனம்.

இந்தப்பிரகாரம் நம்பிராசனிடத்தில் நங்கைமோகினிப்பெண்குழந்தையில்லையென்றுபுலம்பும்போது அவ்விடம்வெள்ளிமலையில்வாசஞ்செய்யும் சத்தகன்னிகள்வருகிறவிதங்காண்க.

சத்தகன்னிகள்-வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி

ஆதிதாளம்.

| | |
|---|---|
| மைலைமலையிற்பூங் | காவிலெழுந்து |
| கருணைபொழியுந்தெய்வ | கன்னியாமனத் |
| தயவுபொருந்துந்தெய்வ | மின்னார்கள்மலை |
| சத்தகன்னியர்வந்துதோன் | றினரே |
| நங்கைமோகினிப்பெண் | குழந்தையைவேண்டி |
| நம்பிராசனுடன் | புலம்பியப்போது |
| சங்கைப்பொருந்துந்தெய்வ | மங்கையரெனுமலை |
| சத்தகன்னியர்வந்துதோன் | றினரே |

சத்தகன்னியர்-விருத்தம்

சேர்ந்தகன்னிமார்கள்வந்துசேர்வைகாட்டி
சித்ரநங்கைமோகினியைப்பார்த்துச்சொல்வார்
கூர்ந்துநமைகுறித்துமனம்வருந்தியேபெண்
குழந்தையில்லையென்றுசொன்னகுறையைக்கேட்டு
சார்ந்துனதுயிருப்பிடத்தைத்தேடிவந்தோம்
சலியாதேமெலியாதேசாற்றக்கேளு
போந்துனக்குயிசர்தன்கற்பனையினாலே
புனத்திலொருபெண்குழந்தையிருக்குந்தானே

இதுவுமது

தானேநின்வயிற்றினிற்பெண்கருவேயில்லை
சலியாதேஆகிவிதிப்படியாலந்த
கானநுழைந்திங்களிமேலுற
காவனத்தால்கடந்தசேதிக்காட்டுப்பூளி
மானேயோர்பெண்குழந்தைமணிப்பொற்போற்று
வளர்வுங்கையாலெடுத்துவளர்ப்பாயென்றே
ஆனதெய்வமங்கையர்கருணைதந்துப்போக
அமிர்தநங்கைமகிழ்ந்திருக்கின்றனரோ

பொது வசனம்

இந்தப்பிரகாரம் தேவகன்னிகள்நங்கைமோகினிக்குப் பெண்குழந்தைவரும்விதத்தைச்சொல்லி வெள்ளியங்கிரியில்சென்றபின் அவ்விடம் வனத்தில் கலைக்கோட்டுமகாமுனிவருகிறவிதங்காண்க.

கலைக்கோட்டுமகாமுனிவருகிற-விருத்தம்

தேகமெல்லாந்தவளவெண்ணீறுபூசிக்காதில்
திகழ்குழைகள்பூண்டுசடைமுடியுங்கொண்டு
வாருபெறுங்[illegible]இரமருங்கிற்சேர்த்து
மந்திரத்தாரட்டிபவொட்டியாணம்பூண்டு

ஆகமமறைசற்பமுறையதுதானுண்டு
அதிகமறைநான்குமுணர்ந்தருள்சேர்ஞான
யோககலைக்கோட்டுமுனிபிரம்மைக்கையில்
ஊன்றினுன்றிருக்காவிற்றேன்றினுனே.

கலைக்கோட்டுமகாமுனிவர்வருகிற-தரு-இ-ம்-மாஞ்சி ஏகதாளம்
கலைக்கோட்டுமுனிவர்வந்தார்-தெண்டகாருண்ய
கலைக்கோட்டுமுனிவர்வந்தார்
முலைக்கோட்டுமடச்சையர் மோகவலையிற்சிக்கி
துலைக்காட்டிலிருந்து மலைக்காட்டுவனந்தனில் கலை
மார்பில்நக்ஷத்ராக்ஷசங்கு லுக்க-மையிற்செப
மணித்தாவடமுந்துலங்க
பேர்பெறும்புலிதேசாலும்பிடித்தமாத்திரைக்கோலும்
சீர்பெறும்பூணூலுஞ் சேர்ந்தகிர்ணயத்தாலும் கலை
நற்சீயுற்றிருக்கொம்புங்கலைமுகமும்
ஒங்குங்கையினிற்பிரப்பும்
மச்சிரமான்றேகமானிரூபமாகவும்
இச்சையுடனேகாவிலிருந்துதவாசஞ்செய்யுங் கலை

விருத்தம்,

தேனிரைக்கும்வெள்ளிமலைவஞ்சிகாட்டி
செழித்தவெழில்மலைக்குறிஞ்சிநிலத்திலேதான்
கானகத்திலிருந்துகதிபுசித்துலாவிக்
கழிபெறுகாயாசதவவேடங்கொண்டு
மோனமுற்றகலைக்கோட்டுமுனிவரங்கு
முற்கதையின்படியாலேமுறையாய்வேத
ஞானநிட்டைதனைநோக்கியிருந்திடாது
நண்ணினுர்மோகமதையெண்ணினுரே

பொது-விருத்தம்.

கின்னயமுனிவரிங்குக்கலைதவிர்ந்துருகிவாடி
கன்னியராசாபாசங்கருத்திலிலிருக்கும்போது
தன்னிளஞ்சோலைதன்னிற்றனிற்றெருபுள்ளிமானும்
நன்னயகலையைத்தேடிநாடியுமனந்தன்றே.

வசனம்,

இந்தப்பிரகாரம் வெள்ளிமலைச்சாரலில் ஒருகந்தவனத்தில் தவஞ்செய்யவந்தகலைக்கோட்டுமகாமுனிவர்காமவிகாரங்கொண்டிருக்கும்போது அவ்விடமொருபுள்ளிமான் கலைமானைத்தேடிவருகிறவிதங்காண்க,

மான்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்
மானும்வந்தே-புள்ளிமானுவந்தே

காவிருந்தபூமலிந்த-காவனந்தனிற்சிறக்க மானும்
மெய்யுறவாடி-மேவியேகூடி கைவிடாதோடிக்-கலைவனைத்தேடிமானுவனந்தனின்மேவிலாவியுலாவி-கனிந்துசொற்றேவி கலைதனைதாவி,பொன்னிறமானின்-புகழ்தருமேனி-உன்னியவானினுயர்வுறக்காவில்



விருத்தம்,

விளைவுறுஞ்செந்தேன்வாய்ந்தமலரோடூர்ந்து
விளையிருந்தவேள்விமலைக்கருகேநின்று
குளுந்தாசக்கனிபுசித்தாயல்புரிந்துக்
கொண்டுகலைக்கோட்டுமுனிகண்டுமானைத்
தழுவிநெற்பமிராத்தங்காதென்ற
கதைதனையினுலேகெர்பந்தாங்கிமானும்
பிறைமகற்றாய்வேதவிதிப்படிபாலந்தோர்
பெண்குழந்தையீன்றிடவும்பொருண்டாச்சே

பொது-விருத்தம்,

சீருண்டமகளையீன்றுமானும்
திருப்பவும்போராமல்வனமோடிப்போக
பாருண்டாகியபூமாதேவித்தாங்கிப்
பாதுகாப்பின்னையப்பாதுகாக்கும்போது
காருண்டாம்வேள்வியலைக்குறவர்கூடி
கானில்வள்ளிக்கிழங்குவெட்டக்குதித்தெல்லோரும்
சேருண்டாயிந்தவனந்தன்னைத்தேடி
கிளைகிளையாய்க்குறத்திகுறவர்கள்வந்தாரே

வசனம்

அதோகெப்படியென்றால் கானகத்தில்வந்த புள்ளிமானைக்கலைக்கோட்டுமகாமுனிவர் காமவிகாரத்தால்சேர்ந்துசென்றபின் அந்தமான்வயிற்றிலுதித்தப் பெண்குழந்தை அவ்விடமிருக்கும்போது அங்கே வெள்ளிமலைக்குறவர் குறத்திகள்வள்ளிக்கிழங்குவெட்டவருகிறவிதங்காண்க,

குறத்திகள் குறவர்வருகிற-கண்ணிகள்-இ-ம்-குறவஞ்சி-ஆதிதாளம்
குறத்திகள் குன்றவர்கானக்குறவர்களுங்கூடி மன்னு
கூர்ந்துபலகிழங்குவெட்டச்சேர்ந்துவனந்தேடி
உறவுசொல்லிக்கூடிக்கூடியொருவர்க்கொருவர்பேசி துடர்ந்
தேடியோடிக்கூடையுங்கொண்டிகந்துகளைவீசி
குப்பல்குப்பலாய்கிழங்கினைக்கிறுக்கிவீசிலேகின்று கமழு
ருக்குக்கடபுகுந்தவிடாதனைதவிட்டுவிட்டங்கேதன்று
அப்பாலோடிகிழங்கெல்லாம்வாமதிரிக்கிரமாய்வாரும் பைய
அப்போதுச்சனையேபிக்கூடியேவந்துசேரும்
சிறுமிளங்கும்பிடிகிளங்குசீனிக்கிளங்கெடுத்து வேடர்
சேகரித்தாரவரவர்கள்கூடைகளினில்வீசித்து
வரிசையோடுபலகிளங்குகளாய்த்துக்கொன்றுகொண்டார் கொண்டு
வரும்போதுவனத்தனிலேமகளைதனைக்கண்டார்
அதிசயமாய்வனத்தில்பிள்ளையழுங்குரலுமேது அங்கே
அடித்தடித்துவாருங்கள்காயத்தியம்பிப்போது
ஏதுவகையோவனத்திற்பிள்ளைமீன்றதும்யாரோ இப்போ
இக்குழந்தையைப்பெற்றுவிட்டுடங்கேகினதெவ்வாறோ
சிறும்புயானைகுழச்சொக்கநம்வனத்து ஒரு
விதுழந்தைப்பழுமிழுதுபெறுவையோரனித்து

கூழுமணியோசைபோலுங்காலைப்பாருஞ்சனங்காள் இந்த
குழந்தையின்றிடவடிவு நங்களைக் கூர்ந்துபாருமிங்காள்
என்னகாரணமோவிதுயாதோதெரியாதே இப்போ
இந்தவனத்திற்குழந்தைவந்ததுவந்ததே
மின்னலைசையோகுழந்தையுந்தவேனில்பொருக்காமல் பின்னும்
வீரிட்டுவிரிட்டழுகுதேரிட்டுப்பாராமல்
நமதிக்கவதிசயத்தைநம்பிராசனிடத்தில் இப்போ
நலமுடனெல்லோருங் கூடிச்சொல்லுவோமிட்சணத்தில்
தாமதமில்லாதெல்லோருந்தலைச்சுமையைபெடுங்கள் நல்ல
தருமவானும்நம்பிராசன்முன்னமேவந்திடுங்கள்

குறவர்சொல்-விருத்தம்,

நாட்டியப்புகழ்சேர்நம்பிராசனேமிருகஞ்சூழ்ந்த
காட்டிலோரதிகமானகாரணங்கண்டுவந்தோம்
கேட்டிடவேண்டும்வள்ளிக்கொடியிற்பெண்குழந்தையென்று
தேட்டமாய்க்கூவுதையாதெரிந்திடப்பார்க்கவாரும்

வசனம்,

அகோவாரும் இராசாதிஇராசனுகியநம்பிமகாராசனே சரணஞ்சரணம் இப்போதுவனத்திற்கிழங்கெடுக்கப்போனவிடத்தில் வள்ளிக்கிழங்கெடுத்தபள்ளத்தில் சூரியன்போலஒருபெண்பிள்ளையழுதுகொண்டிருக்குது அந்தவதிசயத்தைத்தாங்கள்வந்து பார்க்கலாமகாராசனே

போது-விருத்தம்,

புதுமைகாணவர்கள்காலிற்போய்வந்துசொல்லக்கேட்டு
அதிசயம்பார்ப்போமென்று அன்புடன்நம்பிராசன்
ரதியெனுமொயிலொய்யாரநங்கைமோகினியுங்கூட
மதிநிகர்குழந்தைகூவுமவழித்தேடிவாரார

வசனம்,

இந்தப்பிரகாரம்குறவர்சொல்லக்கேட்டுநம்பிமகாராசனும்நங்கைமோகினியும்வனத்தில்வருகிறவிதமெப்படியென்றால்,

இராசன்-வனம்போகும்-நொண்டிச்சிந்து
இ-ம்-புன்னுகவராளி-அடதாளம்.

நந்தார்வனந்தேடி நம்பி
ராசனுந்தான்நங்கைமோகினியாம்
மடந்தையுடன்கூடி வாசன்
மல்லிகைமுல்லைமலர்சூடி
குழந்தையிருக்குமிடக் தன்னைக்
கூறென்றுகுறவர்கூட்டமுடன்
தெளிந்துநலம்பேசி நல்வி
சேஷந்தாரிநகைவீசி
அந்தநலம்பார்த்து வெகு
அக்கரையாகாட்டுக்கையிலே
விந்தைமணிபோல பிள்ளை
வீரிட்டசத்தமுஞ்சேர்ட்டதே



வள்ளிக்கொடியிற்பெற்ற பெண்
மதலைந்தாவிளைக்காதிலுற்றார்
உள்ளமகிழ்ந்துகொண்டார் ஆ! சே!
உற்றுகுழந்தையைவந்துகண்டார்

இராசன்சொல்-விருத்தம்,

வந்தநம்பிராசேந்திரன்வனத்திலுற்ற
மதலைதனைக்கண்டுமனமகிழ்ச்சிகூர்ந்து
கந்தமலர்குழலாள்நாககைமாலே
கந்தகையேமின்னரசேகட்டுச்செய்கை
எந்தவகையோவோர்பெண்குழந்தைதானும்
இசைந்தமணிகுரல்கூவுதிந்தாபாரு
அந்தவுநமக்கெனவேகுனிந்தெடுத்துத்
தாங்கினான்தங்கைகையில்வாங்கினாளே

நங்கைமோகினிச்சொல்-அங்வற்பா-இ-ம்-மோகனம்
மன்னனேகேளாய்மாவனத்தனனில்
முன்னமேயாமுமமயமயமதாக
குறித்துமேயோர்பெண்குழந்தையைவேண்டி
வரந்தமாய்ச்சிவனருள்வடிவேலனையுங்
காவலாத்துந்தகன்னிமார்தன்னையுந்
தாவியேவருந்திதாளினைப்பணிந்து
பேருடனேழாண்பிள்ளைகளிருக்க
கூறியதனைப்பெண்குழந்தைதந்திடுவாய்
என்னநாம்புலம்பவெனமொருகேட்டு
தன்விமிலநமக்காய்ச்சத்தகன்னியர்கள்
வந்துதானன்றுவாசுமையைத்திர்த்து
இந்தமாவனத்திலீஸ்வரன்செயலால்
மான்வயிற்றினிற்பெணமதலையுண்டாக
பான்மையாய்நீங்கள்பரிவுடன்காண்பீர்
எடுத்தகைவளர்ம்பீரெனச்சகன்னிமார்கள்
கொடுத்திடும்வரங்கைகொண்டாவிட்டே
பணியேநமக்குப்பிரமகற்பனையால்
வாணிடம்பவிசதவள்ளியின்கொடியில்
காரணமாகக்கன்மணிக்குழந்தையைப்
பூரணமாகவேபொருந்தவேகண்டோம்
ஆனதால்நமக்குஅரனருட்குழந்தை
தானிஜமென்றுதழுவியேயெடுத்தார்

பொது-விருத்தம்,

ஆங்கம்பூரித்தவனாந்தங்கொண்டு
அரகாசிவாசிவாவென்றன்புகூர்ந்து
மங்களஞ்சேர்வள்ளிமலைநம்பிராசன்
வனத்தினிலிப்படிகுழந்தைவாய்த்ததாலே

எங்களுக்குமிகவொருவரில்லையென்று
இலவதுமணிபோலிருக்குமகுழந்தைதன்னைத்
தூங்கவென்றேமணங்கமழுந்தொட்டிலில்
தாங்கினுன்கதிக்செல்வமேமங்கிறனே
குழந்தைதன்னைப்பெற்றெடுத்துக்கொஞ்சி
கொங்கையமுதூட்டியெங்கள்குலமும்வாழத்
தழைந்துவிளங்கிடுதலைக்கிளியேமானே
தங்கமேதிரவியமேதருவமேதேனே
வழக்குகின்றவர்குலக்கொழுந்தேகோல
மயிலேயென்றதழுத்தக்கமானுங்கோனுஞ்
செழித்தவழிகூடிவள்ளிமலைசூழ்கின்ற
சிற்றூரில்வந்துநன்றாய்ச்செழிக்கின்றாரே

வசனம்,

அகோதெப்படியென்றால் இந்தப்படிக்குநம்பிராசனுங்கங்கைமோகினியுமனத்திற்போம் வள்ளிக்கொடியிலிருந்த பெண்குழந்தையைக்கண்டெடுத்து தங்கள்சிற்றூருக்குள்வந்துசேர்ந்துகுழந்தையைவளர்க்கிறவிதங்காணக,

இதுவாது-விருத்தம்,

பவளமதியிதழ்கொண்டதனர்க்கிளிபோற்பேசும்
பந்தாமலைவஞ்சியிடைநங்கைமாதும்
நவமணியின்கிரீடநம்பிராசன்றானும்
நன்மையொடுமனதிலெண்ணிமகிழ்ந்தக்காலில்
தவமுயலுந்தானதர்மமன்றாய்ச்செய்து
சார்ந்தவள்ளிக்கொடியதனிற்கைத்ததாலே
குவிமுலைபாடனக்குவள்ளியெனப்பேரிட்டுக்
கூட்டுவோர்தொட்டிலிற்றாலாட்டுவாரே

கங்கைமோகினிகுழந்தைக்கு தாலாட்டுதல்
கண்ணிகள்-இ.ம.நீலாம்புரி

ஆரிவரோ-ஆரிவரோ-ஆரிவரோ-ஆரிவரோ

மானின்றகண்மணியேவஞ்சியேநங்கப்பணியே
தேனொழிகிப்பிறைவெள்ளமகேயோவியமே ஆரி
வள்ளிக்கொடியிலேவந்துதித்தபெண்வடிவே
விள்ளும்பசுங்கிளியேவிளைந்தசெந்தேன்மொழியே ஆரி
சோதிவைடூரியமேகொற்றக்களஞ்சியமே
மாதேனக்குயிலேமாகரமேபூமியிலே ஆரு
தவழ்விமலைக்கரசேமின்னேயென்கண்மணியே
ரோழ்விலாப்பாக்கியமேசந்தானசிலாக்கியமே ஆரி
வரிசையாய்யெங்களுக்குவாய்த்தமணிவிளக்கே
இருவிலம்புகழ்ந்தகலைனேஎன்மனதிற்குகந்தபெண்ணே ஆரி
காவனத்திலேசிறந்தகற்பனைபாயுற்பனமாய்
த.வவுமேவந்த[illegible]க்குகந்தகண்ணே ஆரி



கந்தவேள்கிருபையினால்கன்னிமார்தன்னருளால்
வந்தாருநற்கனியேமகளேநீகண்வளராய் ஆரி

பொது-விருத்தம்.

தாலாட்டிமதலைதனைகாளோர்வண்ணத்
தான்வளர்த்துசந்தனசவ்வாதுவாசம்
நீராட்டமைவிழுக்குமையுந்தீட்டி
நேரிசைவெண்சங்குமணிக்கோர்வைபூட்டி
பாராட்டிவிளையாட்டுக்கூர்மைநாட்டி
பழுதுமொருமுதில்நடைப்பாகங்காட்டி
சீராட்டிக்காதுகுத்திப்பஞ்சுஞ்சேர்த்து
சேலையிட்டுத்தக்கையிடச்செய்கின்றாரே

இதுவுமது-விருத்தம்

தக்கையிட்டுத்தளாவிளக்கெண்ணையிட்டு
தங்கநிறமினைசந்தவள்ளைத்தண்டுபோல
அக்கரையாயக்காதுவளர்த்தன்புகூர்ந்து
அருமையொடும்மணியாகக்குழையும்பூட்டி
எமக்குழலையெங்கள்வளர்த்தகாயேவேலர
மலரடியைமறவாதமங்கைப்பெண்ணே
மைக்கிளியேஎன்றுசகலருங்கொண்டாடிக்
கண்டிடக்கண்டிடவடிவங்காட்டினாளே

பொது-கண்ணிகள்-இ-ம-மத்தியமாவதி
ஆதிதாளம்,

வள்ளியெனுஞ்சிறியபிள்ளைசிறந்து காலஞ்
வயதில்வளர்ந்துநிரிந்த
பிள்ளைக்கிளிபோற்பேசுமெள்ளயிருகை விச்சம்
பெண்ணின்பலைம்பொருந்த
சந்திரமுகமுஞ்சிறுமணமுங்குழு கங்கையுஞ்
சாந்தகன்மனமும்
கந்தமலர்க்குழலுஞ்சுழல்விழியி னழகுங்
கனியுமகிர்கருணையும்
வஞ்சியிடையுங்கன்னிவாழைத்துடை யுங்கோல்
வர்ணச்சரிகைத்துகிலும்
பஞ்சுபோல்மெல்லடியுமபாதச்செந்தா மரையும்
பாடகத்தண்டையொலியும்
அருமையினதுகேற்றுரியபாசசம் போம்
அழகுந்துலங்கபிறி
பருவம்வயதெட்டாகியுருவந்துலங்க மங்கையும்
பருவகுருக்குநீதறி
மின்னார்களுடன்கூடவள்ளியும்பாங்கி மருப்
வீதியில்விளையாட
தென்னம்மகிழ்வாதெய்வக்கந்தியேயிரி திரையோ

செல்விரென்றுரையாட
இப்புவிதனிலிந்தவடிவழகினைப் போல
எங்கெங்குங்கிடையாதென்பார்
ஒப்பிணைவள்ளியின்றசெப்புமொழியுட் கொண்டு
ஒழுங்கிவணங்குவீரென்பார்
இந்தப்படியெல்லோருமங்கநுபசாரஞ் சொல்ல
எந்நிறைவள்ளிமகிழ்ந்தாள்
தங்கைகம்பிரானுமங்கைமோகினிப் பெண்ணுங்
தங்களில்மெத்தப்புகழ்ந்தார்

இதுவுமது-விருத்தம்.

அருமையுடன்தாய்தகப்பன்புகழ்ந்துவாழ்த்த
அண்ணமார்மனமகிழ்ந்தேயன்பாய்க்கூற
உரிமையாய்பின்னுமவருள்ளோரும்வாழ்த்த
உத்தமரெவரும்போற்றவுநவோரேத்த
இருவிலமுமபுகழுமிந்தராணியைப்போல்வள்ளி
யிசைந்தசொற்னக்கிளிபோலுமயிலைப்போலும்
பருவமுறும்பக்குவமாயமைந்தமாது
பாங்கிமாருடன்கூடியிருக்கின்றாளே

இதுவுமது-வேறு.

இருக்குநாளிலேவள்ளிக்கியற்றுணையண்ணமாரும்
பெருகியகுறவரோடேகமோரிடத்திற்கூடி
மருவுலாவியபூஞ்சோலைவனத்தினிற்றினைவிளைக்க
உருக்கமாய்நினைத்தெல்லோருமுவமையாயிருக்கின்றாரே

விருத்தம்.

விளங்கியகுறவரென்னும்வேடர்சென்றவர்கள்கூடி
களைந்திடவிளைப்புனத்திற்றகுந்தினைவிளைக்கவேண்டி
கிளப்பொடுநினைமாக்கொண்டுபூசைசெய்வடிவேலர்க்கு
வணங்கியதிசையைநோக்கிவந்துபூசைகள்செய்தாரே

இதுவுமது-விருத்தம்,

பூசைகள்செய்துவேண்டிப்புனக்குறவர்களுங்கூடி
வாரமாய்வனத்திற்சென்றுவலமையல்மினத்தைசக்கண்டு
விசிமண்வெட்டிக்கொண்டுவெட்டிமுப்புழுதிசெய்து
பேசியேநல்லநாளிற்பெருந்தினைவிதைக்கின்றாரோ

சந்தவிருத்தம்,

பழுதுபார்த்துத்தினைவிதைப்பொட்டமையத்
தழுவிக்கையாலெடுத்துத்தெய்வங்களைத்
தொழுதுநல்லமுதற்றரைப்புன்னையிற்
குறவர்கூடித்தினைவிதைப்பார்களே

குறவர்-தினைவிதைக்குங்-கண்ணிகள்,
இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்,

வரைக்குட்வசந்தினைவிதைக்கக்கனாவாழ்த்திபேந்தா
கன்னத்துயாகள்ளிலைமைபாக்கல்லினத்தில்வெள்ளிக்



விளைக்கவேவிளையளந்திடப்புட்டிகிளாக்கவேமகிழ்குளிர்ந்திடவிடைவன்
யபதம்போற்றியேவிளைக்கடகந்தலையி லேற்றியேல்
சுருக்கும்வனத்தில்மிஞ்சியேநாலுகுறக்கமுடைய புஞ்சையே
சொர்ன்னம்விளையுங்கிழலைபில்நன்னயமினா தன்னையே
காத்திருவள்ளிகிலத்திற்றாவிவிளைத்தனர்தெய்வ வரத்தில்
குந்திமார்தன்கிருபையால்முனைத்துன்னியெழுந்து வளர்ந்ததே

பொது-விருத்தம்,

வனதெய்வகன்னிமார்கள்வரத்தருங்கிருபையாலுந்
தினமழைபொழியக்கண்டுதினமஞ்சள்முளையுமகொண்டு
இனிமைசேர்பயிர்வளர்ந்துசெழித்திடும்வனத்தைப்பார்த்து
மனமகிழ்வோடுவென்றிமான்மறைசூழ்ந்ததென்றே

வசனம், இந்தப்பிரகாரம்வேடர்குறவர்கள்தினைவிளைத்துபயிர்களா
கியவுடன் அந்தபயிரையழிக்கும்பொருட்டு பலமிருகம்வருகிறவிதமெப்
படியென்றால்.

மிருகங்கள்வருகிற-தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்
மிருகமனேகம்வந்ததே-தினைப்புனத்தில
மிருகமனேகம்வந்ததே
பெரியோர்கள்சூழ்வனத்திலரிளைசந்தினைப்புனத்தில்
பருவப்பயிரிருக்கசொரூபங்கொண்டுசென்று மிரு
இடசாரிவலசாரியாகப்பாய்ந்துசீறி
இடிபோல்முழங்கிப்பாரிக்கடிவாய்புலிகள்மீறி மிரு
புத்துநருக்காடிபுலிவாய்மிகப்பெருகி
தத்தித்தத்திக்குதித்துதனிலாவதுமுழக்கி மிரு
வெடிலாவதுமுறுக்கிவெருவாயினைபெருக்கி
படிமேற்கற்றிகெருக்கிபயிரைத்தின்றுசெருக்கி மிரு

இதுவுமது-விருத்தம்,

மீறியேவனத்தில்வாளிமிருகங்களனேகஞ்சூழ்ந்து
சீறியேமுழங்கும்போதுதெரிந்துவேடுவர்கள்கூடிக்
கூடியவேட்டைக்கொம்புகுறித்தபாவில்லம்பேந்தி
பேரிகைமுழக்கவேட்டைபெருக்கமாயாடுவாரே

குறவர்-வேட்டையாடுகிற-தரு-இ-ம்-அடாணா-அடதாளம்
வேட்டையாடினரே-குறவர்கூடி
வேட்டையாடினரே
கோட்டில்வளைதடிகளிட்டியெடுத்துக்குப்பு
கூட்டிபெருந்துவெகுகாட்டைவளைத்துசுற்றி வேட்டை
பேச்சறகலைபிடிக்ககூட்சவலையெடுத்துப்
பாச்சல்புலியைவெட்டும்வீச்சரிவாளுந்தொட்டு வேட்டை
அம்பும்வில்லெடுத்துக்கும்புகுப்பாகக்கூடி
ஆனைவரும்வந்துவெகுசமர்த்துகள்பேசியே வேட்டை
காட்டைக்கலைத்துவிட்டுவேட்டைமிருகங்களை
பிட்டியாலேவிழத்தாட்டிவெற்றியாகவே வேட்டை

மீறுந்திணைப்பயிரைச்சிறியுளப்பவந்த
பாரமிருகங்களைக்கூறுபடவேகுத்தி வேட்டை

விருத்தம்,

வேட்டைகளாடிவந்துவெற்றியாயிருக்குநாளில்
வாட்டமில்லாமலோங்கிவளர்திணைப்பொதியாய்க்கொண்டு
கூட்டிமேயகதிர்கள்வாங்கிக்குலைகள்ளியன்னங்கோதி
காட்டமாய்மணிபிடித்துநலமுறவிளைவுண்டாச்சே

இதுவுமது,

மணிபிடிவிளைவுங்கண்டுமகிழ்ந்தண்ணமார்கள்சென்று
இணக்கமாய்நம்பிராசனிடத்தினில்வந்துபோற்றி
குணத்தொடுதிணைப்புனத்திற்குடிகொண்டுகாவலாகப்
பணித்தொடிவள்ளிசென்றுற்பலனெனப்பகர்கின்றாரே

வசனம்,

இந்தப்படிமிருகங்களை வேடரவேட்டையாடிவந்தபிறகுதிணைப்பயிர்களுக்குப்பட்சிவராமல வள்ளியம்மனைதிணைக்காக்கும்படியேழுபேர அண்ணமார்தகப்பனுகிய நம்பிராசனுக்குச்சொல்லுகிறவிதங்காணைக,

அண்ணமார் விருத்தம்.

பூங்குயில்மணிப்புறுவும்புள்ளிதமயில்களன்னந்
தூங்குந்தூங்கணத்தாண்காகந்தாய்திணைக்கதிர்கள்கொய்ய
ஒக்கியேவரவொட்டாமலுரிமையாய்க்காவலாக
மாங்குயிலனையதங்கைவள்ளியையனுப்பகன்றே

வசனம்,

அகோவாரும் எங்கள்தந்தையாகிய நம்பியமகாராசனேசரணஞ்சரணம் இப்போது நம்விளைத்ததிணைப்புனத்தில் பட்சிமிருகசாதிகளதை அழிக்காமல்காவலிருக்க எங்கள்தங்கையாகியவள்ளியம்மையைதிணைப்புனக்காவல்காக்கச்செய்யவேண்டும் எங்கள்தந்தையே,

அரசனுக்கும் நங்கைபுத்திரர்களுக்கும்-தர்க்கம் தரு,

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்,

இராசன்-நங்கைசொல்தரு

புனத்திலில்வள்ளியைதிணைக்கதிர்காவென்ற மைந்தரே-சும்மா
போவென்றுசொல்லவும்பொருந்துமோவென்மனை மைந்தரே

புத்திரர்சொல்-தரு,

மனத்தொடுதிணைப்புனம்வள்ளிகாக்கிலையென்றால் தந்தைதாயே-நாம்
வருத்தப்பட்டதுஞ்சும்மாவிர்த்தமாய்ப்போகாதோ தந்தைதாயே

இராசன்-நங்கைசொல்-தரு,

கண்மணியாகியபெண்மணிவள்ளித்தாய் மைந்தரே-திணைக்
காக்கப்போகச்சொன்னுலேற்குமோவுலகுக்கு மைந்தரே

புத்திரர்சொல்-தரு,

தன்மையாய்திணைக்கதிர்தனைகாக்கிலையென்றால் தந்தைதாயே-நாம்
சதிராய்வேதனைப்பட்டகதிரைக்கிளிகொய்யாதோ தந்தைதாயே

இராசன்நங்கைசொல்-தரு,

கைவிட்டுப்பிரியாதகண்மணிவள்ளியை மைந்தரே-திணைக்



காவலுக்கவளைநாம்போவென்றுசொல்வோமோ மைந்தரே

புத்திரர்சொல்-தரு,

மையிட்டவிழிக்குறவள்ளிக்காக்கிலையென்றால் தந்தைதாயே.உங்கள்
மக்களேழுபேருக்குமஅக்கரை தானென்ன தந்தைதாயே

இராசன்-நங்கைவள்ளிக்குச்சொல்-வேறுதரு,

கைக்கிளியேயெங்கள்தனமணியேவள்ளித்தாயே, திணைக்
காவல்காக்கவுநீமேவசம்மதிப்பாய் தாயே
மைக்குழலேயெந்தன்பொற்கொடியேவள்ளிமானே அண்ணை
மார்களுரைத்திடுங்காரியங்கேளடி தேனே
அண்ணமார்வந்திங்குசொன்னசொற்றவறுமற்றுனே காட்டில்
அருந்திணைப்புனத்திற்குவருந்தாமல்போவள்ளி மானே
சொன்னசொல்லைமனதிலிருத்தமறவாமல் நீயே
அன்னமேதோழியர்தன்னுடன்போய்வரு வாயே

இராசனும்-நங்கைச்சொல்-விருத்தம்.

மாங்குயின்மொழியேதேனேவள்ளியேமகளேமானே
பாங்கிமார்தன்னைக்கூட்டிபண்புடன்றுணையாய்கொண்டு
பூங்குயில்கிளிகொய்யாமற்புகழ்திணைப்புனத்தைநன்றாய்
திங்குவாராமற்காத்துஜெயமுற்றுவருவாயம்மா

வ-ம் அகோவாருமம்மாஎங்கள் கண்மணியாகியவள்ளித்தாயேஇப்போதேபாங்கிமார்களையுங்கூட்டிக்கொண்டு நமதுதிணைப்புனம்போய் மிருகசாதிகள்பட்சிகள் திணைக்கதிரைக்கொய்யாமல்காவலிருந்துகழுகுமலைக்கந்தாகிருபையால்செயம்பெற்றுவருவாயம்மாவள்ளித்தாயே

வள்ளியம்மை-வசனம்

சரணம்சரணம் அப்படியேபழுதில்லாமற்சற்றுவருவேன் தந்தைதாயே

பொது-விருத்தம்,

ஞாலமேபுகழ்நம்பிராஜனுமவர்தன்பாரி
சீலமாகிப்பெண்ணங்கைமோகினியிலகதன்னுலே
சோலைசூழ்புனத்திற்காவல்சுகமுடனிருக்கச்சொல்ல
வாலைபோல்வள்ளியம்மன்வளமுடன்வருகின்றுளே.

வ-ம். அகோதெப்படியென்றால் நம்பியராஜனும் நங்கைமோகினியுந்திணைப்புனங்காக்கச்சொன்னபடியால்வள்ளியம்மன்பாங்கிமாருடன்திணைப்புனங்காக்கவருகிறவிதங்காண்க.

வள்ளியம்மன-வருகிற-தரு-இ-ம-புந்நாகவாராளி-ஆதிதாளம்,

வள்ளிநாயகியும்வந்தாள் திணைப்புனங்காக்க
வள்ளிநாயகியும்வந்தாள்
வெள்ளியங்கிரிவேந்தன்வள்ளல்நம்பிராஜேந்திரன்
பிள்ளையாகியபசுங்கிள்ளையாகியகுற வள்ளி
மாதாபிதாவைப்பணிந்துபோய்வாமேனென்று
வாங்கிவிபூதியணிந்து
ஆதாவாகத்துணிந்து அண்ணமார்தம்மை
அனுப்பிமனதுகனிந்து
பேதாபேதங்கள்தெரிந்துணையாமல்

தாதியர்கள்தன்னோடுங்காதலுடனேகூடி வள்
பாடகச்சிலம்புசிலம்ப காலாழிபீலி
பாதசரங்கள்புலம்ப
ஆடாப்பணிகளசையமுகந்துலங்க
அதிகநற்குணமிசைய
ஞாடையிலிங்கிதராகம்பாடிநயங்கள்தேடி
பேடையிற்பாங்கியரோடுமுறவுகூடி வள்ளி
காவிற்கனிகளருந்தி சாத்தாவைமலைக்
காளியைப்போற்றிவருந்தி
சேவற்குகனைப்பணிந்துதினைநாக்குக்
தினைப்புனந்தேடித்துணிந்து
தாவிப்பாங்கியரோடுசரசவண்டுபண்பாடும்
பூவைப்பெண்ணுகவிந்திரன்தேவிக்கதிகயோக வள்ளி
யந்தனவனங்கடந்து நந்தவனமுந்
தாண்டியேதள்ளிநடந்து
சிந்தைமகிழ்ந்துபடர்ந்துவருந்தியுநற்
செண்பகவனந்துடர்ந்து
கந்தமல்லிகைச்செண்டுங்கையிலெடுத்துக்கொண்டு
வந்தவழியுமண்டிவளங்கொள்வனங்கள்கண்டு வள்ளி

வஞ்சிவிருத்தம்,

சூரியன்கதிரெனத்துலங்கும்வள்ளிமின்
சாரியதினைப்புனத்தில்தன்னில்வந்திட
கூடியவேடர்கள்கூட்டமாகவே
சீரியபரணதுசெய்கின்றார்களே

வ-ம், இந்தப்பிரகாரம் வள்ளியம்மன்பாங்கிமாரோடுதினைப்புனங்காக்க வரவுமங்கேவேடர்களால் பரணைக்கட்டப்பட்டுவள்ளியம்மன்காவலிருக்கிறவிதமெப்படியென்றால்,

வள்ளியம்மன் -பரண்காக்கும்நன்னிகள்-இ-ம்
ஆனந்தபைரவி- ஆதிதாளம்.

செம்பவளக்கால்நாட்டி நன்றாய்ச்
சிறந்ததங்கவளை பூட்டி
கம்பலைப்பொன்மணிநிரப்பி அதில்
கனம்பொருந்துந்தழைபரப்பி
பருத்திருக்குமாணிதைத்து வள்ளி
பாதமவைக்கயேணிவைத்து
திருத்துங்கவண்டதனைச்சேர்த்து வள்ளி
செங்கைவிற்றனிற்கோர்த்து
ஏணிதனிர்பாதம்வைத்து உள்ளி
ஏறவள்ளிமனதுவைத்து
பேசியவள்பரணிருந்தும் வள்ளி
சிறபலமாய்வளம்பொருந்தும்
வரிசையன்னமார்போக அங்கே



வள்ளியும்பாங்கியுமாக
விரைவுடனேகையிற்கவணுஞ்சேர்த்தாள் வள்ளி
விளைந்ததினைப்புனங்காத்தாள்
திசையைநோக்கிப்பார்த்திடுவாள் வள்ளி
தெய்வங்களை நேமபிடுவாள்
அசையாதபரணேறி எங்கள்
அன்னைவள்ளிமனந்தேறி
பாங்கியனைப்பிரியாமல் கொஞ்சில்
பலவினைவுங்குறியாமல்
தீங்குவரச்செய்யாமல் கிளி
தினைக்கதிரைகொய்யாமல்
வீங்கவண்மாறுமல் அம்மன்
வேற்றுமுகம்பாராமல்
காசலையாப்பரணீது நின்று
காத்தாளேகுறமாது
இநதனங்களசைந்தசைய உன்னடை
எறிந்தாளேகவணிசைய
பருவமுயல்குழல்சரிய வள்ளி
பண்புடனேகவணெறிய
கைவளையல்கலகலென வள்ளி
கவணெறிந்தாளுடல்
மெய்யிலிட்டபணிதுலங்க உன்னடை
விசுகின்றாள்கவணிலங்க
வஞ்சியிலைதுவளகின்றாள் அம்மன்
மணிக்குரலோலமென்றாள்
அஞ்சுகப்பெண்குரல்போடக் கேட்டு
அன்னங்கள்வந்திசைபாட
பூங்குயில்கள்சூழ்ந்துமொய்க்க வண்ணப்
பூங்கவனத்திரிகள்மொய்க்க
மாங்குயில்களிசைபாட புள்ளி
மயிலனேமுநடமாட
இப்படிவள்ளியும்பெரிய இந்த
ஈரேழுலோகமுமறிய
செப்புச்சிலைமாதுனே அம்மன்
தினைப்புனக்காத்திருந்தாளே

பொது-விருத்தம்,

வாட்டமில்லாமில்லைமலரணிக்கம்தாளின்
வள்ளிதினைப்புனக்காத்துவாழுநாளில்
தேட்டமுடன்கும்பமுனியிடத்திற்சேக
சென்றுவந்துவடகயிலைத்திரிசாரியில்
கூட்டமலர்காவனத்திற்கீதம்பாடுந்
தொண்டுபிரமாபிருந்தகோளன்போக

நாட்டமுறநாரதமகாமுனிவன்வந்து
நடிக்கின்றான்றிசைசையபக்கின்றானே

வ-ம், அகோ எப்படியென்றால் இந்தப்பிரகாரந்தினைப்புனத்தில்வள்ளியம்மனும்பாங்கிமாரும் காத்துக்கொண்டிருக்கஅவ்விடம்ஆகத்தியனைக்கண்டு அவ்வழி நாரதமகாமுனிவருகிறவிதங்காண்க-

நாரதர்-வருகிற-தரு இ-ம்-ஆரபி ரூபகதாளம்.

வேதமின்னயமாகவிளங்குவசித்தாதியோக
நாதனெனுஞ்சிவயோகநாரதர்வந்து — தோன்றினர்
புல்த்தோலிடையிற்போத்திப்பாதவெண்ணீறசாத்தி
வலுத்தமந்திரமேதகிவந்துநாரதர் — தோன்றினர்
செபஞ்செய்ருத்ராட்சஞ்சாத்திசிவமந்திரத்தியானித்து
தவஞ்சேர்பூங்காவனத்தில்தவநாரதர் — தோன்றினர்
கண்டகுண்டுணிகள்மெள்ளக்கண்டபேருடன்சொல்ல
விண்டுப்பீதங்கள்பாடிவேதநாரதர் — தோன்றினர்

விருத்தம்.

வந்திடுநாரதமுனிவர்பரண்மீதுற்று
வள்ளிமதிவதனமுமெய்வடிவுங்கண்டு
விந்தைமதியோரதியோசீதையோ
மேனகையோவூர்வசியோமின்னோபொன்னோ
இந்தவுலகினிலிவள்போலழகுங்காணேன்
என்றுகளிகூர்ந்துபரமனைநினைந்து
சொந்தமென்றேபுனங்காக்குப்பெண்ணைப்பார்த்துச்
சூட்சமதாய்முனிவசனஞ்சொல்லுவானே

நாரதர்சொல்-தரு-இ-ம-தோடி-ஆதிதாளம்

ஆரம்மாநீசொல்லுவாய்-தினைப்புனங்காக்கும்
அதிசயித்தனைவிள்ளுவாய்
சாரம்பொருந்துந்தமிழ்சாரந்தெரிந்தபசுங்
தங்கமேகிளியேயெங்கேவுன்தாய்தந்தை — ஆரம்
ஆதிலட்சுமி தானோ தெய்வலோக
அயிராணியெனு மானோ
சோதியோசரஸ்வதியோரம்பையோவேதத்
துலங்கியபார்ப்பதியோ
எந்தூர்நின்பேர்தந்தைதாய்பேருஞ்சொல்லுவாய் — ஆரம்
இந்தத்தினைப்புனத்தில்தங்கதெந்தவிதமோ

நாரதர்சொல்-வசனம்.

அகோவாருமம்மாதாயே இலட்சுமிஇந்திராணிசரஸ்வதி அரம்பைசன்பார்வதி இவர்கள்போலதினைப்புனங் காத்திருக்கிறாயே யாரோவெனக்குத்தெரியவில்லை உன்பெயரும் உன்னூர்பெயரும் உன்தாய்தந்தைபெயருந்தெரியச்சொல்லுவாயம்மாதாயே,

வள்ளியம்மன்சொல்-விருத்தம்,

சாதியோகாக்குறவர்குலந்தாய்போகங்கை
தந்தைநம்பிராசேந்திரனென்பெயர்வள்ளி



கோதில்லாவேள்விமலைக்குடியான்றிற்றார்
குடியிருப்பாமெங்கள்பதியதுவேவாசம்
நீதியுடன்றினைப்புனத்தைக்காப்பாயென்றே
சேய்தங்கைதாயெனையும்னுப்பிவைத்தார்
ஓதுமெனதிர்கீர்த்தானுருர்தாமீனதிக்
குமதுபெயர்தானேதாவணிசெய்வீரே

வ-ம், அகோவாருந்தவமுனிவரே என்னுடையவர்பெயருந்தாய்தந்தைபெயரும் என்பெயருஞ்சொல்லச்சொன்னீரல்லவோஎங்கள்ஜாதியோருச்சாதி நாங்கள்வாசமாயிருக்கிறது சிற்றூர்என்தந்தைநம்பிராஜன் என்தாய்நங்கைமோகினிஎன்பெயர்வள்ளி ஆனபடியால் நீர்எவரோஎனக்குதங்கள்பெயர்தெரியச்சொல்லுமையா,

நாரதர்சொல்-விருத்தம்,

தெரிவைசக்குயில்கள்கூவுந்தினைப்புனவள்ளிகேளாய்
நாரதனென்பேரிந்தநாடெலாமறிவாரிங்கு
காரியஞ்சொல்வேனீயுங் கழுகுமாமலையில்வாழுஞ்
சாரதருபன்கந்தசாமியைமணஞ்செய்வாயே

வ-ம், அகோகேளாயம்மாவள்ளித்தாயே நானேநாரதமகாமுனிஎன்று ஈரேழுபதினாலுலோகமுஞ்சொல்லக்கொள்ளுவார்கள் ஆனபடியால்நான்சொல்லும்வார்த்தைமனதிற்கொள்ளுவாய் ஆனையாலே நீருபசவுந்தரியமாகயிருக்கிறபடியால் கழுகாசலக்கந்தசாமியை மணஞ்செய்துக்கொண்டால் எனக்குச்சந்தோஷமாயிருக்கிறது அம்மாதாயே,

நாரதர்சொல்-கண்ணிகள்-இ-ம-புன்னாகவராளி-அடதாளம்-

மணந்திசைந்தவள்தானே — குகனை
மணஞ்செய்துக்கொள்வள்ளிமானே
கனமும்பொருந்தும்வள்ளித்தாயே — எங்கள்
கந்தனைமணந்துக்கொள்நீயே
கழுகுமாமலைமுருகேசன் — உந்தன்
கருத்திற்குகந்தவிசுவாசன்
தழுவிக்கொண்டால்வெகுசெம்மையே — கந்த
சாமிதருவார்வெகுநன்மையே
அசுரர்சமரில்வென்றவேலன் — அதி
வரண்டாட்சதகிவைபாலன்
வலியபன்னிரண்டுகைநேசன் — உந்தன்
மனதிற்குகந்தமணவாளன்
கலியுகத்திற்குகந்தகுமாரன் — யார்க்கும்
கருணைபுரியுமுபகாரன்
சுவியாமலவர்க்குச்சம்மதிப்பாய் — வள்ளித்
தாயென்சொல்மனதில்மதிப்பாய்
வேறுபேதகம்நினையாதே — வெற்றி
வேலனைச்சேர்ந்தனைமாதே
ஆதரவீராவென்றறைதே — குகனை
அணைந்துக்கொள்விலைகள்ளவராதே

சமலச்சரவணச்சண்முகனே கூடி
கலந்துக்கொள்கல்லசேவகனே
அமரர்மணிக்குழந்தைக்குகனே சேர்ந்து
அணைந்துக்கொளகுமரதேசிகனே
வேலுண்டுவினையில்லைத்தானே குகனே
மேவிக்கொள்குறவள்ளித்தேனே
மேலுங்கதிதருவார்நிஜமே வடி
வேலனுந்தன்கைவசமே
தனித்திருப்பதுசும்மாவருத்தம் கந்த
சாமிக்குமுனக்குமேபொருத்தம்
தனிக்குமிகராஞ்சுப்ரமண்யம் தன்னைக்
கலந்துகொண்டால்கோடிபுண்யம்

பொது-விருத்தம்,

கவடநாரதனுரைத்தமொழியைக்கேட்டு
காதிலிருகைகளைவைத்துநருந்தும்வேறாய்
அவசியமாயிவ்வார்த்தைமுனிவன்சற்றும்
அஞ்சாமற்சொன்னனே அஞ்யானத்தைச்
செவிகளிலேகேட்கவுந்தான்விதியோஓகோ
சிவசிவஹராஹராசிவனேயென்று
குளிர்மலைப்பெண்வள்ளிநாயகிவிசாரங்
கொண்டுதலைவிதியைநொந்துகூறுவாளே

வசனம்.

இந்தப்படி வள்ளிநாயகியை நாரதர்சுப்ரமணியரை விவாகஞ்செய்துக்கொள் என்றதைக்கேட்டு காதிலிருகையைவைத்து வள்ளியம்மன்புலம்புகிறவிதங்காண்க

வள்ளியம்மன்-புலம்பல்-கண்ணிகள்

இ-ம் முகாரி-ஆதிதாளம்.

இந்தஅஞ்யானவார்த்தைஎன்செவிகேட்கவுந்தான்
என்னவிதியோபரமசிவனேபரம சிவனே
வந்தமுனிவனென்முன்வம்புபடப்பழியாய்
மதியாமற்சொல்லலாச்சேசிவனேபரம சிவனே
ஆரண்யந்தனிலேநானருந்தினைக்காக்கவந்து
அவதூறுகேட்கலானேன்சிவனேபரம சிவனே
கோரணியாசழிகூறுதவார்த்தைதன்னைக்
கூறவுங்கேட்கலானேன்சிவனேபரம சிவனே

வள்ளியம்மன்சொல்-விருத்தம்,

திருமாலின்சகோதரிபாரவதிதன்சேயன்
செழித்தாறுதலைத்தினுக்குஞ்சேர்ந்தகந்தன்
குருவானகுகனைமணஞ்செய்வாயென்று
குறித்துரைத்திரதுநீதியல்லசும்மா
வெகுவாயுமலர்ந்திடநீர்பேசவேண்டாம்
வீண்பேச்சுநாரதனேமிஞ்சியிருக்கு



மதுவார்த்தைசொல்லாதே இல்லாதேபோ
வந்தவழிதிரும்பிவிடுமதியில்லானே

வ-ம், அகோவாரும் நாரதமகாமுனிவரே ஆறுதலங்களிலும் வீற்றிருக்கும்படியாகிய சுப்பிரமணியக்கடவுளை மணஞ்செய்யும்படியாய்சொன்னீரல்லவா அப்படிக்கு நீர் சொல்லுவது தருமமல்ல வந்தவழியே திரும்பிப்போகலாம் நாரதமுனிவரே.

நாரதர்சொல்-விருத்தம்.

பின்னைவருங்காரியமுன்சொன்னேனென்சொற்
பிழையேமுன்சொல்பவகையாளியானேன்
உன்னுடையமனதிலேன் வீண்பொல்லாப்பு
உடையவன்வந்தாலவன்பால் நீன்பாடமமா
என்னையுமேகோபிப்பதுங் காரியமுமல்ல
இனைக்கமுகங்கண்ணாடி பெதுத்தாலல்லோ
நன்னயமாய்த்தெரியுமக்கே யதற்குமுன்னே
நான்சொல்லத்தெரிந்திடுமோ நவிலுவாயே

வ-ம். கேளுமம்மா வள்ளித்தாயேநான் பின்னால்நடக்குங்காரியத்தை உனக்குமுன்னே சொன்னதால் என்பேரில்கோபம்வந்தது ஆனால்கண்ணாடியைமுகத்துக்கெதிர்பார்த்தால் தெரியுமல்லவா அதுபோல கழுகாசலகந்தநாயகர் உன்னைமணஞ்செய்வாரே அதற்குமுன்னே நான்சொல்லத்தெரியுமோசொல்லுமம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல்லுகிற-கண்ணிகள்

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்,

வீண்பேச்சுப்பேசவேண்டாம் நாரதனே இந்த
மிரட்டுநடவாதிங்கே நாரதனே
போம்போம்வந்தவழியேநாரதனே இங்கே
பொருந்தாதவார்த்தைசொன்னாய் நாரதனே
கந்தனுக்கினையென்றதும்வாய்மதமோ சற்றுங்
கனியாமற்சொல்வதுஞ்சம்மதமோ
எந்தனைவேலவருக் கிணங்கவென்றே இங்கே
என்முன்னனேதிர்த்துச்சொன்னீர் நீருமின்றே
வெற்றிக்குறக்குல மென்றறியாமல் வம்பு
வின்னுந்தீரெங்கள் சேதிதெரியாமல்
சற்றும் நீதியிதை தொட்டிப்பாராமல் சும்மா
சலித்தனம்பேசுகிறீர் யோசியாமல்
அண்ணன்மாரிட்டனைத்திவ் வருவாரோ வந்தால்
அப்புவிலெடுத்தவர் பொறுப்பரோ
வீண்ணுட்நாரதனே என்றாலோ சிவ
வேடங்கொண்டதுசும்மா வீண்தானோ

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

சடைமுடித்தவேடமெல்லாந் தானுமாகு
தவமுனியென்றேயாருந்தான்சொல்வாரோ
வெயிலிலேவிடனப்பேசுமடையாயிந்த

விண்பேச்சுநாரதனே மிஞ்சவேண்டாம்
அடம்பிடித்தேயெங்களண்ணர் வருவார்வந்தால்
அண்டவொட்டார்கண்டவுடனம்பாலெய்வார்
திடமுடன் முன்னில்லாதே போபோயிந்த
செய்கையறியாதுசும்மா செப்பினீரோ

வ-ம-அதோவாரும்நாரதமகாமுனியேநீர்சிவனைப்போல்சடைவைத்தநு விஞே கந்தனுக்குஇணங்கென்றவார்த்தைசொன்னீரல்லவா அது இங் கேநடவாது இப்போது எங்களண்ணமார்கள்வருவார் உம்மைக்கண்டா ல்அம்பாலெய்வார் அதற்குமுன்போய்விடும் நாரதமகாமுனியே.

நாரதருக்கும்-வள்ளியம்மனுக்குந்-தர்க்கம்-கண்ணிகள்;

இ-ம் கண்டா-அடதாளம்,

கடந்தவார்த்தைசொன்னுற் காரியமோவள்ளித்தாயே எங்கள்
கந்தனைமருவினுற்கணக்குறைபுண்டோசொல்வாயே

வள்ளியம்மன்-சொல்

துணிந்தவார்த்தைசொன்னுல் துரம்போம்நாரதமுனியே இந்த
துன்மார்க்கமேதினி யெம்மாத்ரநாரதமுனியே

நாரதர்-சொல்,

இந்ததினப்புனத்தி லிருக்கவிதியோவள்ளிமானே
இணங்கிக்கொண்டாலுன்னை யெவருங்கையெடுப்பார்தேனே

வள்ளியம்மன்-சொல்,

உந்தன்மதமோஇன்ற உதமேநீவெகுஜல்லியாச்சே இந்த
உலகுக்கொவ்வாதிங்கு கலகம்பண்ணுதேயிந்தபேச்சு

நாரதர்-சொல்,

பேச்சுநடந்தல்லவோபேதையேயோசனைதோணும் கந்தன்
பெரியவனவனைநீ மருவச்சம்மதித்திடவேணும்

வள்ளியம்மன்-சொல்.

வாய்ச்சம்பிரதாயமுன்வழக்குஞ்செல்லாதுகேள்நாரதனே நட
வாதெந்தன்குறக்குலம் வழக்கம்பொல்லாதுகாணுநாரதனே

நாரதர்-சொல்,

குச்சக்குடிசைகட்டிக் குடியிருப்பதும்நல்லவாழ்வோ எங்கள்
குமரனைமணந்துபொற்கோவிற்குள்ளிருப்பதுந்தாழ்வோ

வள்ளியம்மன்-சொல்,

குங்கங்குடி-ஒன்றுசெம்பொன் கோவிற்போலிருக்குங்குலத்திற்கே இந்த
கொஞ்சத்தவம்பேசமிஞ்சிவந்தாயிந்தத்தலத்திற்கே

நாரதர்-சொல்,

துள்ளுமாம்பொதிகமந்து நீரும்வள்ளித்தாயே கந்தன்
துடர்ந்துவருவாரிங்கே கந்தமொழிகள் சொல்லுவாயே

வள்ளியம்மன்-சொல்,

*தள்ளிநடந்துகந்த சாமிவந்தாலுஞ்செல்லாதே இங்கே
தணிவுசொல்நாரதமுனியேயோடிப்போகில்லாதே

நாரதர் சொல், வள்ளி

தடிவேல்குமரனைப்போல் மாப்பிள்ளைநினிதிடையாதே



மங்கையேகுமரனைமருவமனதுசடையாதே

வள்ளியம்மன்-சொல்,

சடைமுடிநாரதாநான்விட்டேனிதுவரைமாப்பு என்றுஞ்
சமாசாரமிதுசொன்னுற்சண்டைவருமினிபொல்லாப்பு

நாரதர்-சொல்.

நிஞ்சிக்குங்காடிக்குங்கைகுவிட்டபார்த்திநிக்குறத்தி எங்கள்
கந்தனைமருவினுல்கனமுண்டுபாதகர்விருத்தி

வள்ளியம்மன்-சொல்.

மிஞ்சியமருந்துள்ளமேன்மைக்குறவர்குலநாமே மட்டு
மீறிப்பேசியபேச்சீவிபிளந்துசொல்லோமே

நாரதர்-சொல்

வார்த்தைகடக்கவழித்துரந்துபோங்குறமயிலே வள்ளி
மங்கையேகுமரனைமணந்துக்கொண்டால்வெகுஜோலே

வள்ளியம்மன்-சொல்,

எதிர்த்துப்பேசுகிருயிணங்காதிந்தவார்த்தைபொட்டுமோ வீண்
எட்டாப்பழத்துக்குக்கொட்டதாவிவிட்டதால்கிட்டுமோ

பொது-விருத்தம்,

எந்தெந்தவிதத்தினுலுமிதவசனங்கள்சொல்ல
சிந்தையில்பதித்திடாமல்சீறியேவார்த்தைசொன்ன
சுந்தரவள்ளிமான்போறறுலஞ்சுபதாதிகேசம்
வந்தநாரதனும்பார்த்துமடல்தனில்வரைந்திட்டானே

வசனம்,

அதோகேட்படியென்றுல் இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுக்குவே ண்டியபுத்திமதிகளைச்சொல்லி கேளாமலிருக்க அவளுடைய ரூபசவுந்த ரியத்தைசித்திரப்படத்திலெழுதி சுப்பிரமணியருக்குகாண்பிக்கும்பொரு ட்டாய்நாரதர்கழுகுமலைக்குவருகிறுர்

சுப்பிரமணியர்வருகிற விருத்தம்.

தருக்களும்வாவிகூடத் தங்கிபற்பலவாய்நல்ல
பெருக்கமாய்முனிவர்நாற்கால்பொற்றிமிருகமோடு
கருக்குயில்மயில்கள்மேவுங்கழுகுமாமலையில்வாழுந்
திருக்கையில்வடிவேலேந்து சிவசுப்பிரமணியர்வந்தார்.

வசனம்,

இந்தப்பிரகாரம்நாரதர் கழுகுமலைக்குவருஞ்சமயத்தில் அவ்விடம்க ழுகுமலையில் சிவசுப்பிரமணியர்கொலுவிறகுவருகிறவிதங்காண்க.

சுப்பிரமணியர்-வருகிற-தரு

இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்,

சிவசுப்பிரமணியர்வந்தார்-கழுகாசல
சிவசுப்பிரமணியர்வந்தார்

அநுபல்லவி,

சிவசுப்பிரமணியர்வந்தார்-தவமுனிவர்கள்சூழ
சித்ரகலாபமயில்தத்திமிதியென
நர்த்தனஞ்செய்திடச்சித்தர்களும்புகழ் (சிவ)

சரணங்கள்.

ஆறுமுகந் துலங்க பன்னிரு கையின்
அழகுமிகுந்து இலங்க
கூறுசெய்திடும் மேலும் மணிக்கிரீட
குண்டலமும்பணி மேலும்
வேறுபடச்சூரனை மாறுபடச்செய்கோல்
வெட்டிகொண்டிடுஞ் சூலஞ்சக்திபதுமந்த்ரவாள்
கைத்துவமதிலெடுத் தைத்தவுணர்கள் படை
கலங்கியேமதிகுலைந்தோடிட
யிலங்கபோமிகுந்தினங்கவேலவர்
வீரசூரபத்மானையே களம்
போரிலேஜெயமுக திரமாகச்செய்த (வி

பொதுவசனம்

இந்தப்பிரகாரம் கழுகுமலைக்குசாமி வந்து கொலுவில்வந்து வர்கள்சூழ இருக்கும்போது அந்தசமயத்தில் நாரதர்வந்து சொல்லு விதங்காண்க.

நாரதர்-வசனம்.

அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராகியும் கோடிசூரியப்பிர சச்சிதானந்த ஆதிபராபரவஸ்துவாகிய ஆதிபரமேஸ்வரர் புத்திரசி ணிபாகியசுப்பிரமணியக்கடவுளே சரணாரவிந்தமையாகஸ்வாமி.

சுப்பிரமணியர்சொல்-வசனம்

அகோவாரும்பிள்ளாய் நாரதமகாமுனியே மிகுந்த சந்தோஷமா எங்கேயிருந்துவருகிறாய்சொல்லும்பிள்ளாய்.

நாரதர்சொல்-விருத்தம்.

விண்ணுலகுமண்ணுலகம்பார்த்துவந்தேன்
வெகுகோடித்தலங்களெல்லாஞ்சுற்றிவந்தேன்
கண்ணிசைந்தபெருவனத்தில்வள்ளியைப்போல்
கண்டதில்லைசுப்ரமண்யக்கடவுளானே
எண்ணியந்தபெண்ணுடையசொரூபமெல்லாம்
இணங்கமடசித்திரத்திலெழுதிவந்தேன்
நன்னியந்தமடலுந்தானிருக்குதிப்போ
நடக்கவேண்டியவகையைநவிலுவீரே

வசனம்.

ஆ-ஆ-சொல்லுகிறேன் கேளுமையாஸ்வாமி தெய்வலோகத்திலே அதுலோகத்தில்வந்து வெகுகோடித்தலங்களெல்லாஞ் சுற்றிப்பார்த்து ன்னுடைய திசையைநோக்கிவரும்போது வேள்விமலைக்காகே மூன் லோகத்திலுங்கிடையாத வள்ளியம்மையென்ற ஒருபெண்ணைக்கண்டே ன் அந்தஅம்மனுடையவடிவையொருபடத்திலெழுதிவந்தேன்சுவாமி.

சுப்பிரமணியர்சொல்-வசனம்.

ஆ-ஆ-மெத்தசந்தோஷம நல்லது நீபோய்க்கண்டுவந்த அந்தப்பெ ண்ணுடையவிதத்தைசெவ்வையாய் இன்னமொருதரம் நன்றாய்சொ ல்லாரும்பிள்ளாய்நாரதனே.



நாரதர்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி ரூபகதாளம்.

சத்திவடிவேல்குமாரசுவாமியுந்தன் சரணம்
தமியேன்நாரதமுனிவன்தாசனுந்தன் சரணம்
புத்தியடியேன்விண்ணப்பம்புகலுகிறேன் சரணம்
போற்றியுந்தன்செவியிலிவைசாற்றுகிறேன் சரணம்
சிவந்தபாதமென்வாரினைச்சேர்வைசெய்தேன் சுவாமி
தெளிந்தபொதிகைதலந்தனைத்தேடிச்சென்றேன் சுவாமி
உகந்தகும்பமுனிவனைக்கண்டேமகிழ்ந்தேகை கொட்டி
ஒண்டிவடகைலேயுதிர்மெல்லநடந்தும் போது
வேடர்துரைத்தனங்கள்செய்யும்வேற்வமலைக் கருகே
விரைந்துவரும்போதொருபெண்விளைந்ததினைக் காச்சான்
தேடித்தினைப்புனத்தருகேசென்றேநின்றுக் கொண்டேன்
திவ்யசக்திரோதயம்போல்தேன்மொழியைக் கண்டேன்
வள்ளியென்றும்பெயரதிக்குயிலிருந்தேன்
வடிவேலர்க்காகுமென்றேநினைத்துக்கொண்டேன் சுவாமி
புள்ளிமயில்வேலவனைநீபுணர்வாயென்றேன் சுவாமி
பூவைவள்ளிஎனக்கதனைப்போபோவென்றாள் சுவாமி
சுப்பிரமண்யர்க்கினக்குமென்றுதானிந்தசொன்ன போது
தாரம்போவென்றெனைமிரட்டித்தூரத்துமென்றாள் மாது
இப்புவியிலிருபதினைக்கும்வள்ளி போலே
எழுதிவந்தேன்சித்திரத்திற்பார்த்திடுங்கள் குருவே

நாரதர்சொல்-விருத்தம்

இதமிதமாய்க்கவியுங்கேளமல்வள்ளி
இருதனமுமதிருகமுஞ்சொலிமொழியும்
பதமுமவள்துடியிடையுங்கூர்ந்துபார்த்து
பண்புடனுமவயவங்கள்குறைவில்லாமல்
விதம்விதமாய்ச்சித்திரத்திலெழுதிச்சொன்ன
விரியகாய்விடைவிட்டுவிளைவாயிக்கு
கதிர்தவுங்காருகமலதனிலெடுத்துக்
கந்தவேள்சித்திரத்தைக்காட்டுவேனே

வசனம்.

ஆகோகேளுமையாசுவாமி அந்தவள்ளியம்மனிடத்தில்உம்மைக்கு றித்துவேண்டியதர்க்கங்கள்செய்தும் அம்மன்கோபத்தால் அந்தஅம்மா னுடைய பாதகேசமுதல் திருவழகையடைத்தில்சித்திரமாயெழுதிவ ந்தேன் இதோஇதைப்பார்த்துநடக்கவேண்டிய காரியஞ்சொல்லவேணு ஞ்சுவாமி (சுப்பிரமண்ணியர் வாம) ஆறுல் அந்தச்சித்திரப்படத்தைக் கொடும்பிள்ளாய் பார்ப்போம்நாரதமகாமுனியே.

பொது-விருத்தம

வளக்கவிபாரமுனைத்திருநாரதனுந்தந்த
மடவிலெழுதுந்தசித்ரவடிவைப்பார்த்து
குகவடிவேல்குமரன்திருமையல்கொண்டு
கோதுபிகொண்டுசித்தனைப்போற்றுவாடி.

மிகவுமனமதிமயக்கியுருகிச்சேர்ந்து
விரமதன்சமர்புரியமெலக்குநோக்கு
சுகமயிலேசித்திரமோகினியேயென்னத்
துன்றுவார்புலம்பியங்குவிளங்குவாரே.

வ-ம். இப்பப்பிரகாரம் நாரதமகாமுனிகொடுத்த படத்தைசுப்ரமணியர்கண்ணுறெலபார்த்து மயிதுயங்கொண்டவரைப்போல் புலம்புகிறவிதங்காண்க.

சுப்பிரமணியர்சொல் கண்ணிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்.

கையின்மடலன்னமே    வடிவமைந்த
காரிகையெனுஞ்சொர்ணமே
மையலுங்கொண்டேனே    மதிமயக்கி
வார்த்தையும்விண்டேனே
கண்ணே கண்மணியே    பெண்ணே-எந்தன்
கண்ணுக்கிசைந்தகனியே
பெண்ணேபொன்னொளியே    என் மனதோடு
பேசும்பசுங்கிளியே
தேனேதெள்ளமுதே    நான்முன்னைத்
தேடுந்திரவியமே
மானேமாங்குயிலே    மரகத
வடிவேசொர்ண்மயிலே
கண்கொண்டிடாராயோ    என்னைக்கொஞ்சி
கட்டிச்சேராயோ
வன்கண்ணைப்போடாயோ    என்னைக்கிட்டி
மஞ்சத்திற்கூடாயோ
மனதிற்குறியாயோ    பெண்ணேஉன்மேல்
மயங்குவதறியாயோ
கதியிதழ்தாராயோ    நான்கொண்ட
காதலைத்தீராயோ
திரும்பவும்பார்க்கிலேயோ    நான்சொல்லுவதுன்
செவியிலுங்கேட்கலேயோ
துரும்பிடைதுலங்காதோ    செங்கைவளை
குவண்டெதிர்குலுங்காதோ
உன்றனைமறப்பேனோ    மதன்கணைகள்
உறவுபொறுப்பேனோ
என்னென்றிருப்பேனோ    உனைநினைந்து
எனதுயிர்தரிப்பேனோ

பொது-விருத்தம்

சைவதேவர்கள்கொண்டாடுஞ்சாயிசித்திரத்தைப்பார்த்து
மெய்புளகம்விசாரங்கொண்டுமெத்தவேவருந்தும்போது
மைவிழிவகவுங்கோலமயிலெனநடையுங்கொண்டாட
தெய்வயானைப்பெண்மாதுதிறமுடன்கொலுவந்தாளே.

வ-ம். இந்தப்பிரகாரம்சுப்பிரமணியக்கடவுள் சித்திரப்படத்தைப்பார்த்து



யங்கிமோலாபித்துக்கொண்டிருக்கும்போது அவ்விடம் ஞானமனோவியாகியதெய்வயானை திருக்கொலுவிற்கு வருகிறவிதங்காண்க.

தெய்வயானைவருகிற-தரு-இ-ம்-மோகனம-ஆதிதாளம்

தெய்வயானையும்வந்தாள்-திருக்கொலுமுன்
தெய்வயானையும்வந்தாள்
ஐயசோதிமென்மையவிலசமிகு
சைவமார்க்கதவுந்தையல்தேவர்டணி    (தெய்வ)
வாசமல்லிகைமலர்ச்    செண்டு    கையிலெடுத்து
மனதிற்கிருபையது    கொண்டு    கிளியென்னே
ஆசைபயில்மொழிதற்    கண்டு    சூர்யஉதைய
மானதுபோலவள்மேனிலசீர்க
மேன்மைக்குலாவுகிரபாபதிபூரண    (தெய்வ)
சித்ரமுகவினை    புழுங்க    மலர்சொரிந்து
தேவர்கள்வந்துவந்து    வணங்க    இருபுறமுஞ்
சத்ரசாமரைக    ளிலங்க    திவ்வியவதன
சந்திரனெனவருஞ்சங்கரன்மருமகள்
ஐந்தருவளர்திருஇந்திரனிடமகள்    (தெய்வ)
செந்தாமரைப்பாத    மிலங்க    துவண்டகொடி
சிற்றுடைபட்டாடை    துலங்க    கர்தந்தன
குந்தளமோலைக்கட்    குலங்க    வளை துலங்க
கோதைமாகாசேயெனவளர்திரு
சோதிமாமதிபாமெனஎதிர்வரு    (தெய்வ)

தெய்வானைசொல்-விருத்தம்

சங்கரசம்புதவு வரபாலர்ஞான
சரவணகுமாரபவென்சாமிநீரும்
செங்கைதனில்மடலேர்திப்பார்த்துத்
தியங்குவதேன்மயங்குவதேன்சிந்தைவேறாய்
அங்கமதுமெலிவானேன்புலம்புவனேன்
ஆர்மீதிலாசைகொண்டதையாமெய்யா
செங்கனிவாயதுமலர்ந்திங்கடியாட்குன்ன
சேதியெல்லாந்தெரிந்திடவேசெப்புவீரே

வ-ம். சரணஞ்சரணந்தேவசேனாபதியாகியஎன்பிராணநாயகரேதாங்கள்ஏதோஒருபடத்தைக்கையிலேந்திப்பார்த்துப்பார்த்துத்தியங்கிமயங்கிப்புலம்புகிறதேனோ எனக்குத்தெரியச்சொல்லும்பிராணநாதா.

தெய்வயானைசொல்-கண்ணிகள்-இ-ம்-ஆனந்தபைரவி,
ஆதிதாளம்

தெய்வமேநீரெவ்விதமோசித்திரபடத்தினைப்பார்த்து
தேட்டமாய்மயங்குவதைதெரியச்சொல்லுஞ்சுவாமி
ஐயனேதேவரேநீயார்மீதிலாசைகொண்டீர்
அந்தரங்கமெந்தனிடமறியச்சொல்லுஞ்சுவாமி
தேகத்திலாதிசயந்தானேநீரும்போ
தேகமெலிவாகிமயங்குவதேன்சுவாமி

ஆசைதந்தோருமக்குமடியாருமிங்கிருக்க
அந்தத்தோபெண்மேல்விரகந்தொடுத்ததென்னசுவாமி
உறுதிசொல்லப்படியானையுக்குமணஞ்செய்தார்பின்
னெருநத்திமேலாசைக்கொண்டவருக்கவென்னசுவாமி
இருமனதோடேனாயிருந்தவாலஞ்சமிவேதத்தால்
என்னுடையகாலமினியென்னசெய்வேன்சுவாமி

தெய்வானைசொல்-விருத்தம்,

ஏதொருபெண்டனைச்சதமென்றெண்ணிநீரோ
என்னிலேயுமதிகமாயுரமோவந்த
மாதின்முகக்கண்டரோயாவரென்று
வந்துசொன்னபோதனையோகேழ்விதாரே
நீதியுடனெந்தனுக்குநடந்தவார்த்தை
நிட்சயமாயொளியாமற்சொல்லவேண்டும்
மாதவத்தோர்புகழ்ந்தேதநாயின்மீதேறும்
மன்னவரேசின்கின்னவவருக்குவிரை

வசனம்

அகோவாரும்பிராணநாயகதாங்கள் ஏதொருபெண்ணின்பேரில்
மையல்கொண்டதைப்போற்காணுகின்றது அவளென்னிலும் அதிகஅழ
குள்ளவளோ ஆகிலுமுன்னுமென்னைமணஞ்செய்யும்போதுமற்றொரு
பெண்ணைநாடேனென்று சொன்னசத்தியமெப்படியிருக்கஇப்போ
ஒருபடத்தைப்பார்த்துமயங்கிமயங்கிநிற்பதுதருமமோவென்பிராணநாதா

பொது வசனம்.

இந்தப்பிரகாரந்தெய்வயானைதன்நாயகராகியசுப்பிரமணியக்கட
வுளைக்கேட்கபதிலுத்திரஞ்சொல்லாமையைக்கண்டு அவ்விடமிருக்கக்
கொண்டிருக்கும்நாரதரைப்பார்த்துக்கேழ்க்கிறவிதமெப்படியென்றால்.

தெய்வானைசொல்-கவி

| | |
|---|---|
| விண்ணினாரதனே | அண்ணலாரிடத்தில் |
| வண்ணமாச்சொன்ன | திண்ணிதேசொல்வாய் |

வசனம்

ஓகலகப்பிரியாகியநாரதனேயாதொருபகிடமென்னகோள்வைத்தா
யதைச்சொல்லும் பிள்ளாய்நாரதனே

நாரதர்சொல் விருத்தம்

தாயேநான்கண்டசேதிசொலக்கேளும்
தலங்களாதறிக்கைலைமுதிர்சாரத்திக்கேகே
ஓயாதுவினைத்தநினைக்காதரானோர்பெண்
உகந்தவடனருபமெல்லாமுன்னியுன்னி
வாயாலேசொல்லமுடியாதேயென்று
வந்துகமில்லாதமடலெழுதிவாந்து
தாய்வடிவெல்லாரும்பாரென்றதல்லா
சுகமணஞ்செய்யென்றுநீயென்சொல்லிலேனே



வ-ம், அப்படியேவருமேனம்மாதெய்வயானைத்தாயேநான்கைலையங்கிரி
போயிவ்விடம்வருகும்போதுவேழ்விமலைக்கருகிலொருபெண் தினைப்பு
னங்காத்திருந்தாள் அவள்ரூபத்தைவாயாற்சொல்லி முடியாதென்றொரு
படத்திலெழுதிவந்து சுவாமியைப்பார்க்கச் சொன்னதேயல்லாதுமணஞ்
செய்துக்கொள்ளச் சொல்லவில்லையம்மாதாயே.

தெய்வயானைக்கும்-நாரதருக்கும்-தர்க்கம்.

கண்ணிகள்-இடம்-கண்டா-ஆதிதாளம்,

தெய்வயானை-சொல்லல்,

சொல்லவில்லையென்றுசொன்னாய்சுத்தபரமாத்மாவின்
தொழிலெல்லாமறியேனோபாவிநாரதா
யெல்லாமல்லப்பேசியெல்லோர்க்குங்குண்டுணிவைத்த
வித்தைநானறியேனோபாவிநாரதா

நாரதர்-சொல்,

தாயேநீசொன்னவார்த்தைதகப்பிடந்ததுண்டோ
சற்றுமென்மேல்குற்றமில்லையம்மணித்தாயே
மாயமுங்கபடமுருகன்செய்ததேயல்லால்
மற்றொருவர்கள்செய்வாரோ அம்மணித்தாயே

தெய்வயானை-சொல்லல்

இத்தனையுஞ்செய்துநீசுத்தசிநாட்டினவன்
இல்லையென்பதறியேனோபாவிநாரதா
வித்தாரஞ்செய்துமேவாசித்திரமடலைப்பார்த்து
விரும்பிமெய்யவைத்தாய்பாவிநாரதா

நாரதர்-சொல்லல்

நிஜவார்த்தைசொன்னாலுமங்கோபமேவரும்
நிலையாதபொய்யன்பாரம்மணித்தாயே
பசப்பிவுமையவஞ்சித்து முருகன்செய்ததறிந்தும்
பாமரதனென்றுசொன்னாயம்மணித்தாயே

தெய்வயானை-சொல்லல்.

உறங்கிக்கண்மூடிப்பூனைப்பால்குடித்ததுபோ
லுள்ளவஞ்சகஞ்செய்தாயேபாவிநாரதா
மறைத்துவிடுவேனோசித்ரமடல்கந்தவேலனை
மயக்கினதறியேனோ பாவிநாரதா

நாரதர் சொல்லல்.

உசந்தபரகாரன்சேதியறுதா இழுசிரித்தாலென்
றுரைப்பதுநிஜமாச்சேயம்மணித்தாயே
நிஜத்தைநான்சொன்னாலுங்குண்டணிசொல்லானென்றே
நெடுகலும்மெள்ளபேச்சேஅம்மணித்தாயே

பொது-விருத்தம்

கண்ணிறைகண்டசேதிகழறினேனென்றுபோற்றி
புண்ணியநாரதனும்கிர்க்கப்பொருந்தியவேளைதாமும்
கன்னியகுறப்பெண்ணைநான்கண்டுவருவேனென்றே
எண்ணியசெய்யானைக விடைசந்திடவிபற்றிட்டாரே.

வசனம்,

அகோ தெப்படியென்றால் நாரதனை தெய்வயானையம்மன் கோபித்து தர்க்கஞ்செய்து நிற்கின்ற சமயத்தில் சுப்பிரமணியர் தெய்வயானையைச் சம்மதிக்கும்படியாய்ச்செய்து குறப்பெண்ணைக்கண்டு வரும்படி கேட்க தெய்வயானை அவருக்கு விடைகொடுக்கிற விதங்காண்க,

தெய்வயானை சொல்-கொச்சகம்.

மீவனும்வடிவேல்தரித்த வேலவனே நான்மருவும்
மன்னவரே யும்முடைய மனம்போலநீருமங்கே
கன்னல்மொழிவள்ளியெனுங் கானகுறத்தியிடம்
பொன்னடிகணோவாமற் போய்மீண்டுவாருமையா.

வ-ம், சரணஞ்சரணமென்பிராணநாதா தாங்கள் எண்ணிய காரியத்தை நான் தடைசெய்தாற் கேட்பீரா நல்லது உங்கள்மனம்போல அந்தக் கானகுறப்பெண்ணைக் கண்டு அதிசீக்கிரமாக நமது கழுகுமலைக்கு வந்து சேருஞ்சுவாமி,

சுப்பிரமணியர்-வசனம்

நல்லது அப்படியேபோய்வருகிறேன் நீயொன்றுக்கும் யோசிக்கவேண்டியதில்லை என்பிராணநாயகி அகோவாரும்பிள்ளாய் நாரதமகாமுனியே அந்தவள்ளியென்னும்பெண் இருக்கிற தினைப்புனமும் அந்தத்திசையும் அவ்விடத்திலிருக்கின்ற அதிசயமும் அவளிருக்குமடையாளமும் சொல்லும்பிள்ளாய்.

நாரதர்சொல்-விருத்தம்.

ஆனைமலைக்குத்தாலமலைதானுண்டு
அகத்தியர்பொதிகைமலையங்கேயுண்டு
மோனதவ்விசுவாமித்திரன்வேள்வி
முடித்தமலையுண்டுதேவர்முறக்கவுண்டு
ஜானகிராகவனுமிலக்குமணனுமுன்னைத்
தாடகையைவென்றதனுமத்தலத்திலேதான்
கானமலைகுறக்கொடியாட்பனமுமங்கே
கண்டுசென்றாலடையாளங்காண்கலாமே.

வ-ம், கோளுமையா கழுகாசலக்கந்தசாமியே அந்தவள்ளியம்மன் இருக்கப்பட்ட இடத்திற்சமீபமாய் ஆனைமலைக் குத்தாலமலை பொதிகைமலை விசுவாமித்திரர் வேள்விசெய்தமலையும் ஸ்ரீராமர் இலட்சுமணர் தாடகையை வென்ற இடமும் தேவர்கள் முனிவர்கள் வாசஞ்செய்யும்படியான இடமும் சூழ்ந்த தினைப்புனத்தில் வள்ளியம்மனிருக்கிறாள் எனதுபின்னே வந்தால் காண்பிக்கிறேன் சுவாமி

சுப்பிரமணியர்சொல்-வசனம்

அகோவாரும் நாரதமகாமுனியே அந்தவள்ளியிருக்கிற இடத்திற்குப் போகவேணுமானால் என்ன சொரூபமெடுத்துப்போகலாம் பிள்ளாய்.

நாரதர்சொல்-வசனம்

சரணஞ்சரணமையா சுவாமி ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் மயில் வாகனத்தையும் விட்டு வேடர் உருவங்கொண்டு போகலாஞ்சுவாமி.



சுப்பிரமணியர்வசனம், அப்படியேயல்லதாட்டும் பிள்ளாய்,

சுப்பிரமணியரும்-நாரதரும்-தினைப்புனம்வருகிற கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

மையல்கொண்டுவேலர் குறமானைதேடியே ஒரு
மானிட வடிவங்கொண்டுபொறைகூடியே
தெய்வயானை கூடச்சேர்ந்துவாவென்று கந்தன்
சீக்கிரங்குறப்பெண்ணினைப்பார்க்கலாமென்று
வில்லெடுத்து அம்புதொட்டு வேடர்போலவே வடி
வேலவன் தலத்தைவிட்டு மிஞ்சியேகவே
செல்வழிகேட்டுக் கேட்டுத்திசையைநாடியே வேலர்
தேன்மொழிவள்ளியைக்கானகந்தேடித்தேடியே
தண்டினைப்புனமும்வள்ளித்தலமுமெதுவே அவள்
தன்னைக்காண்பதெக்காலமோசமயமென்றைக்கோ
கண்களுக்கெட்டாத்தினைக்காடுதூரமேக மலர்க்
கந்தவள்ளியைநான் காண்பதெந்நேரமோ
நாரதர்வள்ளியிருக்குமலைக்குங்காணுமே அந்த
லக்குந்திசையுமெனக்குநவிலவேணுமே
தூரவோகிட்டவோவழிசொல்லுமெனக்கே வள்ளித்
தோகைதனைக்காணவைத்தார்சுகுந்தமுனைக்கே
என்றும்வேலர்புனத்திலேகியபோதில் அங்கே
இணங்கும்நாரதனும்வைபவிப்புவான் காதில்
மன்றல்வள்ளிதன்னைத்தேடிமகமெலிவானேன் தினை
வனத்தைக்காட்டிவள்ளியையுன்வசத்திற்சேர்ப்பேனே
மனந்துயரவேண்டாம்சுவாமியுன்மனத்தின்படியே குற
வள்ளியுன்வசஞ்சேர்த்துவைப்பேனடியேன்
தினைப்புனமும்வள்ளியையுஞ்சீக்கிரத்திலே கையிற்
சித்திரம்போற்காணவைப்பேனிட்சணத்திலே
இரண்டுநாழிகைக்குள்வள்ளிநாயகிமுன்னே இந்த
நேரமேகொண்டுவிடுவேன்கேயனே சொன்னேன்
கண்டுவள்ளியையுமதுகைவசத்திலே கூடிக்
கலந்தணைந்துசேர்ந்துக்கொள்ளுங்காணிஜத்திலே
சக்கரைசீனிவயன்றேலதன்னில்வனைத்து அதைத்
தானெடுத்துத்தின்னரகந்தருமோவிளைந்து
சொற்குறப்பெண்டன்னைமணஞ்சூட்டச்சொல்லியே நீயுஞ்
சொன்னதல்லாலவள்முகந்தோன்றவில்லையே
நாரதர்வாவென்றுவேலர்நடக்கத்தார் தோகை
நாகமலைக்கப்பால்சாரநாடுங்கடந்தார்
தெரியுமுடிக்குஞ்சுற்றிடலுமேயறியே வேலர்
செண்பகவனத்தில்வந்துசிந்தைதேறியே
வெள்ளிமலைதங்கமலைக்கொடிமுடியுண்டோ அதில்
விளைகமழ்சந்தனச்சோலைவேலவருங்கண்டே
மின்னையுப்பூங்குயில்வினமுழ்த்தினைபெருக்குமே கூவக்

கிளிமொழிவள்ளிப்பெண்ணைத்தேடிநக்குமே
தோகைவள்ளிக்கவணையறவதைக்கண்டார் பட்சி
சூழ்ந்திடுமாலோலமென்றசத்தமுங்கண்டார்
வாகையணிகந்தன்றினைப்புனங்காண்கிறார் அங்கே
வள்ளிதன்வடிவங்கண்டுவேர்த்திகின்றார்

பொது-வசனம்,

இந்தப்பிரகாரம் சுப்பிரமண்யக்கடவுளும் நாரதமகாமுனிவரும் கமு காசலத்திலிருந்து தினைப்புனத்தில்வந்து நாரதர்வள்ளியைக்காண்பித்து தமதிருப்பிடஞ்சென்றபின் சுப்பிரமணியக்கடவுள் வள்ளியம்மனை நோ கிற்கும்போது கூவுறபோது வள்ளியம்மன் தினைக்கு பட்சிகள்வராமல் ஆ யாலோட்டுகிறவிதங்காண்க.

வள்ளியம்மன் ஆயாலோட்டுகிற-தரு இ-ம்.

புன்னாகவராளி-ரூபகதாளம்

ஆயாலோ-ஆயாலோ-பட்சிகளே-ஆயாலோ-ஆயாலோ
அன்னங்களேகிள்ளைகளே நல்ல
அழகுசிறைவண்டினமே
கன்னங்கருங்காகங்களே சிறு
காடைகவுதாரிகளே (ஆயா)
வெள்ளைப்புள்ளினமே தினை
மேவுகின்றகோகிலமே
மெள்ளவரும்வரத்தினமே சோலை
மேவியசெம்போத்தினமே (ஆயா)
மானினமேஆயாலோ புள்ளி
மரையினமேஆயாலோ
கானகத்துமயிலினமே சிட்டுக
கம்புட்களேஆயாலோ (ஆயா)
வர்ன்னவர்ன்னபூவைகளே தாரா
வாத்துகளேஆயாலோ
சொர்ன்னநிறத்தாக்கணமே அன்றில்
சோடுகளேஆயாலோ (ஆயா)

சுப்பிரமணியர்சொல் கலித்துறை

காந்தளின்கைவிரல்சிவப்பெழுமேபொற்கவணெறிந்தால்
மாந்தளிர்செந்நிறமுமேவெய்யவன்கதிரால்
ஏந்துந்தனமிரண்டசைந்திடுமேயிடைஇற்றிடுமே.
போந்தவெவ்வாறுங்களுரைத்தகைசொல்லும்பூவையரே.

வசனம்.

ஓகோபெண்ணே உன்கையால் கவணெறிந்தால்சிவப்பேறுமேவெ ய்யலில்மேனிகுலைந்திடுமே இரண்டு தனமுறிகுலுங்குமே இடைநொசு மேல்லது உங்களூர்பெயரென்னநீயார்சொல்லும்பெண்ணே

இதுவுமது-விருத்தம்

கோதையேகுயிலேமானே கொஞ்சியகிளியேதேனே
காதலாயுன்னைத்தேடிக் காமப்பேய்க்கொண்டுவந்தேன்



நீதமாய்வனத்திலிந்தத் தினைப்புனங்காக்கவேண்டாம்
வேதனும்விதித்திட்டானோ விதிசவமெய்சொல்வேனே.

வசனம.

ஆ-ஆ-குயிலேமயிலே என்னிடத்தில் கொஞ்சும்படியாகிய கிளியே பாவியாகியபிரமதேவன் உன்னைப்பிறப்பித்து இந்தக்கானகத்திலே தினைப்பு னங்காக்கவிதிவைத்தானல்லவா நல்லது உன்மேல்மோகங்கொண்டுவந்த என்னிடத்தில் சற்றேவார்த்தையாடாயா என்மனோரஞ்சிதமான பெண் ணே.

இதுவுமது-விருத்தம்,

நிமிட்டமுகத்தைநேரேதிரும்பியென்றனைநீர
ஏறிட்டுப்பார்த்தோர்வார்த்தையியம்பினுன்னைப்பமுன்னோ
வாரிட்டதனப்பெண்ணே செவ்வாய்முத்துதிர்ந்திடுமோசொல்
பேரிட்டதின்னதென்றுபேசுவாய்பேசுவாயே

வ-ம். கேளாய்பெண்ணே உன்னுடைய அழகுபொருந்தியமுகத்தைக சற்றே ஏறிட்டென்னைப்பார்க்காயா இருதனத்தையுடைய பெண்ணே உன்வாயைத்திறந்துபேசாயா பேசினால் உன்வாய்முத்துச் சிந்திப்போகு மோ உன்னுடையபெயரைதெரியச்சொல்வாய்பெண்ணே.

சுப்பிரமணியர்கண்ணிகள்-இ-ம-தோடி.

வணக்குறப்பெண்ணே துலங்கிய
மரகதக்கண்ணே இரசம்பொழி
மதுரிதக்கனியே எனக்கிப்ப
வரிசைமைதநனியே
கனத்திருமானே மருவற்றக்
கட்டிச்செந்தேனே ஏழையுன்
கண்கொண்டுபாராய் நான்கொண்ட
காதலைநீராய்
பங்கயத்தேனே மன்மதன்
பகழியெய்தானே வின்மனப்
பாசங்கொண்டேனே ஆசைக்கிட
நேசங்கொண்டேனே
சங்கீதக்குயிலே மரகதக்
கனிபின்பமயிலே உன்மனது
தாகங்கொண்டேனே என்மனம்
மோகங்கொண்டேனே
ஜெகமகிழ்மாதே நீயும்வந்
சகியினையாதே மயமுறுந்
சரசசெந்திருவாய் எனக்கொரு
தாமுத்தந்தருவாய்
சுகமதரதியே நிலவொளி
சோதியாமதியே மன்மத
சுகிர்தசித்திரியே மதுரித
துவரிதழ்க்கனியே

தினந்தினந்திணைநெல்தேன் உன்னாரன்
தேடியுமலைக்கேதென் கொஞ்சியே
செய்விதமெனக்கு நிந்தநா
தெய்வமுண்டெனக்கு
அனந்தினங்கசக்கேதென் உனதுதினைப்
புனக்கினக்கிசைக்கென் எனையுன்
அண்டையிற்சேர்ப்பாய் மதனசெய்யுஞ்
சண்டையைத்தீர்ப்பாய்
ஒழுக்கமுமிலையோ வாய்திறந்தொரு
மொழியுஞ்சொல்லாயோ என்னேயும்
உன்னிடஞ்செய்தால் புண்ணியம்
முன்படிமெய்தான்
பழிக்குலக்குறப்போ உன்மனம்
பாறையோயிரும்போ பசுந்தினம்
பச்சிலைநிறந்தாய் தன்றிசையும்
கச்சினில்மறைத்தாய்
சரிவரக்கையா விந்திர
சாலமுமெய்யா வின்றிடுஞ்
சாதனையுனக்கே மன்மதன்
வேதனையுனக்கே
வரிசைதப்பாதே இனிஎல்சொல்
மறந்துசெப்பாதே உன்னுடன்
வருந்திநிற்பேனே என்மன
ஆறுதலைப்பேனே

வள்ளியம்மன்சொல்-விருத்தம்,

எட்டாதபழமிதுவென்றெண்ணிடாமல்
எட்டியெட்டியண்ணாந்துபார்த்துப்பார்த்துக்
கொட்டாவிட்டதனால்வருவதுண்டோ
கூறுதவார்த்தைதனைகூறவேண்டாம்
ஒட்டாதுநீருரைத்தவார்த்தைசும்மா
ஒசிப்போய்நீர்கின்றுலுயிர்க்கோமோசம்
கட்டானகுறவரெங்களண்ணமார்கள்
கானகத்தில்வருமுன்னேகடந்திடாயே

வ-ம். அகோசேருமையாவேடர் நீர்பேசுகிறதைப்பார்த்தால்எட்டாத பழந்திற்குமுடவன்கொட்டாவிவிட்டு அண்ணாந்துபார்த்து ஆசைப்பட்டதுபோலிருக்கின்றது ஆனால்உம்முடையபேச்சிக்கோடாது இதோ என் அண்ணமார்கள்வருவார் சாக்கிரதையாயோடிப்போம்வேடரே,

வள்ளியம்மனுக்கும்-வேடனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

வள்ளியம்மன்-சொல்.

ஆருங்காணும் உமக்
காட்சொன்னதோகபடம்



ஊருமாறிங்கேசெல்லுமோ உன்சம்பர
தாயமென்னைவெல்லுமோ

வேடர்-சொல்.

சீறுதேவள்ளிப்பெண்மேனா உன்
சிநேகமறவேன்கண்மேனா
பாராமற்பேசுகிறாய் சும்மா
பாவையேகைவீசுகிறாய்

வள்ளியம்மன்-சொல்,

விள்ளாதே ஆரிலும் நின்
வீட்டிலிலேயிதெல்லாஞ்சொல்லு
வள்ளியென்றறியாயோ சும்மா
வாதுகள்கூறுவதும்நீயோ

வேடர்-சொல்.

தள்ளிவிழுந்துதன்னை ஆரக்
தள்ளவும்போமோஎன்னை
எள்ளளவாகிலுமே என்மேல்
இரக்கிலையோமனமே

வள்ளியம்மன்-சொல்

ஜல்லிப்பேச்சிங்கேசெல்லுமோ உன்சம்பர
தாயமென்னைவெல்லுமோ
புல்லவுரைக்கவந்தீர் அது
போதுமெங்களண்ணர்தான்வருவார்

வேடர்-சொல்,

சொல்லிற்குறமாதே சிறிச்
சொல்லவும்போகாதே
கல்லாதாவில்லையோ வள்ளி
காயமிதுஞ்சொல்லாயோ

பொது-சந்தவிருத்தம்.

பாங்கிமாருடனேசிரந்திடும்பாவைவள்ளிமுன்னேகுகன்
தாங்கிமேலெனவேகயஞ்சொலுஞ்சாயசாம்பிரதாயத்தால்
ஓங்கியேபாணைசயாய்கிழவோடேகின்றுருமாறியே
வேங்கைமாமரமாகினார் வடிவேலர்மாயதாகவே.

இதுவுமது-முடுகுசந்தவிருத்தம்.

இப்படிமாயவுருத்தொடுவேலிருக்கையின்வள்ளிமுன்னே
ஒப்பொடுவாட்டுடிவிற்கணைவாரியுறத்துடனேவிளைவயல்
செப்பியவள்ளிகலைக்குறவோர்கள்கடிந்தெழுவோர்திரளாம்
கெம்பெனவந்துபுனத்தைவிசாரணைக்கூறியுகந்தனரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் சுப்பிரமணியவேடரும் வள்ளியம்மனு ம்பாங்கிமாருந் தர்க்கஞ்செய்துக்கொண்டிருக்கும்போது அந்தவள்ளியம் மனுடைய அண்ணமார்களுஞ் சிலகுறவர்களும் தினைப்புனம் விசாரணை செய்யவந்தருணங்கண்டு சுப்பிரமணியர் சமீபத்தில்வேங்கைமரமாகியி ருக்க அண்ணமார்கள் வருகிறவிதம்எப்படியென்றால்.

அண்ணமார்-வேடர்கள்வருகிற-தரு-இ-ம்-பரசு

அடதாளம்.

சிலவேடுவர் கானவர் தோன்றினரே
வலைவில்கொலைவாள் கணைதோளுறவே
வாய்ந்தகெண்டை-ரிஜாருஞ்சுந்தர
சாய்ந்தகொண்டை-வசீசரமபெறு (சில)

புலிமான்வருதே பொறுபொறெனவே
பொடிதட்டவுடல்-நுழைத்திடுகணை
யெடுத்திட்டமிக-திடத்துடன்மலை (சில)

கிழலேதுமரமாமரமேதெனவே
தினைக்குத்தனி-யினைத்துத்தினை
கனங்கொண்டியர்-வணங்கண்டெதிர் (சில)

இதுகாணிலையேமரமேதெனவே
இடித்திடற்-கடித்துக்கை
துடித்தப்பொற்-றடிச்சுற்றியே (சில)

அண்ணமார் குறவர்களைப்பார்த்துச்சொல்

விருத்தம்.

நேத்திலிலவேங்கைமர மின்றைக்கேது
நினைத்தவுடன்மாமரமும் வருமோசொல்வீர்
கோத்திரத்திற்பெரியநம்பி ராஜனோடு
கூடவந்தகுறவருமுன் பார்த்ததுண்டோ
ஆற்றின்மனதேதறிவன்சுற்றிப்பார்க்க
அதிசயமாயெல்லோரு மடர்ந்துவாரும்
சீற்றமுடன்வேங்கைமர மிதனைநாமுஞ்
சிதறிக்காய்வெட்டிவொன்றாய்சாக்கலாமே.

வசனம்

ஆ-ஆ-வாருங்கோடீர்குறவர்களே நேத்தில்லாதவேங்கைமரமின்றை க்குவந்தவிதமென்ன எங்கள் நம்பிராஜனும் நீங்களும்வந்தீர்களே அப்போதுதினைவிளைக்கும்போதும பரணைபோடும்போதும் பார்த்ததில் லையே ஆ-ஆ-இதுபுதுமையாயிருக்கிறது இதைவெட்டி ஒன்றாய்க்குவிப் போம்வாருங் குறவர்களே (குறவர்-வசனம்) அதுவப்படியேபோய்ப்பார்க் கலாம் அண்ணமார்களே.



அண்ணமார்குறவர்களும்-வேங்கைமரத்தைபார்த்துச்சொல்லல்.

பொதுகண்ணிகள்-இ-ம்-பந்துவாராளிருபகதாளம்.

வேடர்கோனம்பிராஜன் மைந்தரும் குறவரோடு
விளைந்திடுந்தினைப்புனஞ்சுற்றிப்பார்த்தார்
கூடிக்குறவர்பரணுக்கெதிர்சென்றார் வள்ளித்தாயை
கொண்டாடிமரக்கொண்டுமெய்மருண்டார்
ஏதிதிசயம்வேங்கைமரமென்பார் அதிலேஒருவன்
இரத்துபல்லைக்கடித்துக்கோபிப்பான்
மோதிவெட்டென்றொருவன்சொல்லுவான் அதிலேஒருவன்
முறித்துக்ககத்துவொறுக்குவேனென்பான்
முந்திவெட்டுவேனென்றொருவன்சொல்லுவான் அதிலேஒருவன்
முனைத்தமரத்தின்வளத்தைப்பாரென்பான்
இந்தமரத்தின்மிமிர்த்தஞ்சொல்லுதென்பான் அதிலேஒருவன்
இசைந்தகாதலைப்பார்த்துசொல்லுவேனென்பான்
வேறொருத்தர்கள்செய்ததில்லையென்பான் குலதெய்வநம்ம
வேலர்செய்குறைபோலிருக்குதென்பான்
கூறும்வள்ளியைவேலர்மணஞ்செய்ய வேங்கைமரமாய்க்
குறித்ததென்றிந்தமிமிர்த்தஞ்சொல்லுதென்பான்

விருத்தம்

மட்டிலாவடிவும்வேங்கை மரத்ததினிமிர்த்தங்கொண்டு
வெட்டவொண்ணுதிங்கின்னம் விபரித்துக்கேட்போமென்று
சட்டமாய்புகழ்ந்துவள்ளித்தாயினைமகிழ்ந்துவாழ்த்தி
இட்டமாய்வேங்கைவந்தசேதியேதெனக்கேட்டாரே

வசனம்

இந்தப்பிரகாரம் அண்ணமார்கள் வள்ளியம்மனைக்கேட்க வள்ளி யம்மன்சொல்லுகிறவிதமெப்படியென்றால்

வள்ளியம்மன்-சொல்-விருத்தம்.

தண்டமிழ்வல்லிசெந்தன் றமையரேசொல்லக்கேளீர்
வண்டுறைவனத்தில்வேங்கைமரமதுமுளைத்திருப்ப
துண்டென்றுமில்லையென்று மொன்றுநானறியேனிங்கு
கண்டதுமில்லையித்தக்காரணமறிகிலேனே.

வசனம்.

அகோவாருங்களெனதுயிர்க்குயிராகிய அண்ணமார்களேயானும்பாங் கிமாரும் பட்சிகள்வாராமல் தினைப்புனங் காத்திருந்தோமேயல்லது

ளே

இந்தமரமிருக்கிறதென்றும் இல்லையென்றும் நாங்கள்கண்டதுமில்லை இ
வைதோபுதுமையாகவிருக்கிறது அண்ணமார்களே

அண்ணமார்சொல்-விருத்தம்

நல்லதுநிழலாம்வேங்கை நற்றுணைவள்ளித்தாய்க்கு
அல்லதுவினைவந்தாலு மயிற்குமரேசருண்டு
மெல்லவேமனைக்கோபோறோம் மெலிந்திடாதிருப்பாய்சேதி
சொல்லவேண்டியதெல்லாநீ துரிதமாய்ச்சொல்வாயம்மா

வசனம்

கேளுமம்மாஎங்கள்தங்கையாகிய வள்ளித்தாயே இந்தவேங்கைமர
மிருக்கிறதுநிழலா யிருக்கிறபடியா லிருக்கட்டும் அப்படியாதொருவினை
வந்தாலும் நமதுகுலதெய்வமாகிய வேலவரிருக்கிறார் நல்லதுஇப்போது
நாங்கள்மனைக்குபோகிறோம் நீசொல்லவேண்டிய சேதியெல்லாஞ்சொல்
லுமம்மா வள்ளித்தாயே

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்

அடதாளம்.

வேழ்விமலைக்கரசே சிற்றாரின்
வேடுவவண்ணமாரே பொருள்
தாழ்வில்லாவாழ்க்கையுள்ள என்னிட
தமயரேநீர்கேளீர்

என்றந்தைதாயாரும் என்னைத்தேடி
எங்கிருப்பார்களோ என்னை
அன்சாய்க்கேட்டாரோ அவ்விடத்திலே
அல்லவருஞ்சுகமோ

அன்னைதந்தையிடத்தில் தங்கைசுக
மாயிருக்கிறதென்று நான்
சொன்னபடிபோலே நீங்கள்போய்ச்
சொல்லுவீரண்ணமாரே

சேடியர்பாங்கியுடன் தெய்வபலங்
கொண்டுபுனங்காதது வள்ளி
வாடாமலிருக்காளென்று தந்தையார்க்கு
வண்மையாய்ச்சொல்வீரே

மாடப்புறுவன்னமும் குயிலும்
மயிலுடனேநானும் இப்போ
கூடிப்பிரியாமல் நானிருக்கும்
கோலத்தைசொல்வீர்களே



வள்ளியம்மன்சொல்-விருத்தம்

அங்குள்ளஜெனமுந்தந்தையன்னையுமென்னோடொத்த
மங்கைமார்திரளுஞ்சூழ்ந்தமனிதருஞ்சுகமோவென்று
இங்கதத்துடனேவள்ளியின்பமாய்க்கேட்டாளென்ன
துங்கவில்லுடையீர்நீருஞ்சொல்லுவீர்சொல்லுவீரோ.

வசனம்.

அகோவாருங்க ளண்ணமார்களே அங்குள்ளஜெனமும் தந்தைதா
யாருஞ்சுகமோவென்று நான் லட்சந்திரங்கேட்டு வந்தனஞ்செய்தாளெ
ன்றுஞ்சொல்லுவீர் அண்ணமார்களே(அண்ணமார்-வசனம்)அப்படியே
போய்ச்சொல்லுகிறோமம்மாவள்ளித்தாயே.

பொது-விருத்தம்,

ஒன்றியகுறவரோடுமுயர்ந்திடுமண்ணமாருஞ்
சென்றுதன்பதிக்கேபோக ஜெயமிகுதருணமின்றே
வென்றிசேர்வேலன்கொண்ட வேங்கையின்சொரூபமாறி
மன்றல்மானிடர்போற்பின்னும்வள்ளிமுன்றோன்றினாரே.

வசனம்.

அகோதெப்படிஎன்றால் குறவர்களும் அண்ணமார்களும் தங்கள்ப
தியாகியசிற்றாருக்குச்சென்றபின்பு இதுதான்சமயமென்று சுப்பிரமணிய
ர்வேங்கைமரம் உருவமாறி முன்போலவேடரூபங்கொண்டு வள்ளியம்ம
ன்முன்வந்துசொல்லுகிறவிதங்காண்க.

வேடர்சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

மறக்கமனங்கூடவில்லைவள்ளிமாதே உந்தன்
மையல்கொண்டுவாடுவேனோநானிப்போதே

உறக்கமும்வருவதில்லைஎன்னசெய்குவேன் அன்னம்
உண்ணவுமிரங்கவில்லைஎன்னசெய்குவேன்

குயில்மொழிவள்ளியேநான்கொஞ்சினேனே என்னைக்
கொஞ்சிமுத்தந்தந்தணைவாய்வஞ்சிமானே

மயில்போலழகுடையமாதரசே கூடி
மருவியணையலாகாய்மின்னரசே

நம்பினோர்க்குவஞ்சகஞ்செய்யலாகுமோ உன்னை
நாடிவந்தநானுமனம்நையலாகுமோ

வம்புசேருங்கொங்கைநடுமுண்டில்தானோ முத்து
மாலையாய்க்கிடக்கவரம்பெற்றிலேனோ

துள்ளுமீன்விழியிலிட்டமையதாகவே நானுந்
துலககமாய்ச்சிறந்ததில்லைமெய்யதாகவே

வள்ளியுன்முகத்திற்பூசுமஞ்சளாகவே இப்போ
வந்தனைந்திலலையுன்றன்தஞ்சமதாகவே

வள்ளியம்மன்சொல்-விருத்தம்

வெறும்புளியதனைத்தின்று வீணாய்நாக்கெரிவதல்லால்
வருங்குறியொன்றுமில்லை வாய்புளித்ததுவேமிச்சம்
பருபுல்லைதும்பசிததால் பசும்புல்லுந்தின்னுமோதான்
நெருங்கிநீபேசவேண்டாம் நினைத்ததுமுடியாதண்ணே.

வசனம்,

கேளாவண்ணேவேடரே வெறும்புளியைத்தின்றால் நாவெரியுமல்லவோ அதினால்வருவதொன்றுமில்லை அப்படிபோல புலிபசித்தால்புல்லைத்தின்னுமா ஆகையால் நீநினைத்ததுமுடியாது வீண்வார்த்தை பேசவேண்டாம் அண்ணேவேடரே.

வேடர்சொல்-விருத்தம்,

செப்புமலரணையிலுன்னைச்சேர்த்தணைத்துக்கொள்வேன்
தேன்மொழியேநகைகலைத்திறமாய்ச்செய்வேன்
ஒப்பெனவுன்றுயிருமெனதுயிருமொன்றாய்
உகந்தமலர்வாசமும்போலுவந்துதான்றாய்
தப்பிதமில்லாதிருப்போமென்றேயெந்தன்
தகப்பன்மேலாணையிட்டுத்தருவேன்பெண்ணே
எப்படியும்நின்கருணையிரங்கியிங்கே
இப்போதேகன்முகூர்த்தமினக்குவாயே

வசனம்-

ஆ-ஆ-பெண்ணே உன்னைசப்பிரகூடமஞ்சத்தில்சேர்த்துபூவின்வாசம்போல் மன்மதனுடைய லீலையைச்செய்வேன் ஆனால் என்பேரில் சந்தேகம்வேண்டியதில்லை அப்படிநம்பிக்கைவேணுமானால் எனதுதந்தையின்பேரில் பரவசஞ்செய்துதருகிறேன் நம்புவாயிதானல்லநல்லமுகூர்த்தவேளையானபடியால் இணங்கடிபெண்ணே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி

அடதாளம்.

என்னவார்த்தைபேசுகிறாய் அண்ணா வேடா
நானசிக்கமாட்டேன்
பின்னேயும்வாய்மொழிகேட்கிறாய் இது
பித்தர்பயித்தியமல்லவோ
காட்டில்வேட்டைகிட்டுமே அல்லாதிந்த
கன்னிவேட்டைகிட்டுமோ
தலைபாட்டிப்பேசுகிறாய் இதற்கெல்லாந்தா
ளாட்டாளியல்லவண்ணே இதற்கெல்லாக்



கொல்லத்தெருவிலாகி மெய்பாய்விலே
கூறுகிறாய்பேசி
ஜல்லியும்படிபாதே வந்தவழிநீ
தான்போகச்சகியாதே
போறாற்றுக்குத்தெருவில் சன்னதிபிச்சைப்
போடுவாரொருமுண்டோ
ஜாதிமார்க்கந்தெரிந்தும் என்முன்னின்று
ஜன்மடித்துளம்பேசுகிறாய்
வடிவற்றகுறச்சாதி அதிலேநானும்
மார்க்கமொருசொல்நீதி
தடிக்குவார்த்தைபேசுகிறாய் இதுதகாது
சும்மாயேனேசுகிறாய்

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

வேடரேஎன்முன்னேநீர்வேளேனுமதன்போல்நின்று
ஜாடையாய்பேசிவந்தீர் தாழ்குலமென்றெண்ணுமல்
ஆடகத்தழுத்துவச்ரமதனைபித்தளையிற்பதித்துச்
சூடுவாருண்டோநீர்தான்சொன்னதுதகாதுதானே,

வசனம்.

ஓகோவேடரே தங்கத்திற்பதிக்கின்ற வச்சிரத்தைப் பித்தளையிற்பதித்துச்சூடுவாரா அதுபோலநீரோஉயர்க்தகுலம் நானோ தாழ்ந்தகுலம் இந்தகுறப்பெண்ணைப்பார்த்து ஆசைப்படுவதுசரியல்ல ஆனால் என்குலத்தில்விருந்தாக்தந்சொல்லுகிறேன்கேளுமண்ணேவேடவரே.

வள்ளியம்மன்சொல்லுகிற-ஆனந்தக்களிப்பு.

இன்னமின்னம்விரித்துரைக்கக்கேளு வேட
அண்ணாவெங்கள்குலவாடிமெக்காளும் (இன்)
காட்டுமான்பிணையதனைப்பிடிப்போம் மாட்டில்
கறந்தபால்மலையிலுள்ளத்தேனமிர்தங்குடிப்போம்
குட்டிணைச்சிகேட்டுவாய்துடிப்போம் கட்டுத்
துஷ்டமிருகம்வணங்கசொன்னபடிமுடிப்போம (இன்)
குழலிற்குள்ளேதழைதரித்துக்கொள்வோம் உறவு
கூடாதவெண்களையுங்கூட்டிவைத்துப்பிரிப்போம்
மழைபொழியவருணனையுச்சரிப்போம தாழை
மடல்குடிலைச்சுமந்துபலமலையிற்சஞ்சரிப்போம் (இன்)
சங்குமணிபலதுபணிபூட்டோம் குறவர்
தாழ்ந்துபோனாலவர்தன்னையுங்கூட்டோம்
எங்கள்வித்தைகயொருவருக்குங்காட்டோம் குலத்துக்
கிசையாதவார்த்தைபெவர்சொன்னாலுங்கேட்டோம் (இன்)

வள்ளியம்மன் சொல் விருத்தம்,

கொம்புத்தேன்களிரசமுங்குடிப்போமநாங்கள்
கடாதபெண்களையுங்கூட்டிவைப்போம்
வம்புக்கேசண்டைசெய்யோமதங்கள்பேசி
வலியவந்தசண்டையையும்விடவுமாட்டோம்
நம்பிச்சேர்ந்தவரையடைக்கலமாய்க்காப்போம்
நல்லசங்குமணிபூணோவாயிதுவேமார்க்கம்
சொம்புற்றேகெம்பாவலிருப்போம்சொன்ன
சொற்றவறுக்குறவர்குலகதோகைநானே.

வசனம்

கேளுமையாவேடரேஎங்கள்சாதியினியவழக்கம் காட்டில்மிருக சாதிகளைப்பிடித்துச்சுட்டுதின்கிறது மலையிலுள்ளகனிவர்க்கமும்கொம்புத்தேனுஞ்சாப்பிடுகிறது கூடாதபெண்களைக்கூட்டிவைக்கிறது எங்கள் தொழிலைமற்றொருவருக்குக்காண்பிக்கிறதில்லை நம்பி யடைக்கலமானவரைகாட்டிக்கொடுக்கிறதில்லை நாங்கள் தரிக்கிறசங்குமணியல்லாதுவேறேமணிதரிக்கிறதில்லை அதிலும்நான்மானமுள்ளவள் ஆனபடியால்நீர்பேசுகிறவார்த்தைசரியல்லபோம்போம்வேடரே.

வேடர்சொல்-விருத்தம்.

அறக்கொடுமைசெய்பாதபழிக்காரிநின்
அநியாயமுழுச்சமர்த்திங்காகுமோதான்
உறக்கமிலையோநிலெண்ணியெண்ணி
உள்ளமெலாமுருகுகடிதிரும்பிப்பார்த்து
திருக்கருணைபரியமாமிரும்போகல்லோ
தெய்வமில்லையோவெந்தனதிறத்தைப்பாரு
குறக்கொடிநானினைத்தபடியேயானுன்னைக்
குவித்துமணஞ்செய்துசெஞ்சிற்குடிவைப்பேனே,

வசனம்.

அகோவாராய்என்மனோரஞ்சிதமானவள்ளிப்பெண்ணே நான் உன்னைஎத்தனைதிறவருந்தியும் உன்மனமிரங்காதது என்ன இரும்போ கல்லோ ஆனால் எனக்குந்தெய்வமில்லையோ நல்லதுநீ பேசுகிறது ஒட்டாமல்பேசுகிறாய் இப்போதுன்னைக்கல்யாணஞ்செய்யாமல்விடுவேனோ ஆயினுமென்திறத்தைப்பாரும்வள்ளிமானே,

வேடனுக்கும்-வள்ளியம்மனுக்கு
தர்க்கம்-கண்ணிகள்-இ-ம-சங்கராபரணம்-அடதாளம்

வேடர்சொல்லல்,

உன்னைமணஞ்செய்குவேன் உன்னைவிட்
டொருபக்கம்பான்போகேன் என்னை



அன்றிபனென்றுநினைந்துக்கொண்டால்·எனக்
காதரவெக்குமுண்டோ

வள்ளியம்மன்-சொல்லல்.

ஆதரவென்றுசொன்றாய் எனக்கிங்
கடுத்தகிளையோ
பேதகம்பண்ணினால்நான்சகியேன்இனிப்
பேசாமலோடிப்போபோ

வேடன்-சொல்லல்.

ஓடிப்போவென்றுசொன்னாய் எனக்கு
உயிர்கிலையிங்கிருக்க என்னைக்
கூடிக்குலாவிநீகொஞ்சிக்கொண்டால்உன்
குருக்களுக்கேபுண்ணியம்

வள்ளியம்மன்-சொல்லல்.

புண்ணியமுந்தவமும் மடக்கனிற்
போனாற்செய்வார்களே இந்தஆ
ரண்யவனந்தனிற்புண்ணியஞ்செய்யென்றால்
யாரிங்குசெய்யப்போறார்

வேடர்-சொல்லல்,

ஆரிங்கேயென்றுசொன்னால் நீயல்லால்
ஆசரவெங்குமுண்டோ என்னைச்
சேருமபடிகிகீநடபிக்கொண்டால்உன்
சினேகமறவேன்பெண்ணே

வள்ளியம்மன்-சொல்லல்,

ஆற்றமாட்டாமலே மதிகெட்
டலைகிறாய்தொண்ணூந்து சும்மா
பிற்றுமற்போவுந்தன் மட்டுமக்குந்தக்கதாய்
பேசினாற்கோபம்வரும்

வேடர்-சொல்லல்

கோபமுள்ளயிடத்தில் அதிகக்
குணமுண்டென்பார்களே மனத்
தாபம்பொறுத்தெந்தன்சஞ்சலந்தீருந்தான்
தன்னாளாயிருப்பேன்

வள்ளியம்மன்-சொல்லல்,

தன்னாளாயிருக்க எனக்குநீ
தாய்தகப்பன்கிளையோ பேச
வொண்ணாதேமெத்தமின்றே இனி
உன்றலென்றதைப்பார்

வேடர்-சொல்லல்.

கட்டாத்தின்கோணையைப்போல் — மயக்கி
காணுந்தயங்கிறேனே — சற்றும்
ஒட்டாமற்பேசுகிறாய்கிட்டேரிஎன்மீ
திருக்கமில்லாதவென்ன

வள்ளியம்மன்-சொல்லல்.

நற்கனிவேழ்விமலே — சிற்றூர்நம்பி
ராஜன்வளர்த்தெடுத்த — வர்ணப்
பொற்கிளிநானுந்தன் கைக்குள்கப்பட்டேனே
போபோகில்லாதே

வேடர் சொல்லல்,

பஞ்சைபனுதியைபோல் — காலிக்கு
கெஞ்சிகிக்கின்றேனே — சற்றும
கெஞ்சிரங்காமலேபஞ்சமாபாதகி
கிலைாதேபோபோவென்றாய்

வள்ளியம்மன்-சொல்லல்

வாய்மதம்பேசாதே — உனக்கு
மரியாதைதக்காது. — சற்றும்
காமதஞ்செய்யாமலோடிப்போகிட்ட
ஜாதகஞ்செய்யாதே

வேடர்-சொல்லல்.

ஜாதகமல்லபெண்ணே — உன்னைநான்
தழுவிப்புணரவந்தேன் — சும்மா
வாதுபண்ணுமலென்னைக்கிட்டவாவென்றால்
வாய்முத்துசிந்திடுமோ

வள்ளியம்மன்-சொல்லல்

வாயும்வலியாதோ — உனக்கு
மனமும்உருகாதோ — நான்
ஓயாமலேசியும்ரோஷமில்லாமலே
உன்மனம்பேசுகிறாய

வேடர்-சொல்லல்.

தாவித்தயங்கிறேனே. — கெஞ்சித்
தவித்துமயங்கிறேனே — இனி
நீவைத்தவிடேனிக்குமென்றேகிலே
நிற்கவும்பேர்வைத்துக்கொள்

வள்ளியம்மன்-சொல்லல்,

கோரணிசெய்யாதே — இதுவரைக்
கோபமெபொறுத்திருந்தேன் — இனி



ஆரென்றும்பாராமல்பாங்கியைவிட்டு
அடித்துவிரட்டச்சொல்வேன்

வேடர்-சொல்லல்,

அடித்திடவென்றுசொன்னால் — எனக்கு
அவளவுலட்சம்பொன்னே — முன்
பிடித்திடும்பிட்டுக்குமண்சுமந்தேயடிப்
பெற்றதுஞ்சொக்கரன்றோ

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

நற்குணத்துடனேநீயுநடந்துபோவல்லவென்றால்
தர்க்கம்பண்ணுதேயெந்தன் தமையன்மார்வருவார்வந்தால்
விற்கரதுடையவாளால் வெட்டுவார்முகம்பாராமல்
மற்குறியெதிர்நில்லாதே வருங்குறிசொன்னேனண்ணே.

வ-ம். சேனாய்அண்ணேவேடரே என்னோடேநீதருக்கம்பண்ணுகிற துசரியல்ல எனதுஅண்ணமார்கள்வருவார் வந்தால் அம்பாலேயதுகொலைசெய்வார்கள் ஆனபடியால் தப்பித்துபோவாயண்ணே.

பொது-விருத்தம்.

கொடியிடைவள்ளிமிக்க கோபமாய்வேடர்முன்னே
துடியதாய்வார்த்தைசொல்லித் தூரப்போவென்றபோது
கடிமலக்கட்டப்பந்தான் கணவனைசுமந்தசெட்டி
வடிவதாய்வள்ளிமுன்னே வந்தெதிர்தோன்றினரே

வ-ம்- இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் வேடனைதூரப்போய்விடென்றுசொல்ல சுப்பிரமணியர்வேடனுயிருந்தவுருமாறி வள்ளிமுன்புவளையல்விற்குஞ்செட்டியைப்போல் வருகிறவிதங்காண்க.

வளையல்செட்டி-வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வளையல்செட்டியும்வந்தான்-வள்ளிமுன்பாக
வளையல்செட்டியும்வந்தான்

அநுபல்லவி,

கிளைகிளையாய்த்தொங்கும் வளையல்பெருங்கனை
கீர்த்தியுடனெடுத்துப்பார்த்துத்தோள்மீதிட்டு — வளைய

சரணங்கள்.

தலையிற்பாகையுமணிந்து-நெற்றியில்நாமம்
தான்விளங்கவேதுணிந்து
நிலையாய்க்கட்டிளிகளைநேர்த்தியுடன்போர்த்தி
நீணிலமாதருக்குநேராய்வளையலிட
நிகநிகவென்றுபலவளையல்கொண்டுவிலை
செகதலந்தனிலேருகனுமங்கூறி
திகழுங்கானகத்திலிருக்கும்வள்ளியிடம்
நேரதாகவிலைகூறியேயவிடம் — வளைய

வளையல்செட்டி-வளையல்விற்கும்-கண்ணிகள்

இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

வளையல்செட்டி-சொல்லல்,

கனகவளை நீலவளைகொள்விரோபெண்காள் நல்ல
கறுத்தவளைபச்சவளைகொள்விரோபெண்காள்
மனதிற்கொத்தரத்னவளைகொள்விரோபெண்காள் உங்கள்
வரிசையோடுதனக்கொடுத்துக்கொள்விரோபெண்காள்

வள்ளியம்மன்-சொல்லல்.

கொள்கிறேன்காண்வளையல்செட்டிகில்லுகில்லுங்காண் இப்போ
கோலவளையலிதோகொள்வாரேன்காண்
தெள்ளுந்தினமாவுந்தாரேன்வளையல்தொடுங்காண் கவனைச்
செட்டியேபரணிரக்கியிதோவந்தேன்காண்

வளையல்செட்டி-சொல்லல்,

மடற்கொடியேகுறமாதேகிட்டவேநேராய் நல்ல
வார்த்தைகளைப்பேசியெந்தனருகினில்வாராய்
கொடியிடையேவள்ளியாதேகையைநீட்டடி உந்தன்
கும்பமுலைச்சோடெனக்குச்சற்றேகாட்டடி

வள்ளியம்மன்-சொல்லல்.

அடியேபாங்கிமின்னார்களேசேதிகேட்டீரோதான் இந்த
அகந்தையானவளையல்செட்டிமிரட்டிப்பேசுகிறான்
பிடியடிபாங்கிமார்களேஇவனையேநீங்கள் பொல்லாப்
பித்தனைப்பிடித்தப்படித்தள்ளிவிடுங்கள்

வ-ம். அகோவாருங்களடிபாங்கிமார்களே இந்தவளையல்செட்டிசொன்ன அகந்தையானவார்த்தைகளைப்பார்த்தீர்களா அடாவளையல்செட்டி என்னவார்த்தைபேசினாய் நல்லதாகட்டும்அப்பாலேபோடா.

வள்ளியம்மனுக்கும்-வளையல்செட்டிக்கும்

சம்வாதம்-கண்ணிகள்-சௌராஷ்டிரம்-அடதாளம்

வள்ளியம்மன்-சொல்,

வாடாவளைசெட்டித்தினைப்புனத்தில்வந்ததேது
போடாவதிசுருக்காகவென்புகழ்ண்ணார்கள்வருவார்

வளையல்செட்டி-சொல்.

வந்தால்வளைதாரோனுந்தன்மணிவாயிதழ்ந்தால்
சுந்தரருனுண்டுஅடிகானக்குறமானே

வள்ளியம்மன்-சொல்.

சுந்தரருனிருக்கநீதானுசொல்லவேண்டும்
இந்தமுறைபேண்டாஎங்களண்ணார்வெகுசூரர்



வளையல்செட்டி-சொல்.

சூரர்வந்தாலொளிவேனுந்தன்ஜோடுமுலைத்திரையில்
மாரன்செயும்வினைதீர்த்திடுமாதேநீயிப்போதே

வள்ளியம்மன்-சொல்.

கெறுவத்தோடிவாறுகூறியகவனைச்செட்டிநீதான்
இறந்துசொல்லிநீமுடியாதடாதெண்டாளடிப்படுவாய்

வளையல்செட்டி-சொல்,

அடித்தாலுனையிறுகக்கட்டியணைப்பேனடிமானே
பிடித்தபிடிவிடுவதில்லைப்பேதகம்பண்ணியாதே

வள்ளியம்மன்-சொல்,

தூர்த்தசெட்டியுந்தனிடதுடுக்குசொன்னவாயை
அடக்கும்படிசெய்யவெங்களண்ணமார்கள்வாரார்

வளையல்செட்டி-சொல்.

குறவர்தம்மையழைத்தாலடிகூறுவேண்டிவளையல்
பருவமுள்ளமாதேயிளம்பாவைபசுந்தேனே

வள்ளியம்மன்-சொல்.

கூறுதடாசெட்டிமலைக்குகையிலொளிந்திருடா
மாறுகவேஎன்அண்ணமார்கள்வருவார்கள்

வளையல்செட்டி-சொல்.

சிறைதமாமலைக்குகையுலொளித்திடவேசொன்னாய்நீயே
மாதேயிந்தவார்த்தைக்கெல்லாமயங்குவேனோ

பொது-விருத்தம்,

மூர்க்கமிகுங்குறவரிங்குவருவாரென்றும்
முதுகடிமேலடிநெருங்கிவிழுமென்றும்
நீர்க்கமுடன்வளையல்செட்டிதனக்குச்சொல்ல
சேனையுடனக்கணத்திற்குறவர்வந்தார்
மார்க்கவள்ளியஞ்சிநின்றாளங்கேவேலர்
வளையல்செட்டிகோலம்விட்டுமாதவர்போய்
ஆர்க்குமெய்யென்றிருந்திடவெண்ணீறுஞ்சாத்தி
ஆண்டான்காம்போற்குறவர்முன்னாடினாரே

இதுவுமது-விருத்தம்.

பஞ்சுபோற்றலைகளைத்துவுடற்சுருத்துப்
பதறியேநெங்கிக்கிழவன்போல
மிஞ்சிவெகுதலங்களெல்லாஞ்சுற்றிவந்த
மிகுந்ததபோதனமெனவும்வேடங்கொண்டு
மஞ்சள்வெயிற்றுங்காறுகுடைபிடித்து
மாத்திரைக்கோலேந்திவருமழிதள்ளாடி
தஞ்சமென்றேகுறவர்முன்னாண்டானையா
தன்மகள்ளிக்கொண்டாடித்தான்வந்தாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்வள்ளியம்மனிடத்திலவ ளையல்செட்டிவாதாடிக்கொண்டிருக்குஞ்சமயத்தில் அவிடம்தினைப்புன த்திற்குறவராகிய அண்ணமார்வருவதைக்கண்டு வள்ளியம்மன் பயந்து நிற்க அப்போதுவளையல்செட்டியாயிருந்த சுப்பிரமணியர் குறவர்முன்பு ஒருபெரிய பண்டாரக்கிழவனைப்போலுருவங்கொண்டு வருகிறவிதங்கா ண்க.

பண்டாரக்கிழவன்வருகிற-தரு-இ-ம்

மோகனம்-ஆதிதாளம்.

வேலர்பாசாங்குகொண்டுவந்தார்-கிழவனைப்போல
வேலர்பாசாங்குகொண்டுவந்தார்
காலமறிந்துயிந்தரஜாலம்புரிந்திடும்வி
சாலம்பெரும்பண்டாரக்கோலங்கொண்டுதள்ளாடி — வேல

முக்தித்தேகம்பழுத்துத்தண்டுகொண்டூன்றிப் — பெரு
மூச்சுவிட்டிடவாய்மருண்டு — விழுந்துகால்கள்
தெத்தித்தத்திமெள்ளக்கிடந்து — நூறுவயது
சென்றகிழவன்போல்நடந்துபண்டாரம்போலே — வேல

காதில்குண்டலங்களும்பூட்டி — கிழிந்துமெத்தக்
கந்தலாயொருகாவிவேட்டி — புனைந்துவேடர்
பேதைமயங்கும்புத்திகாட்டி — குளறிமொழிப்
பேசிக்குறவர்கள்முன்காசிப்பண்டாரம்போல — வேல

கன்னத்தோடுகன்னங்களொட்டி — பற்களெல்லாம்போய்க்
கடைவாய்வழியேஎச்சில்கொட்டி — உன்னியுன்னியே
குன்னிருமற்போருமல்மூட்டி — இலேற்பய்கண்ட
கூனிக்கிழவன்போலக்கானக்குறவரிடம் — வேல

காசிக்குவடக்கேநான்சென்றேன் — அலைந்தலைந்து
காவின்மூலையற்றிவாண்டேன் — அப்போநீங்கள்
பேசிக்கொண்டிருந்ததுகண்டேன் — என்றனைக்காத்து
பெறுகும்புண்ணியஞ்செய்தால்முருகனுண்டென்று — சொல்லி

விருத்தம்.

கவடுருவாய்க்குமாரகுருகிழவனைப்போல்
கம்பூன்றிப்பாசாங்குகாட்டிநின்று
நவமிகுந்தவேழ்விமலைக்குமிலைமந்தர்
தன்கையில்விபூதிகொடுத்தாரப்போது
சிவசிவாவென்றணிந்துகொண்டு அய்யாவெம்மைத்
தேடிவந்தகாரியமேதென்றாரங்கே
புவமகலகன்னியாகுமரித்தீர்த்தமாடிப்
பலம்பெறவந்தோமெனவும்பகர்ந்திட்டாரே



வ-ம். இந்தப்படி சுப்பிரமணியக்கடவுள்கிழவனைப்போல் வடிவங் கொண்டு கையில்தடியூன்றிகுறவர்முன்புவந்து அவர்களுக்குவிபூதிகொ டுக்க அவர்நெற்றியிலணிந்துகொண்டு சுவாமிநீர்மெத்தப்பெரியவராயிரு க்கிறீரே எங்களைத்தேடிவந்தகாரணமென்னபண்டாரக்கிழவன்நான்கன் னியாகுமரி தீர்த்தமாடிப்பலம்பெறலாமென்றுவந்தேன் என்றுசொன்னா ர் அதன்பின்கிழவர்கள்கேட்கிறவிதமெப்படியென்றால்.

குறவர்சொல்-வசனம்,

சரணஞ்சரணம் அகோவாரும்சுவாமி பெரியவரே நீரெந்தெந்தத்த லங்கள்போய்வந்தீர் அதையெங்களுக்குத் தெரியச்சொல்லுமையாசுவா மிபெரியவரே,

கிழவன்சொல்-விருத்தம்.

கண்டிகதிர்காமம்வடகாசியாரூர்
கதியருணைத்தளத்திருவேரகமுமற்ற
எண்டிசையிலுள்ளதலமெல்லாஞ்சுற்றி
இசைந்துவந்தோமிவடமதிலதிகசேர்வை
உண்டுகன்னியாகுமரித்தீர்த்தந்தோய்ந்தால்
உடற்றேறுங்கவிநீருஞ்சென்றுகண்டு
கொண்டுவந்தால்நல்லதென்றுமெள்ளவேகிக்
கொள்கையுடன்வந்தேனிதைகுறித்திடீரே

வ-ம், கேளுமப்பாகுறவர்களே நான்கண்டிகதிர்காமம்காசிமுதல் ப லதலங்களுஞ்சுற்றிவந்தேன் இவிடம்கன்னியாகுமரிஇருக்கிறதாய்ச்சொ ன்னார்கள் ஆகையால் இங்கேகன்னியாகுமரிக்குவந்தஇடத்தில் உங்களை க்கண்டேனப்பாகுறவர்களே.

குறவர்-அண்ணமார்கள்சொல்-விருத்தம்.

நாங்கள்செய்தபாக்கியந்தானோசுவேதாந்தனேநீர்
கோங்குபூம்புனத்திலெங்கள்குலதெய்வம்போலேவந்தீர்
பாங்குறுங்காடுசிங்கம்பாதையீதும்மையென்றந்
தீங்குசெய்யாமலிங்குசேர்ந்ததுதன்மைதானே

வசனம்

அகோவாருமையாசுவாமி நாங்கள்செய்தபாக்கியமோ எங்கள்வன த்திற்குலதெய்வம்போலேவந்தீர் ஆனால் இந்தவனத்திலகாடிநாய்களு ம்மைவழியில் பட்சிக்காமல்விட்டது மெத்தநன்மையாச்சுது உம்மைக்க ண்டதுநாங்கள்செய்த புண்ணியவசந்தானையாபெரியவரே.

குறவர்சொல்-கண்ணிகள்-இ-ம்-ஆகிரி-அடதாளம்

ஐயாவேபண்டாரசுவாமிஆண்டவரோசந்யாசி — மாரோ
செய்ததவமுந்தானோவெங்கள்தெய்வம்போலுவந்தீ — ராயா
வெகுதூரம்போயலைந்துவேர்த்திளைத்துவந்தீ — ராயா
செகமீதிலும்மைப்போற்பரதேசியெங்குகாணோ — மையா
நாங்கள்செய்தபுண்ணியந்தானோவடியேவந் — தீரோ
தீங்கில்லாதெங்களுக்காகக்குதெய்வம்போலும்வந்தீ — ராயா

கன்னியாகுமரியாடகாடோடலைநது விரோ
உன்னியிரும்பும்போதுந்தன்உயிர்போவதாகுதே சுவாமி
தன்னந்தனியேவனத்தில்சார்ந்தவந்தீரெங்க ளிடம்
சாவுகிறகாலமெங்கே தாங்கலைப்போவ தையா
கானகத்தில்நாங்களும்மைக்காக்கவுந்திற யில்லையோ
தேவரிருந்தவந்தபோதேசெய்ததும்பாவங்கள் போச்சு
வேழ்விடமில்லவேடர்நாங்கள்வேலவர்க்கடிமை யாகுந்
தாழ்விலலைமரியாதைநக்குறச்சாதிராங்களது காரி
ஆண்டவரேநீங்கவாரும்அடிமைநாங்கள்செல்லக் கேளும்
தாண்டாவிராக்கெடுத்தாப்போல்சொல்லுகிறோம்போற்றி கேளும்
வள்ளியென்றோர்தங்கையுண்டுகுறவஞ்சிமனதன்பு முண்டி
மெள்ளவிம்மாளவாருந்தினைவிளைவதனைப்பாரு மையா

வ-ம். அகோவாருமையாபண்டாரசுவாமி நீர்இப்போதுசாவுகிறகாலத்தில் கன்னியாகுமரிக்குஎங்கேஅலையப்போகிறீர்வேண்டாம் எங்கள்தங்கைவள்ளிநாயகி தினைப்புனங்காத்துக்கொண்டிருக்கிறாள் அவளுக்கு நீர்தெய்வம்போலக் கூடத்துணையாயிருந்தால் நீர்கேட்டதெல்லாந் தருவாள்இப்போது அங்கேபோவோம்தினைப்புனத்துக்குவாருஞ்சுவாமி.

பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்.

வள்ளியெனும்பெண்ணொருத்தியங்கேயுண்டு
வளர்த்ததினைப்புனமென்றோர்வனமுமுண்டோ
கள்ளமொழியோவிசம்மொசொன்னீரிக்குக்
கானகத்திற்குவளத்தைக்காட்டியென்னை
மெள்ளமெள்ளநடத்திவிளையாட்டுக்காட்டில்
வேலையிலந்தச்சிமாட்டிமுன்னேவிட்டு
தள்ளிநில்லென்றிகழாமற்காக்கச்சொன்னால்
தருமமுண்டுகுறவர்குலத்தலைவமாரே

வசனம்,

ஓகோகுறவர்கள்தலைவமாரே அங்கேவள்ளியென்ற பெண்ணொருத்தியிருக்கிறாளோ தினைப்புனமுமுண்டோ நிசமாயிருந்தால்அந்தவள்ளியிடத்திலென்னைக் கூட்டிச்சென்றுவிட்டு நான்கேட்டதெல்லாம்தரும்படிசெய்தால் அவள்கூடநானுங் காவலிருப்பேன்வேடர்களே,

குறவர்கள்-வசனம்,

அப்படியேநல்லபாக்கியம் வாருமையாகிழவனே
அண்ணமார்-வள்ளியம்மனுக்குச்சொல் விருத்தம்

கூவுமயிலேவள்ளித்தாயேயென்றார்
கோகிலமேமயார்வசனங்கூறக்கேளாய்
ஆவெனப்போல்நீங்கியுடறன்னாடி
யாண்டார்பண்டாரமமையடுத்துவந்தார்



பாவம்வரும்கிழவனைநீங்கியாதே
பரண்மீதுவைத்தவர்தான்கேட்டதெல்லாம்
ஓவியமேதாழ்வுவராமற்கண்பார்த்திங்
குதவுவையேஎங்கள்தங்கைவள்ளிமானே

வ-ம், கேளுமம்மா எங்கள்தங்கையாகியவள்ளித்தாயே நாங்களொருவார்த்தைசொல்லுகிறோம் இந்தப்பெரியவர்மகாவுத்தமர் இவரைநீகூடப்பரண்மீது காவல்வைத்துக்கொள்ளு இவரைநிந்திக்காதே இவர்மெத்தநல்லவர் செவ்வைபர்ப்பார்த்துக்கொள்ளுமம்மாதாயே (வள்ளியம்மன்வசனம்) அப்படியேநல்லபாக்கியம் எனது அண்ணமார்களே.

பொது-கண்ணிகள்-இ-ம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்

ஆண்டாரைப்பணிந்துபசியாற்றிவைத்து
காத்திடுநீயென்றார் நல்ல
அறிவுடையநம்பிமைந்தர்குறவர்களுந்
திறமுடனேசென்றார்

தூண்டாதமணிவிளக்கின்சுடரொளியாள்
வள்ளியுஞ்சம்மதித்தாள் அங்கே
தொண்ணூறுவயதுசென்றகிழவன்முன்னே
பரணைவிட்டுக்குதித்தாள்

ஒப்பாருமில்லாதிந்தகிழவனுக்கேஎன்
றெதிர்ப்போய்க்கண்டாள் நல்ல
ஒருமையுள்ளபெரியவரென்றுகருதிவள்ளி
மனதிலன்புகொண்டாள்

தப்பாமற்றமையர்சொல்லைத்தள்ளாமற்
புகழ்ந்துவள்ளிமின்னாள் ஆண்டார்
தன்னைவாரும்பரண்மீதிலுன்னியேறு
மென்றுவள்ளிசொன்னாள்

வள்ளியம்மனுக்கும்-கிழவனுக்கும்-ஏசல்-கண்ணிகள்
இ-ம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்.
வள்ளியம்மன்-சொல்லல்

பருத்துறைச்சுப்பழுந்ததொந்திப்பண்டாரப்
பெரியகிழவனே
பலவிட்டிலன்னமென்றுப்பசியறிந்து நீரும்
போசனஞ்செய்வீரோ
விருத்தரோபிரிளைத்தீரோவெகுநேரம்
பசிபொறுத்தீரையா
வெற்றிமலரடிபணிந்தேன்சற்றேபொறும்
பசிதீர்ப்பேன்மெய்யா

பண்டாரக்கிழவன்- சொல்.

ஆட்சியன்னபூரணியே ஆதிலட்சுமியே
அமராபதிபோவள்ளி
அன்னமேயென்வயற்றப்பசியுன்னைகெஞ்ச
விட்டுதெந்தன்விதியே
காட்சியில்லைகுசனாளாற்றமைத்திருப்பா
யென்பசியைத்தீர்ப்பாய் இந்தத்
தருணமுள்ளவேளையிலேஅருமையாயென்
னுடல்தேற்றிக்காப்பாய்

வள்ளியம்மன்-சொல்,

நல்லநையாபண்டாரமேநானுமக்குப்
பசிதீர்ப்பேனென்றேன் திணை
நற்கதிர்கொய்தேமிதித்து அக்கரையாய்
நான்தருவேனின்றே
வல்லிமுந்துபோற்கலந்தமணிபிரித்தத்
திணைக்கதிரைக்கொய்வேன் காவின்
மடக்கிமிதித்தேபொதியைவாரிக்குத்தி
உமிபோகச்செய்வேன்

பொது-மேற்படி-கண்ணிகள்,

தங்கவளைகுலுங்கமெள்ளத்தான்சிரித்து
மாவிடித்தாள்வள்ளி இரு
கொங்கைகள்குலுங்கவிடைதுவளவோங்கி
செந்திணைமாவுந்தெள்ளி
பொங்குரசத்தேனைவிட்டுபுனிதமுடன்
பிசைந்துண்டைசெய்தாள் வாங்கிப்
பொசியுமையாவென்றுவள்ளிபசிபொருந்தும்
கிழவனுக்கேகொடுத்தாள்,

இதுவுமது-விருத்தம்,

தின்னுமிகுந்தேக்கிலையுங்கொண்டுவந்து
திணைமாவைவைத்துவள்ளித்தேவிதானும்
உன்னுமென்றாள்பண்டாரக்கிழவன்வாங்கி
ஒருவுருண்டைமாப்புசித்தவுடனேஎந்தன்
கனவிழிகள்பிதுங்குவதுவாய்க்கசக்குதென்ன
கபடமோவல்லதுவென்காலந்தானோ
தண்ணீர்கேட்குதுவயறுகலக்குதென்றே
தயங்கிவள்ளிமுன்னுளறிமயங்கினரே

(வ-ம)இந்தபிரகாரம்வள்ளியம்மையரான்விட்டுக்கிழிறங்கி பண்டாரதைக் கூப்பிட்டுஅவர்பசிக்குதெனவல்லதுபசியைத்தணிக்கிறேனென்றுவள் ளியம்மன் திணைக்கதிர்கொய்துகுத்திமாவாக்கிதேன்விட்டுபிடு



ரைந்துஉருண்டைசெய்துதேக்கிலையில் வைத்துக்கொடுக்கப்பண்டாரு சாப்பிட்டவுடன் தொண்டைநெருக்குது வாய்கசக்குதென்றுதியங்கிமய ங்கிதாகத்திற்குத்தண்ணீர்கேட்கிறவிதங்காண்க.

பண்டாரக்கிழவன்சொல்-கண்ணிகள்-இ-ம-காம்போதி.

அடதாளம்.

தண்ணீரில்லாமற்றவித்துப்பறக்குதென்னாவி உன்மேற்
சத்தியமாய்நாவைசுற்றிவறட்டுதேபாவி
உன்னாலுறண்டுவுழன்றிறேன்மூச்செறியுதே உடல்
ஓட்டிப்பல்லோடுபற்றிட்டியென்னாவிகுறையுதே
பித்துக்கொண்டாற்போற்கிறுகிறுத்துத்தலைசுற்றுதே பத்தி
பேதகமாய்ச்செவிபடைகதுத்தொண்டைநீர்வற்றுதே
மூக்கித்தண்ணீர்த்தாகமெத்தவெடுக்குதேபாதகி என்னை
மோசஞ்செய்யக்கூடிப்பேசினதோகஷ்டப்பாதகி
மாப்பலகாரமென்றென்னத்தையோகொடுத்தாயே முழு
வஞ்சகஞ்செய்தெனைமிஞ்சிக்குடிகெடுத்தாயே
வேப்பிலைபோலகசக்குமோதேன்றினைமாவும் வெறி
மீறுமோதொண்டைக்குள்காறிச்சுழலுமோநாவும் ஓடி
ஆதிசிதசவனமப்புமிவ்வளவுதானோ
அஞ்சியொளித்தாலுங்காலன்சும்மாவுடுவானோ
ஜாதிஜனமென்றுலிவ்வேளையென்னுயிரைப்பேணுமே நானும்
தன்னாலேகிடைத்துசாகிறேனேஎந்தன்கன்மமே

பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்,

தடுத்துரைசொல்லாதவர்கள்குறவரோடுன்
தமையமாரெல்லாருமெனைத்தான்கூட்டி
அடைக்கலமென்றுன்னிடத்தில்விட்டதற்கே
அவரேபோய்மாவெனவேநஞ்சைத்தந்தாய்
திடுக்கெனநான்சுபாவம்போல்வாங்கியுண்டேன்
செவியடைத்துக்கண்ணிருட்டி இருமல்விக்கல்
எடுக்குதடிபாவிதண்ணீர் எனக்குத்தாராய்
இன்னமனமிரங்கிலையோ யென்செய்வேனே

(வ-ம்) கேளாய்வள்ளிப்பெண்ணே உன்தமையன்மார் குறவர்களும் எனக்குஇந்தவசனஞ்சொல்லி உன்னிடத்தில்விட்டதுயோசித்தால்நீயும் அவர்களும்எல்லாமோபேசிக்கொண்டு எனக்குத் தேன்திணைமாவென்று விஷத்தைக்கொடுத்ததாய்காணுகின்றது அதைநான் மெய்யென்றுவாங்கி சாப்பிட்டதின்பிறகு செவியடைக்குதுகண்ணிருட்டுகிறதுஇருமல்விக்க ல் எடுக்கிறது ஆனதால் இப்போதாவதுமனமிரங்கிதண்ணீர்எனக்குத் தாராய்பெண்ணேவள்ளி

அ

வள்ளியம்மன்சொல்-விருத்தம்

நன்மையேநாம்செய்தாலு நட்டணுஞ்சேர்கலியுகந்தில்
றுன்மைபோல்விளைந்ததென்றுற் றிருவுளமிருக்குதையா
உன்விதியல்லவெந்த னூழ்வினைவிதிதான்நீரும்
என்முன்னேவந்தபோதே எனைச்சனிதுடர்ந்ததன்றே

(வ-ம்) வாருமையாசுவாமி பெரியவரேயிந்தக்கலியுகத்தில்நாங்கள்நன்மை செய்யத் துன்மையேவரும் உம்மைவெறுக்க வேண்டியதில்லை ஞானுனின்விதிவசமப்படி என்னிடத்தில்நீர்வந்தபோதே உன்னைச்சனிபிடித்தது போறதாணிறதையா பண்டாரமே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-புந்நாகவராளி.

மூத்தோர்சொற்றவருமறக்காத்ததவக்கோகிழவனாரே நீரும்
முழுதும்பாவியென்றென்மேற்பழியைப்போடுகிறீராண்டாரே
காத்துபரண்மீதுமைக்கரைதூக்கிவிட்டபலன்போச்சோ சொப்புக்
காட்டுத்தேன்விட்டமாவைக்கசக்குதென்றுசொல்லவுமாச்சோ
பிழைத்துபோகட்டென்றுபேணிப்பார்த்ததும்பொய்யோ தேனி
பிசைக்குமாவைநஞ்சென்றே இசைத்துசொன்னீதுமெய்யோ
மழைத்தவளையைப்போல்வாயைப்பிளக்கிறீர்ஆண்டாரே கப்பா
வட்டுக்கோதினைமாவைநம்பித்தக்கேன்கிழவனாரே
தருமபுண்ணியத்திற்குத்தண்ணீர்சுனைகாட்டுவேன்வாரும் இது
தப்பாதுஏழுமலைக்கப்பாற்போவோம்வாருமநீரும்
அருமையுடனேயின்னுல் அழைத்துவாருங்கிழவனாரே உமக்
கன்புடனேதண்ணீர்சுனைக்காட்டுவேன் பெரியோரே

(வ-ம்-) ஆகோவாரும்பண்டாரக்கிழவனாரே இந்தக்காடுகடந்துபோனு லமலையருகி லொருசுனையிருக்குதுஉன்தருமத்திற்கதைகாட்டுகிறேன்கூடவாரும்ஆண்டார்கிழவரே

பண்டாரஞ்சொல்-வசனம்,

நல்லது பேத்தி அப்படியே வருகிறேன் இந்தக்காட்டில்அனேகம்காடி புலி சிங்கம் பலமிருகமிருக்குது அதுகளைக்கண்டாலெனக்குப்பயமாயிருக்கும் உனக்குப்பயந்தானே யிருக்கும் நாம் எப்படிபோகிறது பேத்தி (வள்ளி-வ-ம்) ஆனுலகேளுமையா எங்கள்சாதி சகலமானமிருகங்களைப்பிடித்துச்சுட்டுதின்கிறது இந்தமிருகங்களைக்கண்டால் எனக்குபயமிருக்காது எனக்குஆனையைமாத்திரங்கண்டால் மெத்தபயமுண்டாம் ஆகிலும்இந்தக்காட்டில் ஆனையில்லை பயப்படாமல்வாரும்பெரியவரே.

பண்டாரக்கிழவன்-வள்ளியம்மன்-கண்ணிகள்,

இ-ம்-புந்நாகவராளி அடதாளம்.

பண்டாரக்கிழவன்-சொல்.

கர்மமோதண்ணீர்க்காக மெத்தமெலிக்குதடிபேத்தி இந்தக்
காட்டைக்கடந்துசுனைக்காட்டுதண்ணீர்தந்தால்நேத்தி



வள்ளியம்மன்-சொல்

ஆகட்டும்பண்டாரகிழவரேஎன்பின்னேவாரும் அதோ
அந்தமலைக்குஅப்பாலிருக்குதுசுனைபாரும்

பண்டாரக்கிழவன்-சொல்.

ஆனபடியால்வாரேன்அன்னமேவுன்புண்ணியந்தான் எந்தன்
ஆயாசந்தீரவேநீர்தந்தால்புசிப்பேன்நான்றுன்

வள்ளியம்மன்-சொல்,

ஏகிக்காடுந்சுனையெல்லாங்கடந்தோமினித்தேறும் இங்கே
இருக்குதையாசுனைபெருக்கத்தண்ணீருண்ணவாரும்

பண்டாரக்கிழவன்-சொல்

இந்தச்சுனையிற்றண்ணீர்பாசியிருக்குதுவேண்டாமே மெள்ள
இறங்கிக்குடிக்குஞ்சுனைஎனக்குக்காட்டினுலுண்ணலாமே

வள்ளியம்மன்-சொல்.

கிந்தனைசெய்துதண்ணீரைப்பழிப்பாரோஆண்டாரே அதை
யிறுத்தியப்பால்நல்லதண்ணீரிருக்குதுன்னுவிரே

பொது-விருத்தம்,

அப்பாற்போய்நல்லதண்ணீர்கண்டேயாண்டார்
அன்புடனேதண்ணீரையள்ளியருந்தும்போது
எப்பிளப்புந்தகையடக்கிவெளியேமெள்ள
ஏறுதற்போலுடன்நமிக்கவெடுத்துத்தள்ளக்
குப்புறவேவிழுந்துகரையதைவிட்டங்கு
கொண்டகசந்தனியமுந்திக்கூருவள்ளி
தப்பிஉயிர்போகுதடியெனைஉன்கையால்
தழுவியெடுத்தேகரையிற்சாரொன்றுரே.

வசனம்,

இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் சுனையைக்காண்பிவைக்க ஆண்டார்க்கிழவர்தண்ணீர்குடித்து தாகந்தீர்ந்து வெளியேவருகிறசமயத்தில் கால்தள்ளாடிவிழுவோரைப்போல் பாசாங்கெடுத்து தண்ணியில்முழுகியெழும்பி கூகுவென்று இதுதருணம்கையைக்கொடுத்து எடுத்துவிடுவாய் என்றுசொல்ல வள்ளியம்மன்சொல்கிறவிதங்காண்க.

வள்ளியம்மன்-பண்டாரஞ்சொல்-விருத்தம்,

இதுநமக்குவாய்ச்சவிபோபாடுதானே
இக்கிழவன்சுனைதனிலேவிழுந்தானேயோ
மதமிகுந்தபண்டாரக்கிழவனாரே
வாருமெந்தன்கைபிடித்துவகையாய்ப்போ
பதியுடனுன்கைக்கொடுமென்குளிர்ந்தேமெய்யிற்
பதட்டமெல்லாந்தீர்ந்ததென்றன்பாக்யம்பெண்ணே
துதியுடனுதண்ணீர்தந்தாயேயெந்தன்
தாகந்தீர்ந்ததுமோகந்தவிர்ப்பாய்நீயே.

வசனம்.

ஆ-ஆ-நல்லகாரியம்நல்லகாரியம் இந்தக்கிழவனாலே நமக்குத்துன்பம்நேரிட்டது ஓகோமதம்பிடித்தகிழவனை இப்படியுந்தண்ணியில்விழலாமா இந்தாருமஎன்கையைப்பிடித்துசுனைஏறுங்காணும்(பண்டாரம்)ஆ-ஆ பெண்ணேஉன்கையைத்தொட்டு மேலேறிவந்தபிறகு என்சரீரம்குளிர்ந்து தாகமுந்தீர்ந்தது இப்போவுன்மேல் மோகங்கொண்டேன் என்மோகத்தைதீர்ப்பாய்பெண்ணே.

பண்டாரக்கிழவன்சொல்-கண்ணிகள்-இ-ம்,

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

தாகந்தணிந்தாயே புண்ணிய
தருமத்திற்கேத்தவளாளியே
மோகந்தவிர்ப்பதற்கு ஒரு
மூலிகையுன்னிடந்தானுண்டு
என்னைக்கிழவனென்றே நிந்தனை
யெண்ணுமற்கூடித்தழுவேமாம்
சொன்னபடிகேட்ப்பேன் நீயுஞ்
சொல்வதற்கெல்லாமுள்ளாயிருப்பேன்
களபங்கயிகமெனக் குடங்
கையிலணைத்துத்தழுவமாம்
இளகிக்கிட்டவருவாய் எனக்
கின்பக்கலவிகலக்தருவாய்
விரகாக்கினிமீறி மெய்
மெலிவதெல்லாங்கடைக்கண்பாராய்
சருகாயுலர்வேனே மூக்கத்
தக்தணைத்தே கட்டிச்சேரோனே
வேலர்கிருபைசெய்வார் இக்க
மேதினியோரெல்லாம்போற்றிசெய்வார்
வாலைக்குமரிப்பெண்ணே குற
வள்ளியெனைவருத்தாதேகண்ணே

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்,

புன்னாகவராளி-ஆதிதாளம்.

இன்றுயென்னயேச்சுனைத்தாய் குற
யேந்திழைவள்ளியென்றெண்ணாமல்
நின்றதுசாதனையோ என்ன
நீநிசென்றுபடாபாதகனே
போதமெல்லாங்கெட்டுதே கெட்ட
புத்தியுனக்குப்பிடிபட்டுதோ
நீதியில்லாதபடி கட்டி
வில்லாதேபேதைமைவைவிடு



நீண்டாதபாவியோ நீயுஞ்
செய்ததவமெல்லாந்தீவினையோ
வேண்டாம்பற்கெஞ்சாதே நீயும்
வினைசெல்வப்பிள்ளைபோற்கெஞ்சாதே
நரைத்துப்புலச்சைகெட்டு இன்று
நாளையிற்சாகிறநாளைவிட்டு
வெருத்தமொழியேது சிவ
வேடமுனக்குப்பலிபாது

வள்ளியம்மன் சொல் விருத்தம்

பேசாதேநரைக்கிழவாஎதிர்னில்லாதே
பிச்சைகொளுமபரம்பரையாண்டிநீயல்ல
ஆசாரமேதுசிலவேடமேது
அறிவுகெட்டமூடனுக்கதுதங்காது
ஏசாமலேசியும்பின்போவதில்லை
எத்தனையோசொன்னாலுமரோஷமில்லை
கூசாயோவீண்கிழவாஉனக்கேனிந்த
கொஞ்சபுத்திவினைத்திறுற்கூடாதென்ன

வசனம

ஓ-ஓ-பேசாதேகிழவா பிச்சைக்குவந்தஆண்டி பெண்டுக்காசைப்பட்டதுபோலஇருக்கிறது நீர்பெரியவராயிருந்துசிலவேடம்பூண்டுமஉனருஇருதகாது நான்எவ்வளவுசொன்னபோதிலும் அறிவுஆண்மையில்லை அறிவுகெட்டவனாயிருக்கிறாய் உன்னுடையநினைவுகைகூடாயாது வந்தவழியேநடவும்பண்டாரக்கிழவனாரே.

பொது-விருத்தம்

மந்திரமாயுருமருட்டிவேலன்மோக
வசையுரந்துவள்ளியுஞ்சம்மதியாதாலே
எந்தவிதஞ்சொல்வோமென்றெண்ணியெண்ணி
எமாந்துதனைக்கிசைந்ததுணைவனை
தந்திமுகக்கணபதிவந்திடத்தியானித்தார்
சண்முகன்கோபந்தவிர்க்கும்படியாய்மேரு
முந்திவந்ததெனக்குறமாதுநிமிர்வந்து
மும்மதக்குஞ்சரசொருபமுமங்கினுமோ

இதுவுமது-சந்தவிமுத்தம்

குதுவினைக்கதுபோலேயெழுந்தெதிர்சோதனையின்படியே
சோபிதகொம்பிருபாலொளிதக்கிடருல்முகில்சென்றதுபோல்
மேதினிகொண்டுபர்சேடனதிங்கிடவிரமிருந்திடவே
மீறியடைந்துவுதாரகற்செங்கரம்வீசிகெடும்பனைமேல்
மோதியெழுந்திர்நீம்மாங்கள்சமூலமதிர்ந்திடவே
மோகமனங்கொள்குகர்திபனின்புறுமோடிசெயுங்குமரன்
ஆகரவொன்றுமிலாதபயந்தனைவாயெனவுஞ்சொலவே
ஆடிமுழங்கிமதாகரமிஞ்சியயானையும்வந்ததுவே,

வசனம்.

இந்தப்பிரகாரம்வள்ளியம்மனுக்குச்சுப்பிரமணியர் அனேகவிதஞ் சொல்லியுங்கேளாமல் வள்ளியம்மன்கோபித்துப்புனத்திற்குப்போகிறசமயத்தில் சுப்பிரமணியர் இனியென்ன செய்வோமென்று தனக்குமூத்தோனாகிய கணபதியைநினைக்க அப்போவிநாயகர் ஆனையுருவங்கொண்டுவள்ளியம்மன்முன் வருகிறவிதங்காண்க.

ஆனைவருகிற-தரு இ-ம்-சன்னியாசி-ஆதிதாளம்.

கடகரிவந்ததுவே மதம்பொழி
கடகரிவந்ததுவே
கடகரிவந்தது-அடவிநெருங்கியே
வடிவினெடுங்கிரிமுடியதிரும்படி (கட)

நெடுமரமுங் கவிழும் சிறந்திடுஞ்
சிறுசுளைகின் செவியும் கிரியெனப்
பருங்குமிருந்ந சிரமும் தாளெயொடு
வரிபொருவும் காமும்
விரிசிறுநாத்திடும்-விளையில்மரஞ்செடி
முறிவுபடும்படி-அதிரநடந்தெதிர் (கட)

மலையின்விளம் கிடவே உயர்ந்துபெய்
மழையினமிழ்ந் கிடவே வனந்தனில்
கமலமதும் கிடவே வள்ளிகொத்
தலறிடுங் கிடவே
குலவுமதம்பெரு-ஜலதிகமபொழி
திலகமலங்கிர்த-நுதலில்விளங்கிய (கட)

ஆனைவருங் கரியும் சிறந்துறு
மேன்மையுறுங் கரியும் தெரிந்திடும்
காவலரும் புனமும் கலைமசை
மானுமுடும் பிணமும்
வானவநம்பயமாயெதிரஞ்சுட
யானைபெருங்குறவோர்மகள்கெஞ்சிட (கட)

விருத்தம்

மதியெதிர்க்ககடலெனவிரிட்டேசிறி
மாதமாரிபொழிக்கானைவரவேண்டு
பதறிவள்ளிநடுநடுங்கியறிவுகுன்றி
பஞ்சபூதமுங்கலங்கிப்பதைக்குவாடி
கதறியிருகாலொடுகால்பின்னிச்செய்ய
கண்களிநீர்சொரிந்திடவேலாயுதாவங்
கதவுமெக்கயமென்றேகிழவன்பின்சென்
றோடியோடிப்பயந்தேயொளிந்தின்றனளே.



(வ-ம்) இந்தப்பிரகாரம் விநாயகமூர்த்தி யானைரூபங்கொண்டுவருகிறதைப்பார்த்த வள்ளியம்மனவள் நடுநடுங்கிப்பயந்து வேலாயுதக்கடவுளாகிய கைத்துவாடிபஞ்சபூதமுங்கலங்கி பண்டாரக்கிழவன்பின்னே ஓடிவந்துசொல்லுகிறவிதமெப்படியென்றால்

பண்டாரக்கிழவன்-வள்ளியம்மனுக்குச்சொல்

விருத்தம்

நீட்டியவேல்விழிமானேகுறவர்மாதே
செத்திடநீசுனையில்முன்னந்தள்ளிப்பின்னுங்
காட்டியென்னைக்கொடுப்பதற்கோபிறகேவாராய்
கள்ளிதொடாதென்றனைநீகேடஞ்செய்தாய்
மீட்டினமகான்செய்தேனோகிழவனோமே
மேகம்போலானைமிரட்டுதையா
ஆட்டமிறுகொள்ளாதேபோராடாதே
அடைக்கலங்காத்தென்றுயரமகற்றுவீரோ.

(வ-ம்) ஓ-ஓ-குறப்பெண்ணே முன்னம் நீசுனையில்சாகும்படியாகச் செய்தாய் இப்போது காட்டியிருக்கும் யானையைக்கூட்டிக்கொண்டு என்னை அதின்முன்காட்டிக்கொடுக்கவந்தாய் எனைத்தொடாதே என்கிட்டவும் வாராதேயில்லாய்பெண்ணே (வ-ம்) ஆனால்பண்டாரசுவாமிகளே நான் உம்மிடத்தில் மீட்டிமைசெய்யவில்லை இப்போது கறுத்தமேகம்போல் ஒருயானைவிறிட்டுஎன்னைக்கொல்லவருகிறது கைகால்நடுக்குது இவ்வேளை உம்மிடம் அடைக்கலமாய்வந்தேன் இப்போதென்னைக்காத்து இரட்சிக்கவேண்டுமையாசுவாமி.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்

இ-ம்-கண்டா-துருவதாளம்.

ஐயரேகிழவனாரே எனக்
கன்புள்ளபண்டாரசுவாமி
மெய்யெலாம்பதறியானை என்னை
மிரட்டுதேநானென்னசெய்வேன்
வீழிடுதேனென்னசெய்வேன் ஆனை
விழுங்கவருதென்னசெய்வேன்
ஆரிடத்திற்செல்வேனையா எனக்
காதரவுநீரேமெய்யா
வீசித்துதிக்கையால்வாரி ஆனை
விழுங்கவருதையாமீறி
பாசமுற்றிச்சென்னைநீரும் இங்கு
பார்த்தெனதுகவலைதீரும்
புனத்திலென்னைக்காக்கொணாதோ நானும்
புலம்புவதைத்தீர்க்கொணாதோ
தனித்துவர்நுயானைக்குளி மெச்சந்

தந்தசமென்றேனுனைக்கெஞ்சி
மதயானையைவிலக்குமையா உக்கன்
மைத்துனியாகிறேனையா
இதமாயென்னைக்காப்பீரானால் உமக்
கேர்த்தக்கொழுந்தியுமாவேன்
கடகமதவானையேக எந்தன்
கண்முன்னேநோற்றுமற்போக
உடனேநீர்விலகச்செய்தால் உனக்
குகந்தபெண்டீராவேனையா

பண்டாரக்கிழவன்சொல்-மேற்படி-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்-துருவதாளம

தாரிபுங்கைக்கூடேட்டும் பெண்ணே
கைவசமாகிறேனென்பாய்
வீரியமாய்த்தீர்த்தபின்பு காணும்
மேவுவேனோபோபோவென்பாய்
ஆறுமுகவேலர்மீதில் பெண்ணே
ஆணையிட்டுத்தருவாய்போதும்
கூறியெனக்குக்கைபோட்டுத் தந்தால்
கொண்டாகம்போலாசட்டும்

வள்ளியம்மன்சொல்-மேற்படி கண்ணிகள்.

சுப்ரமண்யர்பேரிலாணை உந்தன்
சொக்குப்பண்டாரனேநானே
தப்பாதுதான்கிருபைகாணும் ஆணை
தன்னையும்விலக்கவேணும்

பொது-விருத்தம்,

திடத்துடனதட்டியானைச் சிறவேபயந்துவள்ளி
அடைக்கலமென்றுண்டாரை யாவியந்தழுவிக்கட்டி
தடித்தெழுந்தனமழுந்தத் தளிர்க்கையாலணைத்தபோதே
தொடுத்தமுத்தோமென்னத் துள்ளினன்கிழவன்றானே

வசனம்.

இப்பிரகாரம் வள்ளியம்மனை யானைத்துரத்திக்கொண்டு வருகவ ள்ளியம்மன்பண்டாரக்கிழவனிடம் போயடைக்கலமாகப்பண்டாரக்கிழ வன் வேலர்மேல்சத்தியஞ்செய்யச்சொல்ல அதுபோல் வள்ளியம்மன்பெ ண்டீராகிறேனென்று சத்தியஞ்செய்துகட்டிக்கொள்ள நினைத்தது முடி ந்ததென்று அப்பால்பண்டாரக்கிழவன் ஆனையைப்போகச்சொல்லுதி லித்தமெட்டபடியென்றால்.



பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்.

இனையவரன்பாய்ப்போற்றுமிறைவனேஎனக்குமூத்த
தமையானேசோதியேநீர் சார்ந்திடுங்கிருபையாலே
கமலமின்வள்ளியெந்தன் கைவசமானாளிப்போ
சமயமிச்சமயங்கண்டின் தலமதிலேகுவீரே

வ-ம். அகோவாரும் எனதுதமையனாகியயானைமுகக்கடவுளே நா ன் நினைத்தபிரகாரம இந்தவள்ளி என்கைவசமாகிவிட்டாள் ஆனையால் இப்போது நீரும்துதலத்திற்குப்போய்விடும்தமையனே.

ஆனைசொல்-வசனம்,

ஓகோகேளாய்வேலர் அப்படியேபோய்வருகிறேனப்பா.

பொது-விருத்தம்,

இளமான்போல்வந்துவேலன்கிளாந்தன்சொரூபங்காட்டி
வில்லனைக்கூட்டாக்கினைநினைத்ததுமுடிந்ததென்று
இளமையில்வள்ளிதன்னோடிணங்கினையான்கையால
களுவினார்மதனபோகந்தாங்கினோர்போலகினரே

இதுவுமது-விருத்தம்,

பால்மொழிமாதினைத்தழுவியணைத்துமப்போ
பகலவிளையாடிகன்றாப்பழகிச்சேரும்
வேலன்மருட்டியவேடரெல்லாம்விட்டு
மொச்சொருங்கொண்டுவடிவேலுந்தாங்கிக்
கோலமயிலுமபனிரெண்டாய்ந்ததோளும்
ஒளிர்ந்தகண்களீராறுமுகங்களாறுந்
சேலையினங்கின்னைவள்ளிமுன்னேதோன்ற
தொடுக்கின்றார்திருக்காட்சிகொடுக்கின்றாரே

வ-ம், அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்பண்டாரக்கிழவ ன் வள்ளியம்மனைக்கூடிப்புணர்ந்து தானினைத்தது முடிந்ததென்று சந் தோஷமடைந்து இனிமேல்நம்மிடமிராது தெரியவேண்டுமென்று மயி லவாகனருடைய ஆறுமுகமும் பன்னிருகைகயோடு தன்சுயரூபந்தனைக் காண்பித்து வள்ளியம்மனுக்குக்காட்சிகொடுக்கிறவிதங்காண்க,

சுப்பிரமணியர் வள்ளியம்மனுக்குக்
காட்சிகொடுக்கும்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை
அடதாளம,

காட்சிகொடுத்தார்-சுப்பிரமணியர்
காட்சிகொடுத்தார்
காட்சிகொடுத்தார்-காட்சிவராமலே
மாச்சியமணிபுந்தம்பராசிய-வள்ளிமுன்னே
கோலமயிலும்-பனிரெண்டுதோளுங்
குலாவிப்பச்சைப்-பொருயும்-கட்டியும்

வாலகுமாரம-காகவேலிலாவி
சாலகுருபர-வேலர்-தெரிசனைக் காட்சி
பூரணசெங் கமலக்-கருணைகர
பூர்த்தியுமா திரு-நேத்ர விசாலமுங்
காரணமெய்த்-திருநீரணி-கோலமுங்
காட்டியேகதிர்பெறத்-தீட்டியவேலவர் காட்சி
காட்டினிலேவரும் வேடுவராய்ச்-சொற்
கபடம்பொருந்திய மானிடரா-யுரு
வாட்டிக்கிழவ-வடிவினராய்க்குற
மாதேவுனைச்சேரும்,நாதனு-நாமெனக் காட்சி

வள்ளியம்மன்-போற்றி-விருத்தம்,

சரவணபவனேபோற்றிச்சடாக்ஷரமுதலேபோற்றி
கரதலகமலாபோற்றிக்கழுகுமாமலையேபோற்றி
அரகரமுருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
வரமுனிக்குருவேபோற்றிவாதனேபோற்றிபோற்றி

வ-ம், ஓம்அரகரமுருகாசரவணபவனே சடாசரசொரூபா கழுகச
லா ஆறுமுகக்கடவுளே குறுமுனிக்கு குருவாய்விளங்குகின்ற வரதனே
போற்றிபோற்றிசுவாமி.

இதுவுமது-துதிவிருத்தம்.

வேறுபேதகவினைத்தேறுதாவுந்தன்
வித்தையறியாமலென்பெண்புத்தியாலே
கூறினதுக்கெரிந்துதெரியாதுமுன்செய்
குற்றமுநீர்பொறுத்தெனையாட்கொள்வாயையா
ஆறுமுகனேகுகனேஎனைத்தான்சேர்ந்த
அருமைமணவாளாவென்னையாமெய்யா
தேறுதலாயடியாளைக்காத்தேயுன்றன்
தெரிசனைதந்தருளுதவுந்தேவதேவே

இதுவுமது-விருத்தம்,

ஆவலுடனெந்தனைப்பெற்றெடுத்ததந்தை
அன்னையுமுன்செய்தபெறும்புண்யந்தானோ
காவலெனதினைக்காக்கவரும்போதேநான்
கண்டசுகனப்பலனோகவலைதீர்ந்தேன்
கூவுமயிலேறியதற்சொருபங்கண்டேன்
கூடிவிளையாடியணைந்திடவும்பெற்றேன்
மேவியநீவினைதீர்த்தேயுன்றுப்பாதம்
வேண்டினேன்எனையுமுழுதாண்டிடவே

வ-ம், சரணஞ்சரணமென்சொணநாதனே நான்பெண்புத்தியால் த
ங்களைத்தெரியாமற் சொன்னகுற்றத்தைபொறுத்து பூரணகிருபைபுரி
ந்து எனைதமதுசொந்தமனைவியாக்கிகொண்டு அடியாளைக் காக்கவே



ண்டும்சுவாமி ஆஆ எனைப்பெற்றெடுத்த தந்தைதாய் செய்தபுண்ணியந்
தானோ அல்லது நான்தினைக்காக்கவரும்போது கண்டசகுனப்பலன்தா
னோ தங்களை மயில்வாகனரூபமாய்க்கண்டுகூடியணைந்திடவும் பாக்கிய
ம்பெற்றேன் நன்செய்தவினையுந்தீர்த்தேன் உமது பாதாரவிந்தைத்தை
நாடினேன் என்னை முழுமையும் ஆட்கொள்ளுஞ்சுவாமி பிராணநாயகரே

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னு

ஆதிதாளம,

சோதியேசுடரொளியே ஆதிநாயகர் என்னைச்
சொந்தமென்றுசேர்ந்தணையவந்தநாயகர்
கோதிலாதச்சேர்வைதந்தாளென்னையாண்டவா நான்செய்
குற்றமெல்லாம்பொறுத்தென்மேலன்புபூண்டவா
அன்றிலும்பேடும்போலென்னையணைந்துமருவுவாய் உம்மை
அகன்றிடாதிருக்கநீர்கிருபைதருவாய்
மண்டலத்தன்னிலேநானுமறப்பதில்லையோ இனி
மறுத்தொருஜென்மமில்லாமல்வரமருள்வாயே

சுப்பிரமணியர்சொல்-கண்ணிகள்- இ-ம்-புன்னுகவராளி

ஆதிதாளம்.

கோதிலாக்கங்கைக்கரையிற்கூடினோம்பெண்ணேநீ செய்
குற்றமெல்லாம்பொறுத்தின்பந்தேடினோம்பெண்ணே
நீதில்லாமற்றோர்ஜெனை ... ராதே வள்ளித்
தேன்மொழியேவுந்தனிட... நோகாதே

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்,

ஆதியிலேதிருமாலின்மகளாயுன்னை
ஆரணங்குகமலமகட்பெற்றாள்நீயும்
மேதினியிற்சரவணப்பொய்கையிலேஎமமை
மேவுதற்குத்தவம்புரிந்தாய்தரிந்துமுன்னஞ்
சீதமடமான்வயிற்றிற்பிறப்பாய்வேடர்
தெரிந்தெடுத்துவளர்த்திடுவா... மென்றேன்
ஓதியசொற்படிபோலேவந்தோமிய...
உகந்துமிருதனக்கழுவியுகந்தோமபெண்ணே

வ-ம, அகோகேளாய் பெண்ணேவள்ளி ஆதியில் நீதிருமாலின்மக
ளாய் மகாலக்ஷுமிபெற்றாள் நீபருவமானபின்பிறகு சரவணப்பொய்கை
யில் என்னைப்புணரும்படிதவஞ்செய்தாய் அப்போது காம்உன்னிடத்தி
லவந்த இந்தஜெனனத்திலுன்னைச்சேருகிறதில்லை நீகானகத்தில்மான்வ
யிற்றிற்பிறந்து வேடர்களெடுத்துவளர்ப்பார்கள் அப்போதுன்னைச்சேரு
வோமென்றேன் அதுபோல விக்கக்கங்கைகரையில் உன்னைச்சேர்ந்தோ
ம் பெண்ணே ... (வள்ளியின்வசனம்) ஆனால் தங்களுடையவிபரமும்
என்னுடைய ... த்தும் தெரிந்துகொண்டேன் மகாசந்தோஷமா

ச்சுது இனைப்புனம்போவோம் வாருமென்னவும் சுப்பிரமணியர்வல்லம் க
ல்லதப்படியே நீமுன்னேகட இதோ பின்னால் வருகிறேன்பெண்ணே,

பொது-வசனம்,

சுப்பிரமணியரும்வள்ளியம்மனும்கூடிப்புனைக்கு
ல்லியபின வள்ளியம்மன் சுவாமியைத் தினைப்புன
ாமிமுன்னே போய்விடு நானபின்னால் வருகிறேனென்று
ாலவு அப்போது வள்ளியம்மன்றினைப்புனம்வரும்போது அவ்விடம்
பாங்கிமார் அம்மனைக்கேழ்க்கிறவிதங்காண்க,

பாங்கிமார்-வள்ளியம்மன்சொல்,கண்ணிகள்

இ-ம்-குறவஞ்சி-ரூபகதாளம்,

பாங்கிமார்-சொல்,

முன்னமேபோனவளுமின்னேரமென்னசெய்தாய் உங்கள்
முகம்வாடி இருப்பதென்னமுனைந்தசெதிசொல்வாய்

வள்ளியம்மன்-சொல்.

கன்னல்மொழிப்பாங்கியரேகானகத்திற்சென்றேன் ஆகிலே
கானல்சலந்தேடிக்காணுவிடாய்கொண்டேன்

பாங்கிமார்-சொல்,

இதுவரையிலெங்கேபோனாய்தெரியச்சொல்வாயம்மா போன
இடக்தனிலேநடந்தசெதியாம்பிடுவாய்தம்மா

வள்ளியம்மன்-சொ

கதிபெறுநன்னீர்ச்சுனையங்கிருக்கவுமேகண்டேன் நான்
கனித்தினைலேநாடக்கானகத்திற்சென்றேன்

பாங்கிமார்-சொல்.

வஞ்சியேவனக்குயிலேவடிபகுறமாதே இப்போ
மங்கையேநின் கண்சிவந்தமாற்கமேதிப்போது

வள்ளியம்மன்-சொல்,

கொஞ்சுங்கிளிபாங்கியரேகேளுமைநீகேளீர் காட்டில்
கொடீரமானவெயில் ... [illegible] ... மொழி

பாங்கியர்-சொல.

நங்கையரேவுன்றனக்கிதைக்குறிகளே ஆனை
நன்றாகவெங்களுக்குசொல்லுவாயிப்போது

வள்ளியம்மன்-சொல்,

மங்கையரேமார்பிற்குறிவந்ததுந்தெரியாதோ இப்போ
வண்மையுடன்செடிமுள்பட்டதல்வசுக்கீறனதோ

பாங்கியர்-சொல்.

உயிர்க்குயிராய்ப்பழகிருந்தேகெடுளிக்கின்றாயே இங்கு
உள்ளதுசொல்லென்றாலுமுழங்களிக்கின்றாயே

வள்ளியம்மை நாடகம்.

வள்ளியம்மன்-சொல்,

இப்படிநகைபோ இதுவக்களுக்காசொன்னார்கள்மதிபோ காட்டில்
ஏதினைதில்நீகூதொல்ல வெல்நலைபிறவிதியே

பாங்கியர்சொல்-விருத்தம்,

மைநதில்போலிருண்டகுழல்சரிந்ததுவும்
மணிவயிரமணிக்கவசவளைகளெல்லாம்
கைநழுவியிருப்பதுபோற்காணும்மாறும்
கதிரேயுன்னிதழ்வெண்மைகாட்டும்மாறும்
செய்யசெழுங்கமலமுகக்கொங்கையின்மேல்
செங்கைநகக்குறியழுந்திச்செறிந்ததுவும்
பொய்யமையாதெமக்கேளவெளிசெமதாகப்
புகலுவாய்பூவையரேபொருந்தத்தானே

இதுவுமது-விருத்தம்,

காதளவுமாய்த்தமத்தேறுகயற்கண்ணியுந்தன்
கள்ளமெல்லாம்
எதனைவுங்கேட்டதென்னதாய்மாமன்குலத்தெரியா
ரெங்குமுண்டோ
பேதமையாற்செய்தபிழையின்குற்றம்பொறுககாத
பிதாவுமுண்டோ
சோதனைநான்செய்யவில்லைநடந்தசெதியொளியாமற்
சொல்லுவாயே.

வ-ம், கேளாயம்மா வள்ளிதாயே உன்னுடைய கூந்தல்சரிந்தும்
கைவளையல்நழுவியும் உன்னிதழ்வெண்மைநிறமாகியும் இரண்டுகொங்
கையின்மேல் நகக்குறியும் இவ்விதமாயிருக்கிறபடியால்எங்களுக்குஒளி
யாமற்சொல்லுவாய் உன்னுடையகள்ளமெல்லாமெங்களுக்குதெரியும
தாயாருடன் கூடப்பிறந்தமாமன் குலந்தெரியாதா அப்படிப்போல நீசெ
ய்சதெங்களுக்குத்தெரியாதா பிள்ளைசெய்தகுற்றம் பிதாபொறுக்க வே
ண்டும் நடந்தசெதியைச்சொல்லுமம்மாதாயே.

வள்ளியம்மன்-விருத்தம்.

உயிர்க்குயிராய்நமிருந்துமேனதுநெஞ்சம்
உள்ளதுதெரியாதோஉண்மையோத
சயிக்கிளையாயென்னைஇனிப்பழிக்கவார்த்தைத்
தான்கேட்கவிதிவசமோசகியபெண்ணே
பயிலகுணமாய்ப்பேசாதேசற்றுசுவாய்க்கண்டால்
பார்வதன்றிவிண்பழிவைப்பகரலாமோ
செயிக்கஉன்னைப்புடிக்கிறேமோபோபோவென்ன
சேதிசொல்வீரசேடியரேதிறமாய்த்தானே

வ-ம்- பேனும் பாங்கிமார்களே நாமுயிர்க்குயிராயிருந்தும் எம்மனை
முங்களுக்குத்தெரியாத கிசமார்த்தையைச்சொல்ல என்ன நீங்கள் நாடு

கண்டதைப்படி சொல்லாமல் அதுவுமென்றலைவிதிவசந்தான் நீங்கள் அப்படிக்குச்சொல்லவேண்டியதில்லை யாதொருகாரியமுங்கண்ணினால் நன்றாய்ப்பார்த்தால் சொல்லுவதல்லாமல் பார்க்காமற்சொல்லக்கூடாது இதுகளையெல்லாம் மனதில்நினையாமல்சொல்லலாகுமோ பாங்கிமார்களே,

பொது-விருத்தம்,

காணமின்றிவள்ளியும் பாங்கியர்கள்முன்னே
நானறியேனென்றுமென நவிலும்போதே
வாலிபவேலவர்வேடருபங்கொண்டு
மங்களிசொன்னதேர்ந்திவ நம்வழியிலெனதன்
பாணமதுபட்டோடுகியொருமானுங்கள்
பக்கம்வந்தவடத்தைபான்பார்த்தும்வந்தேன்
கண்ணீராமானமுகிரெனத்தெளிந்து
கள்ளனெனத்தாதியருங்கருதினரே

வ-ம். இந்தப்பிரகாரம் பாங்கிமாரிடத்தில் வள்ளியம்மன் தர்க்கஞ்செய்துகொண்டிருக்க அவ்விடத்தில் வேலாயுதக்கடவுள் ஒருவேடுவாவேடமெடுத்துக்கையில் வில்லம்புகொண்டு புனத்தில்வந்து பாங்கியரிடம் என்னுமானொன்றம்பட்டுங்களிடம்வந்ததோ வெனக்கேட்க அப்போது பாங்கிமார்கள் இவன்கள்ளனைப் போலிருக்குதென் றெண்ணிக்கொள்ளும்போது வேடனாய்வந்தவேலவர்சொல்லுகிறவிதங்காண்க.

சுப்பிரமணியர வேடருக்கும்-பாங்கிமாருக்கும்

சம்வாதம்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-அடதாளம்

வேடன்சொல்.

கைக்கணைபாலெய்தமானிங்கேதான்வரக்
கண்டதுண்டோகன்னிகாள் சும்மா
கள்ளத்தனமில்லாமலுள்ளதைச்சொல்லுங்கள்
கன்னியரேகன்னிகாள்

பாங்கியர்சொல்.

நீங்கும்தெமொழியிங்கேயொருமானும்
தினைத்துவந்ததென்றுமண்ணே இப்போ
தினமாய்ச்செய்தானிங்கேகாண்கிலோம்
திரும்பியேபோய்விடுமண்ணே

வேடன்சொல்.

எய்திடேக்கோடிடேவந்தமான்
இங்கேவிட்டெங்கேபோகும் சும்மா
இல்லையென்றுநீங்கள் சொல்லுதேவீணே
இதுபொல்லாப்பாகும்



பாங்கியர்சொல்,

அக்கரையாய்ச்சொன்னாய்முக்கியமாயெங்கள்
அண்டையிலேவந்துமேடா உன்சொல்
அடுக்காதுஇங்கேதொடுக்காதுவீண்சண்டை
அண்ணே நீகேள்ரோடா

வேடன்சொல்.

எள்ளளவாகிலுமென்னிபோராமல் நான்
எனைக்கள்ளனென்றாய்
எய்தமானிங்குவராமலெவ்விடம்போய்
இயம்பிடுவீர்களன்றாய்

பாங்கியர்சொல்.

உள்ளங்கைக்குள்ளேநீவைகுந்தங்காட்டுகிறாய் வீணாய்
உள்ளதுந்தக்காது
உக்கிக்கிரணமபொட்டெங்கியுநீயிங்
குறைதமான்சிக்காது

வேடன்சொல்,

ஆரணங்கேவந்தமானையொளித்தும் இது
அறிகிலோமென்றுரைத்தீர்
அநியாயமல்லவோஎன்மான்சிக்காதென்றீர்
அதைநீங்கள்விட்டிடுவீர்

பாங்கியர்சொல்,

காரணமாகவேநீயெய்தமானுக்குக்
காலிரண்டுகையுமுண்டோ இரு
காதும்பொன்றோடையுங்கோதுங்குழலும்
கழுத்திற்பணியுமுண்டோ

வேடன்சொல்.

மங்கையரேசகியேயொருகாரியம் நீ
வாக்கினிற்பேசநன்றே
வழுத்தியசொற்படி எந்தன்மானுக்கு
வகையுண்டெனப்பேணின்றே

பாங்கியர்சொல்.

இங்கேயுரைத்திடுவோமென்றுசொன்ன இது
தெனக்குத்தெரியுமண்ணே
ஏர்க்காதுந்தநுங்கிடுக்கமும்வந்திடும்
இதுநீதியல்லவண்ணே

பாங்கியர்சொல்-விருத்தம்,

தனித்துரைக்கவேண்டுமென்றுசொன்னீரந்தச்
சமாசாரம்யானறிவேன்சாற்றக்கேளும்
இனித்தமொழிவள்ளியம்மீர்களைக்குப்போன
இடத்திலிலேசேர்ந்தனோந்தனென்னருதோ

மனத்தை மோசமாயிதோவதலியான
மாதரில்லாமற்புணர்ச்சால்மறைந்தோசொல்லாய்
உனக்குமவள்ளிதனக்குமொருவகைவராமல்
உயிர்க்குயிராய்காப்பதெவருரைத்திடாயே.

வ-ம். ஓகோகேளுமையாவேடரே நீரெங்களுக்குத்தவித்துசொல்லுமென்றசமாச்சாரம் எங்களுக்குந்தெரியும் எங்கள்வள்ளியம்மனை நீர் சுனைக்குப்போனவிடத்தில் சேர்ந்தனைந்திரே என்னருந்தோ இதுவென்ன மாயமோ நாங்களில்லாமல் நீர்புணர்ந்தமரியாதையோ உங்களிருவருக்கும் யாதொரு இடரில்லாமல் காக்கப்பட்டவர்யாவர் சொல்லுமையாவேடரே.

பாங்கியர்சொல் விருத்தம்.

மைக்குழல்சேர்ந்திருவிழியுஞ்சிவப்புச்செங்கை
வளைநெரியவிழுவரொன்றாய்மருவும்போது
பக்கவலுவாயொருவரில்லாவிட்டால்
பலபேர்க்குத்தெரியாதிர்பகைவந்தெய்துஞ்
சிக்கெனவும்மினத்திலிதுசொல்லொணுதோ
தேவிவள்ளிக்கெங்கள்மனத்தெரிந்திடாதோ
அக்கரைபோலமைக்கினியேயன்விண்பொல்லாப்பு
அழைவிப்பீர்வருவதும்பட்டவிருவிரே

இதுவுமது விருத்தம்.

கடந்தகாரியங்கள்முன்னேநடந்ததைச்சொல்லவென்ன
துடர்ந்தானைபைக்கன்றுநதிச்சொல்லுமென்மறைப்போராக்கள்
மடந்தைதனையுமனதிற்கூடிவந்துபோயிருப்பீர்களாதலால்
இடந்தனில்வில்லும்யாங்களேயறியோமையா

வ-ம். இன்னமும் கேளுமையாவேடரே எங்கள்வள்ளித்தாயைநீர் மருவும்போது எங்களனுமதியிருந்தால் உங்களிருவருக்குமேன்மையுண்டு அவ்விதம் நடவாதகாரியத்துக்கு யாவருக்கும்பகையுண்டாம் இது எங்களுக்கு ஆகிறதென்ன முன்யானையைக்குத்தி யொருபெண் சொல்லினுள் மறைத்தாள் அப்படிப்போல நீர்உம்முடைய எண்ணத்தையெங்களுக்குத்தெரிவித்தால் வரப்போவ நாங்கள் நடத்தோமா ஆடுனுஞ்சந்தேகமில்லை நீரிவ்விடமிரும் யாங்கள் வள்ளியிடம்போய் மறுபடியும் வருகிறோமையாவேடரே.

பாங்கியர்சொல் விருத்தம்.

சாந்தகுணமானின்றவள்ளித்தாயே
தனுவொடுமோரோசையிற்றனுவொன்றேந்தி
மாந்துயிரோன்றேந்தியொருமானைத்தேடி
வந்துநின்றார்நீயறிந்தால்வழுத்துஞ்சும
பந்தினிறங்கொளியாதேசொல்வாய்த்தேனும்
டாவுடனுயிருமெனப்பழகிறான்னருந்



சேர்ந்திருந்தும்வேற்றுமையேசெய்தாயுந்தன்
சேதியெல்லாந்தெரியுமினிச்செப்புந்தானே.

வ-ம். அகேள்வாராய்வள்ளித்தாயே கையிலொருவில்லும்அம்புமேந்தி ஒருமானைத்தேடி யொருவேடன் வந்துநிற்கின்றான் அவனைநீயறிந்தால் ஒளியாமல் எங்களிடத்திற்சொல்லு நாந்தேனும்பாலும் உடனுமுயிரும்போலிருந்தோமே அப்படியிருக்கஉன்சேதியெல்லாம் எங்களுக்கு மறைத்துச்சொன்னாயே உன்சேதியெல்லாம் எங்களுக்குத்தெரியும் இப்போதாவது நிச்சயவார்த்தையைச்சொல்லுமம்மா தாயே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம் ஆதிதாளம்.

| | |
|---|---|
| விள்ளுகிறேனுள்ளசேதிசொல்லக்கேளாய் | சகியே |
| மெத்தமெத்தவுண்டதைவிளம்பக்கேளாய் | |
| கள்ளமில்லாவுங்களிடமறைத்திடுவேனோ | சகியே |
| கனவிலுமுங்களுக்குப்பொய்யுரைத்திடுவேனோ | |
| விதிவசனுருட்டிவைத்ததைக்கூறியாவதேன் | கண்ணி |
| மீதிற்சிக்கிக்கொண்டமீனசிந்தைகோலவதேன் | |
| பதிவுடனேத்துவேட்டர்போலிங்குவந்ததும் | என்முன் |
| பஞ்சையைப்போற்றஞ்சமென்றேகெஞ்சுகின்றதும் | |
| வேங்கைமரமாய்ப்பரணிலோங்கிநின்றதும் | சகியே |
| மெத்தவேழைக்கிழவனைப்போற்றூங்கிநின்றதும் | |
| தாங்காத்தண்ணீர்தவிக்குதெனநேங்கிநின்றதும் | பின்பு |
| தண்ணீர்ச்சனைக்காட்டிடநானேங்கிசென்றதும் | |
| ஆசையானபெண்ணேயென்றுகைபிடித்ததும் | சகியே |
| ஆனைவரவழைத்ததும்யான்றடிததும் | |
| ராசியாகநின்றதின்பின்னானைபோனதும் | அங்கே |
| நாடிமதன்போலுமென்னைக்கூடிவாவதும் | |
| ஓவியமேயம்பால்வேலுமயிலுங்கண்டதும் | எனக் |
| குகந்துவந்துவேலவர்சொரூபங்கொண்டதும் | |
| ஆவியொன்றுடலிரண்டுமோகினேமுன்னே | சகியே |
| அந்தவேலரிந்தவேடராமடிபெண்ணே | |

பாங்கியர்சொல் விருத்தம்,

அப்படியேநல்லவிசேஷந்தாயும்
ஆண்டகுலதெய்வமதையனைந்துக்கொண்டால்
இப்படியென்னொருவார்த்தைசொல்லொணுதா
எல்லோர்க்குநலந்தேடியிசைந்தாயம்மா
செப்புமொருநிசநிசந்தானவனாயுந்
சேர்ந்ததினால்வெகுகோடிபலனைப்பெற்றோம்

கோப்பெனவேயவரிடத்தினிற்போய்நாங்கள்
குணமுடனேசேர்வைசெய்துகூட்டிவாரோம்

வ-ம், மகாசந்தோஷம் மகாசந்தோஷம் ஆனால்எமதுகுலதெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளே நீயணைந்துகொண்டது நல்லபாக்கியந்தான் ஆகிலுமெங்களுக்கு இப்படியென்றொருவார்த்தை சொல்லக்கூடாதோ இப்போது நீசொல்லிவந்ததெல்லாம் நிசந்தான் நாங்கள் அவளை இவ்விடம் அழைத்துவருகிறோமம்மா வள்ளித்தாயே (வள்ளிவசனம்) நல்லதப்படியே அழைத்துவாருங்கள்தோழிமார்களே.

பாங்கியர்சொல்-விருத்தம்.

அருமையுடனிங்குவந்தவேலக்குமாரா
அந்தரங்கமாகவும்வந்திங்கேகூடி
மருவுதற்கெத்தனைபாக்கியம்பெற்றோம்நீரும்
வரக்கருணையின்றுபெற்றோம்வறுமையற்றோம்
கருணையுடன்வள்ளியைநீர்கைவிடாமற்
கலந்தணைந்துசேர்த்துக்கொள்ளுங்கபடில்லாதிப்
பரண்மீதில்வந்திருந்துவள்ளிமீது
பட்சம்வைத்துயெங்களையிரட்சிப்பீரே

வ-ம். சரணஞ்சரணமையா கழுகாசலசுப்பிரமணியக்கடவுளேபோற்றிபோற்றி எங்கள்வள்ளியம்மனைத் தாங்கள் சேரும்படியாய் எத்தனைபாக்கியம்பெற்றோம் இப்போது வள்ளியம்மனிருக்கும் பரண்மீதுதாங்களவந்து வள்ளிநாயகியுடன்கூடிவிளையாடியிருந்து இரட்சித்துஎங்களையும்பாதுகாக்கவேண்டும் சுப்பிரமணியக்கடவுளே(சுப்பிரமணியர்வசனம்) அப்படியேபோவோம்வாரும்பாங்கிமார்களே.

போதுகண்ணிகள்-இ-ம்-சாரங்கம்-ரூபகதாளம்

ஜாடையறிந்தேசகிமார்கள்தன்டனத்திற் போந்தார்
தருணமென்றேவள்ளியிடஞ்சுவாமியும்பின் சேர்ந்தார்
கூடிவிளையாடிமுத்தங்கொடுத்துவள்ளி மகிழ்ந்தாள்
குமரகுருபரன்கலவிருசிதுசெய்ய வந்தான்
சிமிள்மூலையைநெருடிவள்ளித்திருமார்பிற் கூர்ந்து
சுக்கரவேளதிகாயக்கேடிவிளை யாடி
அமரர்பணிவேலர்வள்ளிக்காசைமெள்ளக் கொடுத்தார்
அன்புவைத்தேவள்ளியும்பின்னதிகமோகங் கொடுத்தாள்

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

அறிந்துமறியாதுகுறையதுசெய்தீனுஞ்சுவாமி
அன்புவைத்தேயெனையணைந்துஆதரிப்பீர்சுவாமி
மறந்தெனைவிட்டகலாமல்மறுமுகம்பாராமல்
வாஞ்சைவைத்தேதனையணைந்துமருவுமையாசுவாமி



சுப்பிரமணியர்சொல்-கண்ணிகள்.

ஆமெனக்குமுத்தருவாயாளுண்டடி பெண்ணே
அவளிலுமதிகமேலதிகமாசைவைப்போ கண்ணே
சிமையிலுள்ளசகலசெந்து தனக்கே
தினந்தினமும்வரங்கொடுக்கச்செயல்தருவோ முனக்கே
வள்ளிகுறமாதேபட்சமரகதமே குயிலே
மனம்போலவெனக்குலாய்ததவஞ்சிமட மயிலே
எள்ளளவும்பிரிவதில்லையென்மொழிதப் பாதே
இருவருக்கேலக்கோறமிசைந்திருப்போ மாதே
கோதையடாகுறவர்திணைக்கொய்ய வருவாரோ
குலத்துடனேசேர்க்குசிற்றூர்க்குடிசையிலிருப் பீரோ
மாதரசேபோயினும்பின்வாஞ்சைமற வாதே
மனதிலென்னைநினைத்தவுடன்வருவேன்மலை யாதே

பொது-கொச்சகக்கலிப்பா.

மானைப்பொருவும்விழிவள்ளியிடஞ்சேர்ந்துமுரு
கோனும்புரத்துக்குவட்டருகேசென்றபின்பு
ஏனற்புனங்காத்திருக்கும்வள்ளிதன்னிடத்தில்
கானக்குறவர்கதிர்கொய்யவந்தனரே

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுக்குச் சிலபுத்திமதிகள்சொல்லி வேள்விமலைக்கருகாமைச் சுப்பிரமணியர்சென்றபின் இங்கேதினைப்புனத்தில்வல்லியிடம் அண்ணமார்களுஞ் சிலகுறவர்களுந்தினையைஅறுக்கவருகிறவிதமெப்படியென்றால்.

குறவர்-வேடர்-தினையருக்கவருகிற-கண்ணிகள்.

இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

குறத்திகுன்றவர்தினைப்புனத்தினில்குடியேவிளை யாடியே
குடையும்பண்ணுங்கத்தியுங்கொண்டுசாடையுணர்ந்துச் சுற்றியே
உறத்திறலவள்ளிக்களத்திற்சேர்த்திங்குயர்க்கம்பாரஞ் செய்யுங்கள்
உகந்தமேருவென்னவேகதிர்க்குவித்துவானி லுன்னவே
தரத்துக்குத்தக்கதிட்டமாய்க்குடுஞ்சனமெலாம்வெகு சட்டமா
தான்சுமையெடுத்திட்டனர்வள்ளிமானையுமழைத் திட்டனர்

அண்ணமார்-வசனம்,

அகோவாருமம்மாவள்ளிநாயகி நாம்பயிரிட்டதினைக்கதிர்களை எல்லாங்கொய்து அவரவர்கள்சுமையைத் தலையிலெடுத்துக்கொண்டுசிற்றூருக்குப்போகிறபடியால் இனியிவ்விடம் இருக்கவேண்டியகாரியமில்லை கூடவேவாருமம்மாவள்ளிநாயகி.

வள்ளியம்மன்-வசனம்.

நல்லது அப்படியேவருகிறேன் நடவுங்கள் அண்ணமார்களே.

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

அறிந்தவ பாங்கிகேளாயண்ணமார்க திருக்கொய்து
பறிந்துடன்குறிஞ்சூர்க்குப்பண்புடன்வாவென்றாரோ
பொருந்தியேயென்னைச்சேர்ந்துபுணர்ந்தநாயகனுான்வந்தால்
வருந்தி மீபசகியோதேடிவாடுவாரதற்கென்செய்வேன்

வ-ம். கேளுங்கள்என துபாங்கிமார்களே என் அண்ணமார்கள்வந்து தினைக்கதிரைக்கொய்துக்கொண்டு என்னையுஞ்சிற்றூருக்குக்கூப்பிடுகிற படியால் என்னைச்சேர்ந்த வென்பிராணநாதர் என்னைத்தேடிக்காணாமல் வாடுவாரோ அதற்குநான் என்னசெய்வேன் தோழிமார்களே.

வள்ளியம்மன்-புலம்பல்-கண்ணிகள்

இ-ம். நீலாம்புரி-திரிபுடைதாளம்,

அன்னமேயென்பாங்கிமாரே — என்
அண்ணர்வந்தழைக்கின்றாரே
என்னசெய்வேன்தோழிமாரே — அண்ணர்
என்னையுமழைக்கின்றாரே
வேலவனாயினிக்காண்பேனோ — காணும்
விட்டுதனித்திருப்பேனோ
வாலமுருகனைநானோ — விட்டு
மணக்கெப்படிதான்போவேனோ
பேடிழந்தவன்றிலானேன் — நல்லப்
பிணையிழந்தகலையதானேன்
கூடிழந்தபட்சியானேன் — மரக்
கொம்பிழந்தகொடியதானேன்
பரனைவந்துதேடுவாரோ — வேலர்
பரதவித்துவாடுவாரோ
வெறுத்தினைப்புனத்தைப்பார்ப்பார் — இனி
மிஞ்சிப்போச்சுதென்றுள்ளம்வேர்ப்பார்
கண்டறும்பிப்போவோமென்றால் — அண்ணர்
கடிந்தகோபமாவாரென்றால்
விண்மெனக்கேகலாமோ — வடி
வேலர்மனமென்னலாமோ

வ-ம். அகோவாரும் பாங்கிமார்களே என்பிராணபிரேகிராகிய வடிவேலனைக்கண்டு விடைபெற்றுக்கொண்டு ஊருக்குப்போகவேண்டுமானால் அண்ணர்களடிக்கடிகூப்பிடுகிறார்கள் அவர்களுக்குத்தெரிந்தால் கடிந்தவார்த்தைசொல்வார்கள் இதுக்கென்னசெய்யலாம பாங்கிமார்களே (பாங்கிவசனம்) ஆனால் வாருமம்மாவள்ளித்தாயே சுப்பிரமணியக்கடவுள் ஒருவேளை இங்கேவந்துஉன்னைக்காணாதிருந்தால் சிற்றூருக்குவருவார் வந்தால் உன்னையவரிடஞ்சேர்க்கிறோம் இப்போதுபோகலாம் வாருமம்மாவள்ளித்தாயே



வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

என்றுபாமாரிடத்திற்சொல்வேனையா
இன்னம்வடிவேலர்வரவில்லையேநான்
சென்றிடசிற்றூருக்குக்காலேக்கவில்லை
சீக்கிரமாயென்னையண்ணரழைக்கிறார்கள்
நின்றுநின்றுபார்த்தாலும்வருவதில்லை
நிர்த்தமயிலேம்மயிலினமேயனமேமானே
அன்றில்களேகிள்ளைகளேபோய்வாரேநான்
அன்பர்வந்தாலவர்தனக்கீதருளுவீரே.

(வ-ம்) அகோவாருங்கள் மயில்கள்குயில்களே பட்சிகளேமிருகங்களே என்பிராணநாத ரிங்கென்னைத் தேடிவந்தால் உம்மைக்காணாமல் வள்ளியம்மைத்தேடி ஊருக்குப்போனாள் நீர்வந்தால் சிற்றூருக்கிதுமார்க்கமாய் வரச்சொன்னாளென்று சொல்லுங்கள் பட்சிகளே

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்.

சங்கராபரணம-அடதாளம்.

கோகிலமேகிள்ளைகாள் — என்சுவாமி
குறித்தெனைத்தேடிவந்தால்
வாகுடன்சிற்றூர்க்கு — நான்போகும்
வழிமார்க்கஞ்சொல்வீர்களே
அமரரானகந்தன் — புனந்தனில்
ஐயோகாணேனென்று
தேடியேயிங்குவந்தால் — நான்போகிற
திசைகண்டுசொல்வீர்களே
மாக்குயிலேகிளியே — என்னைச்சேர்ந்த
மன்னவர்தேடிவந்தால்
பாங்குடன்சிற்றூர்க்கு — நான்போகின்ற
பாதையைச்சொல்வீர்களே
கும்பிட்டேன்மானினமே — சுவாமி
குகனிங்கேதேடிவந்தால்
கும்பிட்டுச்சிற்றூர்க்கு — வரச்சொல்லிக்
கொண்டாளென்றேசொல்லுவீர்
மாடப்புறாவன்னமே — என்னைச்சேர்ந்த
மன்னவர்தேடிவந்தால்
நாயகர்சிற்றூர்க்கு — நான்போகிற
கன்மார்க்கஞ்சொல்வீர்களே
வின்னும்பசுங்கிள்ளைகாள் — என்சுவாமி
வேலவர்தேடிவந்தால்
நில்லாமல்சிற்றூர்க்கு — வரும்படி
நீங்களும்சொல்வீர்க
பாங்கியுடன்சேர்ந்து — சிற்றூருக்குளே

பாதவித்தேகுமென்னைச்
சேர்ந்தகாங்கேயன்வந்தால் என்சேதி
தெரியவுஞ்சொல்விர்களே
அன்புள்ளவன்னங்களா என்சுவாமி
ஆண்டவர்தேடிவந்தால்
நம்பினோனுனுங்களை வழிமார்க்கம்
நன்றாய்ச்சொல்விர்களே

வள்ளியம்மன் சொல்-கொச்சகம்,

கூவுமயிலினமேகூர்ந்தகருவண்டினமே
மேவியென்னைச்சேர்ந்தவேலவனிங்குவந்தால்
ஆவிபதாரமலாதாவாய்ச்சேதிசொல்லி
மாவிடையசிற்றூர்க்குவரச்சொல்லிசொல்வீரே,

இதுவுமது-கொச்சகம்.

அன்னமேகிள்ளைகளே அழகுசிறைவண்டினமே
பொன்னுலகின்வேலரிந்தப் புனந்தனிலேவந்தாக்கால்
கன்னிவள்ளியுஞ்சகியுங் கானகத்தைவிட்டேகி
செவ்னெல்வளசிற்றூர்போய்ச் சேர்ந்தாளென்றுசொல்வீரே.

வ-ம். ஆ-ஆ-அன்னங்களே தாராக்களே மயில்களேகுயில்களேமாடப்புறாக்களே வண்டுகளே மான்களே உங்களைநான் கும்பிடுகிறேன் என்னைச்சேர்ந்தவரான என்பிராணநாயகராகிய சுப்பிரமணியக்கடவுள் என்னைத்தேடிவந்தால் மிகவும்பாதவித்து வாடி. பாங்கிமாருமவள்ளியும அண்ணமாருடன் சிற்றூருக்குப்போனார்களென்று இந்தவழியையுங்காண்பித்து நான்சொன்னதாய் என்பிராணநாயகருக்கு என்னைவேண்டி நீங்கள்சொல்லவேண்டும் பட்சிஜாதிகளே.

பொது விருத்தம்

வற்றாதவேழ்விமலைச்குடிசிற்றூர்க்கு
வள்ளியம்மன்வந்தபின்புளைமையாகப்
பெற்றானநம்பிபராஜேந்திரன்றானும்
பிரியமுறுமாளை யெடுத்தணைத்தேமுத்தம்
சற்றேதந்திங்தாயே எனவுங்கொஞ்சிச்
சார்ந்தகுலவேடரெல்லாந்தான்கொண்டாட
குற்றமில்லாமனையும்விட்டகன்றிடாமற்
குளிர்ந்துமகிழ்ந்திருந்மனவுபுகழ்ந்தாரன்றே.

வ-ம், இந்தப்பிரகாரம வள்ளியம்மன் பட்சிகளோடு சொல்லிக்கொண்டுவந்து தங்களிருப்பிடமாகிய சிற்றூருக்குவந்து சேர்ந்தபின் தாய்தகப்பனாகிய நம்பிமகாராஜனு நங்கைமோகினியும் சிலவேடர்களுஞ் சந்தோஷமடைந்து வள்ளியம்மனையெடுத்து முத்தங்கொடுத்துப் புகழ்ந்தும் மனையில் நுமம்மாவென்றுசொல்ல வள்ளியம்மன் சொல்லுகிற விதங்காண்க.



வள்ளியம்மன்சொல் விருத்தம்.

மாதாவேயென்னைவளர்த்ததாயேவுந்தன்
மகிமையினாற்றினைக்காத்துவந்ததாலே
பேதாதிபேதங்கள்வந்ததில்லைப்
பின்னையொருமயக்கமில்லைப்பிரளியில்லை
ஆகாரமாகவுந்தன்றனைக்காணாமல்
அங்கமதுமெலிந்ததல்லாலருளக்கேளு
கோதில்லாவுந்தனைநான்கண்டபோதே
குளிர்ந்ததெந்தனுடமனமுங்குளிர்ந்ததின்றே

வ-ம், அகோவாருமம்மாதாயே நான்தினைப்புனங் காத்திருந்ததிற் பேதங்களில்லை உன்னைக்காணாமலிருந்ததே எனது தேகமெலிந்து மனம்வேறாயிருந்தது இப்போதுன்னைக்கண்டபோதே என்சரீரமும் மனதுங்குளிர்ந்ததம்மாதாயே (நங்கை-வசனம்) அப்படியேநல்லபாக்கியம் வேலவர்கிருபையால்விட்டிலிருமம்மாதாயே.

பொது-வசனம்

இந்தபிரகாரம் சிற்றூரில்வள்ளியம்மன்சேர்ந்துதாயாரிடமிருக்கும்போது தன்னைச்சேர்ந்தவேலவர்காணோமென்கிறதாய் அவர்மீது கோபங்கொண்டு பாங்கிமாரோடுபிரலாபிக்கிற விதமெப்படியென்றால்,

வள்ளியம்மன்சொல்-தரு-இ-ம்-சுத்ததோடி-ரூபகதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணேனேசேடி என்பிராணநாதா
இன்னம்வரக்காணேனேசேடி

அநுபல்லவி.

அன்னமுங்கசப்பாச்சே ஆநடன்சொன்னதுமேச்சே (இன்]

சரணங்கள்,

மறக்கமனம்வருவ தில்லையே எந்தன்கண்ணில்
உறக்கம்வருவ தில்லையே
இறக்கமில்லாததேனோ என்மேல்விரோதந்தானோ (இன்
காதமோதூரமுந் தானோ என்னைத்தேடிக்
கந்தன்வராதது மேனோ
மாதேஎன்பாங்கிமாரே மன்னனிடஞ்சொல்வீரே (இன்)
மானேஎனைத்தினைப்புனந் தேடி வந்தவேலர்
வராதிருப்பதென்ன சேடி
ஏனோயெந்தன்மீதிற்கோபம்என்சொல்வேனவர்பிரதாபம் (இன்)

விருத்தம்.

புளகமுலையிரண்டுவிம்மிப்பசுமைபூப்ப
பூகஞ்சவ்வாதுங்கதம்பப்பொடிவாசங்
களபசுந்தாதியெல்லாம்பொரிந்திடும்வேர்வை
கனாங்கோட்டமன்மதன்வேள்சரங்கள்பாய

பள்ளூடமாதரையுமேசத்தென்றல்
பாய்ந்துபுலிபோற்சிறப்பசுந்தோகை
இளமயில்போல்வள்ளியும்பஞ்சணையுற்சேர்ந்தே
ஏங்கினள்விரகமுங்கொண்டேங்கினளே

பொது-கண்ணிகள்-இ-ம்-அடதாளம்

வரச்சொல்லிச்சொல்வாள் இன்னமுமவர் வரவிலையென்பாள்
உறக்கமும்கினியாள் கனத்நெஞ்சம உறுதிநொந்தலைவாள்
பூமலர்முடியாள் ஆவின்பாலைப் புகட்டியுங்குடியாள்
காமலச்சிரியாள்மதன்காமக் காச்சலின்குறியாள்
சந்தனங்களைப்பாள் அதைக்கையால் தனைவாரியிறைப்பாள்
சிந்தூரங்கழிப்பாள் அணிவட்டத் திலர்தமுமவிப்பள்
அன்னமுமருந்தாள் கனிரசம் அமுர்தமும்பொருந்தாள்
பொன்னணி துறந்தாள் கைகளையும் போனதுமறந்தாள்
இதுவென்னகூதோ வள்ளிக்குவந்த இடரும்நீங்காதோ
மதிமோசமென்றூர் தாய்தந்தையிவ் வசைபார்ப்போமென்றூர்

பொது-வசனம்

இந்தப்பிரகாரம்வள்ளியம்மன்விரகவாசனையிலமூந்தியிருக்கும்போது தாய்தந்தையர் இதுஎன்னமோகானகத்தில்வந்தயிடரோ அல்லது மருளோவென்று பூசைகள்போட்டுப்பார்க்கிறவிதமெப்படியென்றால்,

விருத்தம்.

ஐயனார்சனக்குமன்னையுங்கன்னிமார்க்கும்அஷ்டதிசைதுஷ்டதெய்வமகற்குத்தங்கள், மெய்யதிடாய்விளங்குகுலதெய்வம்வெற்றிவேலர் தெய்வந்தனக்குமெச்சவேண்டிகைக்கு, காணிக்கைக்குறவர்கட்டிக் கருங்குழலாள்வள்ளிசிறுகந்திமீதேய, வெய்யகறுப்பணுகாமல் புலம்பிடாமல் மெவியாமற்களிப்பாட்டம்விரும்பினூரே

பொதுகண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

கொண்டாடிப்பூசையிடத்தெம்பிட்டாரே கானக்
குறவரெல்லோருங்கூடிக்கும்பிட்டாரே
பண்டாரப்பெட்டிகையிலெடுத்தாரே கல்ல
பண்புடையகோவிலிலவந்தடுத்தாரே
சம்பாவரிசிகல்மூப்பதெடுத்தார் லாடத்
தம்பிரானுக்குப்பொங்கல்தனைப்படைத்தார்
அம்பாரம்போல்முட்டைபொரித்துவைத்தார் குடத்தில்
அள்ளியேதேன்பால்பழமும்உரித்துவைத்தார்
செங்கரும்புமிளநீருங்குவித்துவைத்தார் சாவல்
செங்கிதாயிறுதாருஞ்சமைத்துவைத்தார்
வங்கியும்வீச்சரிவாளுஞ்சமுதாடும் சொற்ன
மணிக்கட்டிவல்லயங்கப்பரையோடும்
கள்ளுக்குடமிருநூறுஞ்சுத்தியாய்வைத்தே கல்லக்
கடிபுடன்சாராயங்குத்தியுங்வைத்தே



மங்கையர்குறவர்கூட்டிக்கூக்குரலிட்டே சுவாமி
வந்துதலைச்சுற்றியாடிக்குலைவையிட்டே
சங்கையுடன்பொங்கல்வைத்துத்தூண்டினூரே சுற்றங்
தம்பிரான்கள்பெயர்சொல்லிவேண்டினூரே
விரகாளிவனப்பேய்ச்சிசெண்பகவல்லி இந்த
வேளைக்கிவந்துதவும்பாதாளவல்லி
ஆரபாரக்கோட்டைமலைக்கருப்புசாமி வெற்றி
ஐயன்மாடலாடயிருளப்பசாமி
காவனத்திலட்டதிக்கிலுள்ளதெய்வமே என்று
கையெடுத்துவேடர்கள்போற்றிசெய்துமே
சென்னிவணங்கிக்கும்பிட்டுக்கையெடுத்தார் வேடர்
செப்பிப்பாகபூசைபோட்டுத்தீபங்கொடுத்தார்
சன்னதங்கொண்டெல்லோருங்குதித்தாட வள்ளித
தாயுமனைத்தருட்கொண்டுமதித்தாட
நன்மைசெய்யுங்கழுதுமலைக்கந்தவேளை என்றும்
நாடிநோக்கிக்கும்பிட்வாளந்தவேளை

விருத்தம்

குற்றவர்குறவரெல்லாங்கும்பிட்டன்புடனேபோற்றி
நின்றுடன்விபூதிவாங்கி நிச்சயங்காப்பாயென்று
கன்றியேமெலிந்துவள்ளி கன்னிகைதனக்குப்பூசி
வென்றியாய்மனைசேர்ந்துள்ள மெலிந்திடாதிருந்திட்டாரே.

இதுவுமது.

இருப்பள்வள்ளியெழுந்திருப்பள்மனங்கொள்ளாமை
ஏக்கமொடுதுகளைமனதெண்ணியெண்ணி
மருக்குழலில்முடித்தரியாற் வுடலைப்பாராள்
மனக்கவலைதீர்ந்தறிபாள் வகையாய்நெஞ்சம்
உறக்குமொருகையைக்கன்னத்தில் வைத்ததே
உடல்மெலிந்தேதுயிரமெல்லாம் மருவிபபோகம்
பெறுக்கிடவேகனவுகண்டு முழித்துவாடி
பித்தனைப்போலாகை சொண்டுபிதற்றுவாளே.

இதுவுமது

இப்படிவள்ளியும் புலம்பித்தயில் கொள்ளாமல் இரவெல்லாம்வருந்திமதிமயங்கிக்குன்றி, எப்படி நான்சகிப்பேனென்மனதென்றெண்ணி ஏக்கமுடன்வள்ளியம்மனிருக்கும்போது, அப்புறத்திற்சென்றவடி வேலர்தானும் அவசரமாய்த்தினைப்புனத்தருகேவந்து, செப்பமுடன்கள்ளியுஞ்செந்தினையுங்காணூறியங்குவார் தமதுமதிமயங்குவாரே

(வ-ம்) இந்தப்பிரகாரம்வள்ளி சிற்றூரில்விரகவேதனைப்பட்டிருக்கும் போது அங்கே தினைப்புனத்தில் வந்துபார்த்து வள்ளியைக்காணுமல்சுப்பிரமணியர் சொல்லுகிறவிதமெப்படியெறால்

சுப்பிரமணியர்சொல்-கட்டலேக்கப்பா,

தானுமாதளைப்பூர்த்ததுமிந்திடம் தானும்யானுமேகூடினதிந்திடம், கோதுங்கொண்டைக்கலந்ததுமிந்திடம,கொம்பிளுனைப்பாய்ந்ததுமிந்திடம், மாதுமஞ்சள்துலண்டதுமிந்திடம் மங்கைநானுமாருளினதிந்திடம் சாதிரேலைகழன்றதுமிந்திடம் காமராசன்பிரிந்ததுமிந்திடம்.

(வ-ம்) ஆ - ஆ -இதுதானேதினைப்புனம் இங்கேதான்வள்ளியும் நானுமிராக்கூடிவிளையாடினேம் இந்திடத்தில் இருப்பாளென்று வந்தேன் இப்போது காணேமே இதற்கு நானென்னசெய்வேன்.

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்

மனதில்நினைந்தாசைகொண்டுவந்தேனிங்கு வள்ளியுந்தான் பாணமீறிற்காணுமென்ன, தினைப்புனத்திற் கதிர்களையுங் கொய்துக்கொண்டு தேன்மொழியைக்கூட்டியவர்சென்றூரே தான் மனத்தகண்ணுளையுங் கேளாமலூமைக்கண்டகனுப்போலிருக்குதேதானேயோ - தனித்தவள்ளி பாங்கியருமென்னைவிட்டுத் தான்சென்றாற்போலிருக்குந்தன்மையாச்சே

(வ-ம்) ஆ - ஆ-இதுஎன்னமாயம்நான்தினைத்தங்க வள்ளிநாயகியுந் தினைக்கதிரையுங் காணேமே அல்லது அவளுடைய அண்ணமார்கள்தினையறுத்துக்கொண்டு அவளையுங் கூட்டிக்கொண்டுபோனதுபோற்காண்கிறது இதென்ன ஊமைகண்ட கனவைப்போல பாங்கியுடன்வள்ளிம்மைவிட்டுபோனளிதற்கென்னசெய்வேன்

சுப்பிரமணியர்சொல்-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

எங்குபோனளோ-வள்ளியைக்காணேம் எங்குபோனளோ
கொங்கார்தினைப்புனத்திற்-சிங்காரமாயெனது
பங்காயிருந்தவள்ளித்தங்காயெனைவிட்டு — எங்கு
மதிமுகவசீகரதாள் — வள்ளியைக்காங்கும்
வளர்பரண்மேவுகப்புகாள்
சதியோசம்மதியோ — நான்செய்குறை
தானேஎன்விதியோ
பொதுவாயிருந்துநிஜ — மதுவேசொல்லுங்கிளிந்தச்
சதிகாரிபோனவழி எதுவோதெரிந்ததில்லை — எங்கு
வாசநற்பெண்ணுளை — வள்ளியெனுகள்
வனத்தினைபுனத்தாளை
பாசமிருகங்களோ — பாதகிபோன
பாதையைச்சொல்வீரே
ஆசைகொண்டவுனக்குரோசமுமில்லையென்று
மோசஞ்செய்தெனைவிட்டுவேஷஞ்செய்தபாதகி — எங்கு
நீதான்செல்வழியே — தினைக்கதிரை
நிதங்கொய்யுங்கிளியே
ஆதாரநீயன்னமே — இன்னுமொன்று
அறிகிலீரோமுன்னமே



...நாவென்மைபயிராதோவல்லாதென்ன
குத்தாளனசத்தங்கேளாதேகும்பிட்டதும் — எங்கு
கீராதமோகம் — கந்தெனைக்குடிச்
சேர்ந்தாள்சம்போகம்
வாரோனொல்றுரைத்தே — போனவுடனே
வந்தேனந்தரத்தே
ஆருதத்திரைபவைத்து நீறுநீருக்கியென்னைப்
பாராமலோர்வசனங் கூறுமற்றனிவிட்டு — எங்கு

சுப்பிரமணியர்சொல் விருத்தம்

அடக்கமுடன்வேலியிட்டுப் பயிரைநட்டால் அழிப்பதுதான்எங்குமுண்டோவதுபோல்முத்து, வடக்காகமாலைவள்ளி போறேனென்றோர்வார்த்தையுஞ்சொல்லாமலிந்தவனத்தில் விட்டுநடக்கமனம்பொருந்தினளோ தனியேஐயோ நட்டாறு தஞ்சமெனவுட்டாள் நானிவ், விடத்திளினேயினம்பிரிந்த மான்போலானேன் என்செய்வேனினிமேலுமென்செய்வேனே.

(வ-ம்-)ஆ-ஆ-உலகத்தில் வேலிவைத்தல்லவோபயிரிடவேண்டும்அதுபோலிந்தவள்ளிக்கு நானுநவேலியாயிருக்கஎன்னைநட்டாற்றில்விட்டதுபோலச்செய்துவிட்டுப்போகமனம்வந்ததல்லவா.

சுப்பிரமணியர்சொல்-தரு-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்.

சொருகுகொண்டையழகி — என்மனதுருகுதுருகுதிளகி
ஆறுகுமாமலர்மேலணைந்துசுகந்தந்து
ஆரபாரத்துடன்வாரிமுடித்தமலர்ச் — சொருகு
சரிகைச்சேலையுடையும் — மயிலின் — சாயலன்னநடையும்
உருவினரம்பைத்துடையும் — கையரலொருபிடிக்குள்ளிடையும
மருவிமருவியென்னை மயக்கிக்கலவிசெய்து
வஞ்சிநீபோனது வஞ்சமோசொல்லடி — சொரு
நேற்றியானபெண்ணேநீ ஒரு — வார்த்தைசொல்லாயோகண்ணே
பார்த்துநீதயவுபண்ணே அகப் — பரமனறியகண்ணே
பூர்த்தமாமலர்மேர்ச்சேர்த்துக்கையாலணைத்தத
பார்த்துப்பார்த்துநிதங் கோர்த்துமுடித்தமலர்ச் — சொரு
வஞ்சியானபாவி — மனம் — வைத்தேனைமெத்தமேவி
கொஞ்சிக்கொஞ்சிக்குவி மோகங் — கொடுத்தமனதீவி
நெஞ்சில்விரகதாபம்பஞ்சின்றீபோற்பிடிக்கு
தேன்செய்துவேண்டிபஞ்சமாமாதகி — சொரு

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்.

ஏசிதம்பாராமற்கெஞ்சினேனேஎத்தனையோவவள்மனதைத்திருத்தினேனே, ராசிசெய்தவளுடனே இணங்கினேனேநான் பிரியேனென்றுவெகுஞாயஞ்சொன்னேன் காசலையாயிருந்தவள்போற்பிரிந்தேகள்ளிக்க

பாடகமாகக்கட்டுத்தினென்னை, மோசமதுசெய்தாளே புல்வாயெமா னே முன்னடந்தனாயமிதை மொழிகுவீரே

## இதுவுமது-சந்தவிருத்தம்

பொருபுலிமேயமதைபானைகளேசிறுபுல்வாய்க்குழாமே
வருமரைமேகலைமானினமேகருடலைபாமேதிகளே
குருவினமேசவுதாரிகள்ளமயில்கோகிலமேகிளியே
ஒருநறமாமயில்வரும்வழியறிகிலேனுரைசெயுமென்றிடமே

(வ-ம) ஆ-ஆ-வள்ளி-நீ என்னை யேசினதும் பாராமல் உன்னைக்கெஞ் சியுன் மனோசாதிசெய்துஉன்னை மருவினேனே நல்லது ஓகோபார்த்திர் களா கரடிபுலிசிங்கங்களே மான்மரைமேதிகளே நான் அவளுக்குமனதி ற் சந்தேகமில்லாமல் ஒருநாளும்பிரியேனென்று சொன்னேன் அப்படிக் கிருக்க என்னைக் கபடமார்க்கமாய் மோசஞ்செய்தாளே அவள் எந்தவழி போனாள் சொல்லுங்கள் பட்சிகளே.

## பொது-விருத்தம்

இப்படிவேலவர்வனத்தில்மயங்கிவாடி, ஏனமுதல்மிருகமும்பட்சிகளையே கேட்டுச், செப்பமுடன்சிற்றூரில்வழியைநோக்கித், தீவிரமாய்வழுரின் வந்துமேகிற, சப்புரத்திலேவர்களுமேயுழிந்திடாமற், கந்தனும்மகிழ்ம்ம ன்மமனைக்கதித்தொளிக்க, மைப்படியுங்கண்டன்மகன்வந்தானென்று, வ ண்கைமயுடனே பாங்கிமார்வந்தாரே

(வ-ம) அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் சுப்பிரமணியக்கட வுள் தினைப்புனத்தில்வந்துவள்ளியம்மனைக் காணாமல் மதிமயங்கிவாடிசி ற்றூரைச்சேர்ந்து நம்பியராசன்வீட்டில் ஆருமறியாமல் ஒளிந்திருக்க அப்போது வள்ளியம்மனுடைய பாங்கிமார்கள்கண்டு சுப்பிரமணியரை த்துதித்துக் கேட்கிறவிதமெப்படியென்றால்,

## பாங்கிமார்சொல்-விருத்தம்

கங்கைபாலியகுமரகந்தவேளே,கலந்தவர்தான்விலகியெங்கள்கங்கிவ ள்ளி, மங்கைபவிட்டிருக்கமனம்வந்ததோசொ, வந்ததுவுமன்றிச்சுவாமி தா போற்றி, சங்கையுடனெங்கள்வள்ளியுமைக்காணுமற், சாதமுண்ணாவிர் லேசந்தனங்கள்வாசம், அங்கமதிற்பூசியறியாளே ஐயா, அவள்தன்னையிப் போதே அழைத்துவருவோம்,

(வ-ம்) சரணம்சரணமையா சேவலக்கொடியோனே தாய்கள் எங்கள் வள்ளியைவிட்டு இத்தனைநாழிகைபெங்கிருந்தீர்கள் வள்ளியம்மனுட அண்ணமார்கள் நினையருத்துமெங்களைகூட்டிவந்தபிறகுஉம்மைக்காணு ந்து வள்ளியம்மன் ஊண் உறக்கமும் பரிமளவாசனைகளெல்லாமில்லா மல்வாடிக்கின்றுளேதாங்கள் விட்டுப்பிரியமனமெப்படிவந்ததுசுவா மி (சுப்பிரமணியர்-வ-ம) நல்லது அப்படியா ஆனால் நீசீக்கிரமாய் அவளை அழைத்துவாருங்கள் பாங்கிமார்களே (பாங்கியர்-வசனம்) சரணஞ்சர ணமையாபாக்கியம் இதோ அழைத்துக்கொண்டு வருகிறோம்சுவாமி



## வள்ளியம்மனும்-பாங்கியும்வருகிற-கண்ணிகள்.

அன்னையுமறிந்துஅண்ணமார்கித்திலா தெரிந்து
சன்னையாய்த்தாதியுங்கூட்டிக்காவிருவரும்
பாதசரங்குலுங்கிஞற்பதமிமுழிப்பா சொன்று
காதியும்வள்ளியுமெள்ளத்தனியேநடந்து
கம்பும்வடிவேலர்தன்னைனுடிவந்து கண்டு
கும்பிட்டாளாசைதீர்கருணைமுடன்வள்ளி

## வள்ளியம்மன்சொல்-வஞ்சிவிருத்தம்.

மன்னரேசரணமதிபரேசரணம், பின்னிபவடிவேல்வேந்தரேசரணம், தன்னிகரில்லாதகனியரேசரணம், என்னையாளுமிறைவனேசரணம்,

வ-ம். சரணஞ்சரணம் எனதாசைக்கிசைந்தமன்னவரே சரணஞ்சர ணஞ்சுவாமி.

## வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்

ஆசைதந்தநாயகனே அருளாருள் மகனே
வாசைனைக்கடம்பாவெந்தன்மையல்தீர்த்தவா
பாசம்வைத்தவெந்தனைநீர்மோசமுஞ் செய்யவே
பாங்குடனினைத்ததுமோகாங்கேயநாதா

வ-ம- நீகளுமென்பிராணநாதா என்னைத்தனியேவிட்டிருக்கவப்படிம னம்வந்தது இப்பதான்மெய்வருத்தமும்பார்க்கலாமாசுவாமி (சுப்பிரம ணியர்-வ-ம்) அகோவாரும்பெண்ணேவள்ளிஅப்படிஉன்னைமோசஞ்செ ய்வேனோஅல்லஅ இப்போதுநாம்இங்கேயிருக்கக்கூடாதுநாம்நமதுமலைக்கு ப்போவோம்பெண்ணே (வள்ளிவசனம்) அப்படியேநல்லபாக்கியம்நடக்க லாம்சுவாமி (சுப்பிரமணியர்-வசனம்) ஆனால்வாரும்பெண்ணே.

## சுப்பிரமணியர்-வள்ளியம்மன்-வசனம்.

அகோவாருங்களடிபாங்கிமார்களே இப்போ நாங்கள்எங்கள்மலைக்கு ப்போகிறோம்நீங்கள்சந்தோஷமாயிவ்விடத்திலிருங்கள்பாங்கிமார்களே (பாங்கிமார்-வசனம்) ஆனால்அப்படியே நல்லபாக்கியம் போய்வாருங்கள்சு வாமி அம்மாவள்ளித்தாயே யெங்கள்மேற்கிருபையிருக்கட்டும்.

## சுப்பிரமணியர்-வள்ளியம்மன்-மலைக்குப்போகிறபோது மேற்படி-கண்ணிகள்.

என்றுபாங்கிமார்கள்சொல்லஎழிலுடன் வேலவர்
மன்றல்வள்ளிக்கைப்பிடித்துமலையையோடியே
மெய்க்குறத்திநவஞ்சிகோட்டைவிட்டுமே கந்தர்
மைக்குழல்வள்ளியும்வேழ்விமலையுங்கடந்தார்
பாக்கியம்போல்வந்தகுறப்பைங்தொடிக்கை விடாமற்கி
வாக்கியம்பெருக்கூஞ் சோலைத்தாவளஞ்சேர்ந்தார்

விருத்தம்;

இவ்வகைவள்ளியுங்குகனுஞ்சேர்ந்தோர்பக்கம், இருந்திடவேசிற்றூரினங்கைமாது, ஒவ்வியபள்ளியினிற்றுயிலும்போது, ஒருபசுவைக்கள்ளனுங்கொண்டோடப்போறான், அவ்விரவுகனவுகண்டெழுந்தாள்கோவென்றலறிநாட்டன்னுடனேலோடனேகதங்கட்டி, செவ்வையாய்த்துயின்றவள்ளியெங்கேயென்று, தேடினாள்சிந்தைநொந்துவாடினாளே.

வசனம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுஞ்சுப்பிரமணியக்கடவுளுஞ்சிற்றூரைவிட்டுவழிநடந்து ஒருசோலையிலிருக்க அவ்விடம்சிற்றூரில்நங்கைமோகினிநித்திரையிலஒருபசுவைக்கள்ளன்கொண்டுபோனபாவனையாக்கனவுகண்டெழுந்துப்பார்க்கும்போது தனதருகே நித்திரைசெய்தவள்ளியம்மனைக்காணோமென்று கூக்குரலிட்டலறிபரதவித்துத்தேடுகிறவிதமெப்படியென்றால்.

நங்கைமோகினிப்புலம்பல்-கண்ணிகள்

இ-ம்-கண்டா-ஆதிதாளம்.

ஐயையோஎன்மகளைக்காணேமே — என்ன
அநியாயமென்மகளைக்காணேமே — இப்போ
மாயமோவிதுவென்னவஞ்சகமோ — இந்த
மாதுவள்ளியைக்காணுதென்னமோ — ஐயோ
எங்கெங்கேபார்த்துத்தேடுவேனோ — வள்ளி
எங்கேபோனாளென்றுதேடுவேனோ — எந்தன்
கங்கிவள்ளியிங்கேதானுமின்றாளே — என்னைக்
கைவிட்டெவ்விடமோசென்றாளே — சிற்றூர்
மன்னன்நம்பிராஜேந்தரன்வருவாரே — இங்கே
மக்களெங்கேயென்றோடித்தேடுவாரே — இங்கே
கூடியபாங்கிநானுஞ்சென்றாளோ — எவனை
கூட்டிக்கொண்டுபோயெவ்விடத்தில்நின்றாளோ — நம்ம
வேடச்சேனைநஞ்சிரிக்கவறியாதோ — என்னை
மறிவள்ளிபோனதுந்தெரியாதோ — நமக்கு
பெண்ணொன்றிருக்குதென்றுநினைத்தேனே — மகளே
பேசாமற்போகவிட்டுத்தனித்தேனே — அன்னம்
உன்னைமற்பூரித்துநானிருந்தேனே — பேசாது
ஊமைகண்டகனாப்போலிருந்தேனே — இந்தப்
பாவிகள்ளனாலின்பின்போனாளோ — எந்தப்
பாதகன்கைவசத்திலானாளோ — வள்ளிப்
பூவையின்பாக்கியர்சேர்ந்ததுண்டோ — சும்மா
பொய்யாமைச்சொல்பேசாதிருப்பதுண்டோ — இது

பொது-மேற்படி-கண்ணிகள்.

ஒன்றுநானறியேனென்றேதினாளே — அப்போ
துத்தமாநங்கைகூட்டிக்கோதினாளே — மகள்



செவ்வாறுதனியேபோனசெல்வாறு — இதைச்
சீக்கிரம்பார்ப்போமிப்போதனைவோரும் — என்று
நங்கைசொல்லவேநம்பிராஜனும் — மக்கள்
கலருடன்வந்தாரனைவோர்களும் — அப்போ

விருத்தம்.

சாதியில்லாதவழியிழுக்குஞ்சொல்லும், சம்பவித்ததெனவேடர்சகலபேரும்; மோதியபல்நெறநெறனக்கடித்தமீசை, முறுக்கியிடையிறுக்கியேவண்டுநக்கிக்கொண்டு; நீத்றவிற்கணைகள்சமுதாயுதொட்டுச், சிறுவள்ளிதனைத்திருந்திருட்டுக்கள்ளப், பாதகனைப்பிடித்தொருமித் தடிப்போமென்று, பார்த்திட்டார்பதைத்துடனும்வேர்த்திட்டாரே.

இதுவுமது.

அடர்ந்தநம்பிராஜன்சேனைகளோடேகி, அம்பேத்திவனங்கடந்து அடுத்தார்குட,மடக்கைதையைக்கொண்டோடவலிகப்பார்சுற்றி வளையடாநம்மைப்போலோர்மனிதன்றானோ, கடந்திடவுமவிடுவோமோ மென்றலறோரும், கண்ணெட்டும்பார்த்தாவங்காதிற்கேட்டும், அடர்ந்துகள்ளவேலனைகண்டும்புயாறித், தொடுத்திட்டார்வளைகண்டுதொடுத்திட்டாளே,

வசனம், இந்தப்பிரகாரம்நங்கைமோகினித் துயில்நீங்கி வள்ளியம்மனைக்காணாமல் நம்பிராஜனுக்குச்சொல்ல அப்போது ராஜனும் குறவர்களும்புத்திரர்களுஞ் சேனைசூழ்ந்து வள்ளியைக்கொண்டுசென்ற கள்ளனைபிடிக்கவேண்டுமென்று காலடியைப்பிடித்துவந்து சோலையில் சுப்பிரமணியருகம் வள்ளியம்மனும் இருந்திருதைக்கண்டு மெத்த ஆரபாரத்துடன்கணைகள்தொடுக்க அப்போது வள்ளியம்மன்கண்டு சுப்பிரமணியரிடஞ் சொல்லுகிறவிதங்காண்க,

வள்ளியம்மன்-சுப்பிரமணியர்சொல்-விருத்தம்.

எதிரேறிப்படைப்பெருக்கியண்ணமார்கள், என்றகப்பன் அனைவோருமிங்கேவந்து, மதமீறிக்கணைதொடுத்துப்பொருதுவாரே, வல்லதுலதெய்வமென்றுமதிசதிட்டாரோ, விதிபொன்றும்வாராதுபுலம்பவேண்டா, மெல்லியேஎன்கையிலவேலிருக்க, பக்குதேநீயுமிப்போபெண்ணேவள்ளி, பார்க்கிறேனமலோகஞ்சேர்க்கிறேனே.

வள்ளியம்மன்-வசனம்,

சரணஞ்சரணமென்பிராணநாதா இதோபார்த்திரா என்தகப்பனும் என்னண்ணமார்களுஞ்சேனையுடன்வந்து அம்புதொடுக்கின்றார்கள்தாங்கள்குலதெய்வமென்று மனதில் நினைக்கமாட்டார்களே இதற்குநாமென்செய்வோம் சுவாமி(சுப்பிரமணியர்-வசனம்) ஆனாலவாரும் பெண்ணேவள்ளி அப்படியாதொன்றும் வாராது நீபுலம்பவேண்டியதில்லை என்கையில்சக்திவடிவேலிருக்குதல்லவோ அவர்களென்மேல் நெருங்கினால் அவர்களை எனதுவேலால் எமலோகஞ்சேர்க்கிறேன் பாரும்பெண்ணே (வள்ளியம்மன்) ஆ ஆ சுவாமி அப்படிச்செய்யலாமா எனது தகப்பனை

ணமார்களையுங் கொல்லாமல் விடவேண்டும் பிராணநாதா (சுப்பிரமணியர்-வசனம்) ஆனால்கேளும்பெண்ணே பிரகளத்தி லெப்பாரியுண்டோ ஆகிலும்பார்ப்போம் பேசாமலிரும்பெண்ணே

பொது வஞ்சிவிருத்தம்.

இப்படிவேலர்செப்பியபோது
அப்புறம்வேடர்கோப்பெனச்சூழ்ந்தார்

வ-ம், இந்தப்பிரகாரம் வேலாயுதக்கடவுள் வள்ளியம்மனுக்கு மனத்திடஞ்சொல்லிக்கொண்டிருக்கும்போது அந்தசமயத்தில் வேடர்கள்வந்து சூழ்ந்தவிதமெப்படியென்றால்.

பொதுத்தாழிசை-விருத்தம்

கைக்குளேவக்கெதிர்பட்டானிங்கேகள்ளன் காணிவனென்னவே
கானக்குறவிரசபிராஜனும்வானைத்தாவியமீனைப்போல்
எக்கிக்கொடைமீறியேவந்து விற்கணைகளையேவிய
இவனைக்கொல்லவொருவன்போதுமேகமாய்ப்படைவேண்டுமோ
சிக்கிக்கொண்டபின் விடுவோமோவெவ்வீரமாகியசண்டைகள்
செய்யுமேகந்தசாமிசீறித்திருக்கைவேல்கொண்டெறிந்திடத்
தாக்கம்பண்ணியவேடர்களும்நம்பிராசனும்பட்டுருவியே
சாய்ந்துமாய்ந்துயிர்மாய்ந்துகாணிற்றனித்தனியிறந்தார்களே,

விருத்தம்.

இகல்புரிந்தவேடரெல்லாஞ்சத்திவேலுக், கிரையாகப்போனதின்பின்னைதிரோதின்று, இகிரிதனைத்துளைத்தநிலோர்குகையுண்டாக்கிச், செல்வியள்ளித்தன்னையதிற்சேர்க்கக்கண்டு, அசமதனிற்றீராதத்துயரையெனஎனி, அண்ணன்மார்தகப்பனைநினைத்தழுதுவாடி, மிகவருந்தியேங்கிமனந்தேம்பிவிம்மி, விழிகள்புனற்சொரியநொந்துவிள்ளுவாளே,

வ-ம், இந்தப்பிரகாரம் சுப்பிரமணியரும் நம்பியராசனும் அண்ணமார்களும் குறவர்களுஞ் சமர்செய்ய அந்தவேளையில் சுப்பிரமணியர்வேலாயுதங்கொண்டு யாவரையுஞ் சங்கரித்தவுடன் தாங்களிருந்த சோலைக்கெதிரில்நின்ற மலையைத்துளைத்துக் குகையுண்டாக்கி வள்ளியம்மனை அதில்வைத்தபின் வள்ளியம்மன் தகப்பன் அண்ணமார் இறந்துபோனதைக்கண்டு பிரலாபிக்கிறவிதமெப்படியென்றால்

வள்ளியம்மன்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்.

என்னசெய்வேனெந்தனண்ணமாரே — நீங்கள்
எந்தனைவேலவுயிர்சிந்தினீரோ
தன்னவரேஎந்தன்றகப்பனாரே — நீரும்
சாந்தொட்டீரோஉயிரிழந்திட்டீரோ
படிந்தசேதிபெற்றவளைக்கேட்டால் — வினைப்



மானுவாளேகதறிவிழுவாளே — நீங்கள்
உடன்பிறந்துஞ்சத்துருவாயிருந்தேன்
ஒழிந்திட்டீரோவயிர்களழிந்திட்டீரோ — உடன்
உங்கள்வலுவெல்லாமெங்கேபோச்சோ
ஓடிப்பலாச்சோவீணாய்மடியலாச்சோ — இங்கே
தங்கையென்றசொல்லைமறந்திட்டீரோ
தளர்ந்திட்டீரோஉயிரிழந்திட்டீரோ

நாரதர்வருகிறபொது-விருத்தம்.

கற்பனைகாரணமுடிந்தக்கதையையெல்லாங், காணவந்த நாரதனுங்கந்தவேளை, அற்புதமாய்க்கண்டுநமஸ்காரஞ்செய்தான், அன்னைவள்ளித்தமயரமெல்லாமறிந்தானேதோ, உற்றவர்கள்வந்ததும்வேடர்களும்வந்து, மற்பொருதுமாண்டதும்வகையாய்க்கூற, மகிழ்ந்திட்டான் குகனைமெள்ளப்புகழ்ந்திட்டானே,

(வ-ம்) இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் புலம்பிக்கொண்டிருக்கும்போது நாரதமுனிவர் சுப்பிரமணியரிடத்தில்வந்துகண்டு இங்கேநடந்த காரியங்களைக்கேட்டுச் சந்தோஷமடைந்து சொல்லுகிறவிதமெப்படியென்றால்.

நாரதர்சொல்-விருத்தம்,

கைவடிவேல்நீலமயில்கந்தநாதா கானகத்தில்வள்ளிதனைக்கண்டாலங்கு, தெய்விகமாய்க்கலியாணஞ்செய்யாமன்னீர் திருவிளையாட்டுதற்கோ சிந்தைகூர்ந்து, மெய்வடிவம்பொய்வடிவாய்க்காட்டிவீணாய் வேடரையிர் வேலினுக்கேயூட்டிச்சுமமா, மைவிழிமானையுங்குகையிலடைத்தீர்ப்போமாண்டவரையெழுப்பிவள்ளிமணஞ்செய்வீரே

(வ-ம்) சரணஞ்சரணமையா கழுகாசலக்கந்தரே கானவரிடத்திற்போய் வள்ளியம்மனஞ்செய்யாமல் செய்யுறுமாறிப்போய் வேடரை பூண்டு வேடர்களுயிரை வீணாய்ப்போகச்செய்யலாமா ஆனால் உம்முடைய திருவிளையாட்டை யாரறியப்போகிறார் இப்போது வேடர்களையெழுப்பி வள்ளிநாயகியை வணஞ்செய்துக்கொள்ளுங் கழுகாசலக்கடவுளே

பொது-கண்ணிகள்-இ-ம-சங்கராபரணம்-அடதாளம்.

நாரதன்விண்ணப்பஞ்செய்திடுஞ்சேதிதெரிந்திட்டார் — வள்ளி
நாயகியால்வேடுவர்க்குக் கருணைபிறந்திட்டார்
வீரப்ரதாபசம்மாரகுமாரன்திரும்பினார் — குற
வேடச்சிக்காய்ந்த வேடர்க்குதவவிரும்பினார்
வானேகுறமயிலேயிட்டநீயிங்குவாவென்றார் — உயிர்
மாயும்பிதாவண்ணன்மாரையெழுப்பிப்போமென்றார்
தேனேகுறவர்க்குயிர்கொடுத்தோமுன்னிமித்தியம் — இவர்
தேகமெல்லாம்வச்ரதேகமடியிதுசத்தியம்
வள்ளியவேடரெழுந்திருப்பாரடிபெண்ணே — எந்தன்

சொல்வழிபார்ச்சென்றெழுப்பிடுவாயடிசண்டனை
வள்ளியுநான்செய்தபாக்கியந்தானென்றுகும்பிட்டாள் விடை
வாங்கியேகன்னையண்ணனையெழுப்பத்தெம்பிட்டாள்
ஊட்டிவளர்த்தஉயிர்த்துணைபோரெழுந்திருங்கள் எனக்
குற்றககப்பன்பின்சுற்றமெல்லாமெழுந்திருங்கள்
தாட்டிகமாகியவீரர்களேயென்றுபுகழ்ந்தாள் ஆர்த்
க்ஷணத்தில்வேடரெல்லாமெழுந்தேதுள்ளிமகிழ்ந்தார்
தோத்திமாம்வள்ளிதன்னைப்புகழ்ந்தெங்கள்தாயே பெருந்
துன்பந்தவிர்த்துயர்வுதந்தகுலதெய்வமீயே
நேத்ரமேஎன்னவேடன்கைகுட்டியேசென்றான் சற்று
கீர்த்தனவேலர்முன்பாகவிட்டேயங்குநின்றாள்
அப்போதுசண்முகன்செச்சையும்மாலையுஞ்சூட்டினான் சேவ
லாடமயிலாடதற்சொரூபமங்குகாட்டினான்
ஒப்பியவேடுவரானந்தக்கூத்தாடிப்பணிந்தார் எங்கள்
உற்றகுலதெய்வசாமியென்றேசொல்லத்துணிந்தார்

நம்பிராஜனும்புத்திரர்சொல்-விருத்தம்,

இப்படிவேடங்கொண்டு இவ்விடந்தன்னில்வள்ளி
ஒப்பினர்குட்டிவந்த தொருவர்க்குந்தெரியாதையா
அப்பனேயுனதுசித்தமாரறிவார்கள்ஞானச்
சுப்ரமண்யரேயெங்கள்சொற்பிழைபொறுத்திடீரே

இதுவுமது-விருத்தம்,

தனித்துவள்ளிதனைக்கூட்டி சுவாமியெங்கள் ஜாதிசனமறியாமற் றுனேசென்றால, இனத்திலிகல்சொல்லுவதுஞ்சரியோவையா இப்போதேசிற்றூருக்கெழுமைவேண்டி, மணத்சயவராய்வந்துகுலதேவரோநீர் வள்ளிதனைப்புவியறியமாலைசூட்ட, தொனித்திடவுங்கைப்பிடித்துக்கொடுப்போராங்கள் சொற்படியேவாருமையாசுவாமிநீரே

வசனம்.

சரணஞ்சரணமையாசுவாமி சுப்பிரமணியக்கடவுளே நீர்உம்முடைய சுயரூபத்தைவிட்டு வேற்றுருவங்கொண்டு வள்ளியம்மனை ஒப்பும்படி செய்து இங்கக்கானகத்திற்கூட்டிவந்தீர் உம்முடைய சித்தமெங்கள்பாக்கியம் ஆனால் எங்கள்வள்ளியம்மனைத்தனித்து எங்கள் ஜாதிசனமறியாமல் கூட்டிவந்ததுசரியோ அதுசரியல்ல இப்போது தாங்கள் சிற்றூருக்கு எங்கள்கூடவந்து யாவரும்அறியும்படியாக வள்ளியம்மனை மணஞ்செய்துக்கொண்டு போகலாம் சுவாமி.

சுப்பிரமணியர்சொல்-கொச்சகம்.

வாருமென்றசொன்னநம்பி மாமனேகேளுமிப்போ
காரியந்தான்நன்றுச்சு கடுகெனவேபோவோம்நாம்
நாரதனேநீர்கூட நன்மைபெறுஞ்சிற்றூர்க்கு
ஏர்பெறவேவந்தால்கா ளிதைசந்துமணஞ்செய்வேனே.



(வ-ம) கேளுமையா எனது சொந்தமாமனாகிய நம்பிமகாராஜனே ஆனால் உங்கள்மனதுபோல வள்ளிநாயகியை மணஞ்செய்யவருகிறேன் போவோம் வாருங்களையா அகோவாரும்நாரதனே நீரும் எனது கூடவந்திருந்து வள்ளியைமணஞ்செய்துவைத்துப் போகலாம்வாரும் நாரதனே (நாரதர்-வசனம்) மகாசந்தோஷம் அப்படியே தங்கள் உத்தாரப்படி நடக்கவென்று காத்துக்கொண்டிருக்கிறேன் நல்லது போவோம்வாருஞ் சுப்பிரமணியக்கடவுளே.

சுப்பிரமணியர் சிற்றூர்போய்த் திருப்பரங்குன்றஞ்சேர்தல்

கண்ணிகள்-இ-ம- ஆனந்தபைரவி ஆதிதாளம்

வெள்ளியங்கிரியேநம்பிமனைக்கு வடி
வேலர்வேந்தனுகூலமாயிருந்தார்
வள்ளிமணாளன்வந்தான்வடிவேலன்வந்தான் என்று
மகிழ்ந்துவேடுவரெல்லாம்புகழ்ந்துநின்றார்
மாதுநங்கைமோகினிமசளுக்கேர்த்திடும் நல்ல
மாப்பிள்ளையென்றுதலைசாய்ப்புடன்நின்றாள்
ஜாதிஜனமறியசகலபூமியறிய கந்த
சாமிக்குவள்ளிதன்னைநேமகஞ்செய்ய
பேதமில்லையிவருக்கேபெண்கொடுக்கிறோம் என்று
பெருகிவேடர்புகழ்ந்தங்கிருநிலவந்தார்
நீதமுடனேநம்பிராசனுந்துணைவரும் நல்ல
நேசமாகவேலரோடுபேசியிருந்தார்
நன்றாயிருப்பீரெந்நாளுந்தழைப்பீர் என்று
நாதன்வேடர்க்குலாகபோதங்கொடுத்தார்
குன்றுமல்வாழ்ந்திருங்கள் குறைவில்லையென்று சொல்லிக்
கோதைவள்ளியையழைப்பேசிமகிழ்ந்தார்
ஆறுதலங்களிலேதிருப்பரங்குன்றம் உண்டு
அன்பாயதிலேமணஞ்செய்யவுநன்று
கூறுகின்றேமென்றுவடிவேலர்புகழ்ந்தார் அங்கே
குறைவரவேடர்களோமென்றுமகிழ்ந்தார்
செவ்வேள்நம்பிராசனுந் திரமுறுங்குறவர் அப்போ
திருப்பரங்குன்றம்வந்து சேர்ந்துமகிழ்ந்தார்
ஒவ்வுமுகூர்த்தமும்பார்த்த துயர்லக்னம்பார்த்து அங்கே
ஒருதிருமனையையுஞ்சிங்காரமுஞ்செய்தார்
வாழைகருப்புகணுடிவான்னப்பட்டங்கள்சேர்த்து மா
மதிப்பிரகாசமின்னகாவணஞ்செய்தார்

சுப்பிரமணியர் திருமணத்திற்கு பரமசிவன் தேவர்கள்
வருகிற விருத்தம்

கந்தப்பரிமளகளபங்கறைந்துரத்னச்சொற்மையமானமரை லனைசோடித்து, உசந்தபச்சைத்தோரணம்கிதியிலிற்கட்டி உயர்ந்திடும் வானவர்

தேவேந்திரனுமற்று, முகுந்தனுநான்முகனு முனிவர்களுஞ்சூழ்ந்து குமரனுக்கும்மணஞ்சூட்டுமுகூர்த்தங்கண்டு,மகிழ்ந்துசிவன்பார்வதிசமேதராமோன்மழுவுமேந்திபங்குவருகின்றார்,

(வ-ம்) அனேகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் திருப்பரங்கிரியில்சொர்ணமயமான கலியாணமண்டபஞ்சோடித்து சுகந்தபரிமளவாடைகள்சாத்தி சுப்பிரமணியர் வள்ளியம்மனுக்கும் நல்லமுகூர்த்தம் வைத்திருக்க அதை அறிந்துமும்மூர்த்திகளும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரகிம்புருட கெருடகாந்திருவர்முதலாய் குடும்பசயாய்ப் பார்வதிசமேதராக ஈஸ்வரர் வருகிறவிதங்காண்க,

பரமசிவன்-பார்வதி-தேவர்கள்வருகிற-தரு,

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்-பல்லவி.

சம்புசதாசிவன்வந்தார்-வெள்விடையேறி
சம்புசதாசிவன்வந்தார்

அநுபல்லவி.

நம்பிரான்மழுவேந்தி அம்பிகையுடன்சேர்ந்து
ஞானவேள்கலியாணநாளென
நாடிமேன்மைவிசேடமாகிய (சம்)

சரணங்கள்.

தேவேந்திரன்முநிவோர் ஆயிரநயனன்
தேவியிந்திராணியனேவோர் புடைசூழ
சைவமாதர்கள்வாழ்த்துஞ்சரஸ்வதிபிரம்மதேவன்
தந்திமாமுகனுங்கணநாதரும்
வந்திறைவணங்கிய கந்தர்சடாதர (சம்)

தும்புருநாரதரும் யங்கிரசூரியரும்
சுக்கிரபகவானும் தவஞ்செய்வோரும்
கிம்புருடாதிபரும் கின்னரானைவரும்
கீர்த்தியாகிய சோதிகனும்வெகு
நேத்திரமாகிய காசிபனும்வர (சம்)

முப்பத்துமுக்கோடி தேவர்களும்
முனிவர்களுங்கூடி ஒன்றாய்வந்து
சுப்பிரமணியர்வள்ளி தோகையிருவருக்குஞ்
சுந்தரமாகிய பந்தல்மேவன
முந்திகழச்செய வுந்திருப்பரங்கிரி (சம்)

தெய்வயானைக்கு-விநாயகர்மணஞ்செய்திகூறல்-விருத்தம்,

பரமனும்பார்வதியும்விண்ணோர்பதியுமாதும்
பங்கயனுஞ்சரஸ்வதியும்மாலுமாதும்
சரவணவேள்கந்தனுக்குப்பெண்வள்ளி
தன்னைமணஞ்சூட்டவிதுசமயமென்று



இரசிவனுங்கஜமுகனையழைத்தாரேபோய்த்
தெய்வானைதனைக்கூட்டிவாருமென்ன
விரவுடனேபோயவனுமணமுகூர்த்த
விதமெல்லாங்குஞ்சரிக்குவிளம்புவானே.

வ-ம். இந்தப்பிரகாரம் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்மும்மூர்த்திகளும் பரமசிவன்இவர்கள் திருப்பரங்குன்றம்வந்துசேர்ந்து சுப்பிரமணியர்வள்ளியம்மனுக்குமணமுகூர்த்தவேளையென்று தெய்வயானையைக்கூட்டிவரும்படி விநாயகமூர்த்திக்குப்பரமசிவன் பார்வதிசொல்லவிநாயகமூர்த்தி தெய்வயானைக்குப் போய்சொல்லுகிறவிதமெப்படியென்றால்,

விநாயகர் தெய்வானைக்குச்சொல-தரு-இ-ம்-தோடி-அடதாளம்,

நன்மைநான்சொலக்கேளாய் தெய்வயானையே
நன்மைநான்சொலக்கேளாய்

துன்மையில்லாமற்கந்தன்திருக்கலியாணஞ்செய்ய
உன்மனகோகாமனுக்கழைத்திடவந்தேன் நன்

திரமாய்ப்பெண்ணொன்றிருக்கத்திருப்பக்கலியாணஞ்செய்தால்
இரண்டுகொழுந்திவந்தாலெனக்குச்சந்தோசம்பெண்ணே நன்
தேடிக்குறத்தியைக்கொண்டாடிந்தம்பிமணஞ்செய்ய
வேடிக்கைசொல்லவென்றேநாடிச்சுறுக்கில்வந்தேன் நன்
மண்டலந்தனிலுயர்வருத்தபிரமனுக்கும்
பண்டுவிதித்தவிதிரெண்டோகமானதாச்சே நன்
உன்னைப்பிரியேனென்றுஉரைத்திடுந்தம்பியின்று
பின்னொருத்தியைக்கொண்டால்பேசியிங்காவதென்ன நன்

தெய்வானை கணபதிக்குச்சொல் விருத்தம்.

காரகனேல்முடிந்ததெனக்கனேசன்சொல்ல
நாயகிதெய்வானைமெத்தநாணிப்பேசும்
தாரமிதோகீரதியாப்பருவமுண்டோ
தாநவனத்திற்குறத்தியபல்தாங்காகோடி
விரமெல்லாமிழந்தவள்காலடிமேல்விழுந்த
விதந்தெரிந்துமாரசன்மேல்விளம்பலாமோ
காரமெல்லாமினியுணர்த்தாற்சரியோவாரேன்
கந்தர்மணங்காணவென்றேகழறினளே,

தெய்வானை மனமிரங்கித்திருப்பரங்குன்றம்வருதல்-விருத்தம்.

புத்தியென்றேகணபதியேதெண்டமையா
போற்றிமனந்தேற்றிமெத்தப்புகழ்ந்தேனின்று
சத்திவடிவேல்வாங்கிமயின்மீதேறுஞ்
சாமிமனதிசைந்தபடிபெண்தங்கை
சித்ரவள்ளிதன்னைமணஞ்செய்தெங்களுஞ்
சேர்ந்தொருவர்போலிருந்துவாழ்வேனையா

எத்திசையும்புகழ்திருப்பரங்குன்றத்தில்
யெழுந்தருள்வோமிட்சணத்திலியல்பாய்த்தானே

வ-ம். சரணஞ்சரணமையா என்றுமத்தானே இனியெத்தனைவிதமிருந்தாலும் அவைதன்னை முடியுங்காரியமுடிந்தே தீரும் என்பிராணநாயகர் மனதிற்கிசைந்தபடி நங்கைவள்ளியையணைந்துசெய்து நாங்களிருவரு மொருமனதாயிருக்கின்றோம் ஆகையால் திருப்பரங்குன்றம்போகலாம்வாரும் அத்தானே (கணபதிசொல்)நல்லது அப்படியே போகலாம்வாராய்செய்யானே,

(பொது வ-ம்.) இந்தப்பிரகாரம் தெய்வயானை அம்மனும் விநாயகமூர்த்தியும் சமுகமிலிருந்து திருப்பரங்குன்றத்தின் சபையில்வந்துசேர்ந்து பரமசிவன் பார்வதியை வந்தனஞ்செய்து யாவர்களு மனதாகஞ் சுப்பிரமணியருக்கும் வள்ளியம்மனுக்கும் திருக்கலியாணசாதனம்நடக்கிறவிதமெப்படியென்றால்.

சுப்பிரமணியர்-வள்ளியம்மனைத்திருக்கலியாணஞ்செய்யும்
தரு-இ ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்-பல்லவி.

திருக்கலியாணமுடித்தார்  கந்தர்கல்யாணித்திரும்
திருக்கலியாணமுடித்தார்

அநுபல்லவி.

மருக்காமும்மலர்சொரிந்து  பெருக்கவிதானஞ்செய்து
மறைவியாத்தோடு  முறைமைகட்டிடியே-திரு

சரணங்கள்,

சந்தனமரக்கால்நாட்டி  முன்னேயா
சானிமணவறைமிற்பூட்டி  மிருப்பாகச
அந்தப்படிமுத்துப்பந்தல்  விதம்வகுத்து
ஆதனப்பீடமும்பொருந்தல்  முனிவர்சித்தர்
இந்திரன்விண்ணோர்வேடர்  பந்தசனங்கொண்டாட
இங்கிதமங்கையர்  மங்களமும்பாட-திரு
சந்தனத்தாற்றனைமெழுகிக்  கோலமிட்டுச்
சதிரர்ப்புக்கோணமழகன்  ஒளிபொருந்த
வந்தனையாய்க்கணபதியை  நினைந்துவைத்து
வளரும்பரிதியைக்  கும்பநிறுத்திப்
பந்தனமுகவீடுதேங்  காயுடைத்துவாழைப்
பழமுக்கிட்சணைவைத்துப்பணிந்து  வேடர்சூழ-திரு
சிந்தையுகிழ்ந்திடவும்வேடர்  செய்சாத்திரத்
திராட்டன்கொண்டாடக்  களிகூர்ந்து
செந்திருச்சேர்ந்திடும்வள்ளியும்  கந்தசாமியுஞ்
சேர்ந்துச்சுபவேளையிலும்  ஸ்தானமபண்ணி
வந்துசபதனால்  முறையறுட்டானஞ்செய்து
மணவறைமிதில்வரக்  குலத்தேவர்மலர்பெய்து-திரு
வேதப்பிரமனும்வந்து  முறைப்படி
வேள்விவளர்த்தமுந்து  கன்றுகூர்த்தமுஞ்



சாகதப்படியெயதிந்து  சுபதினத்தில்
சாந்தியுஞ்செய்யதணிந்து  அப்போதுயர்ந்த
கோதிலாப்பணியணிக்  கோனெனும்வேலருக்கும்
குலவிடவேயணிந்து  குறமான்வள்ளியாளுக்கும்(திரு)
மிருதங்கமத்தளமேளம்  அந்தாரிக்கொம்பு
முழங்கிடவேசைத்தாளம்  வாத்யத்தொனியுந்
செகமெங்குமிறைந்திடவே  பேரிசைபூரிச்
சேரமுழங்கிடவே  அந்தவேளையில்
அகமதுமகிழ்ச்சியா  யனைவருங்கொண்டாடி
அரம்பையர்மெனமாதர்  அன்பாயமங்களம்பாடி(திரு)
நல்வாருஞ்சிக்கைதகூட  நல்வரிமகிழ்ந்
தியாவருங்களிகூர  முநிவர்தேவர்
ஆசீர்வாதங்கள்செய்ய  அட்சதைத்தூவி
அருந்தவர்மனமேய  பொங்கரட்டனே
தாசர்க்குதவுங்கந்தர்  தாலியைக்கையெடுத்து
தார்பூண்டமங்கைவள்ளி  தனகழுத்திற்றரித்து(திரு)
அன்னநடையின்மேனகை  திலோர்த்தமை
ஆலாத்தியேந்திடவே  மாலையன்வாழ்த்த
வன்னவேடுவர்மகிழ  இருபுறமும்
வாணேசிருந்துபுகழ  அப்போதந்தக்
கன்னிவள்ளியைக்கந்த  கைப்பிடித்தேயந்தக்
கல்யாணமண்டபங்  களிப்புடன்சுற்றிசேர்ந்து(திரு)

சுப்பிரமணியர்-மணக்கோலங்கொள்ளல்-விருத்தம்

கைப்பிடித்துமனமகிழ்ந்து வெகுசிங்காரக் கலியாணக்கோலமெல்லாங்கருணையோடு, செப்பியமாவலிமைபெருங்கந்தனோடுந் திருப்பிலங்குமொய்முறைச்சீர்செய்தபின்பு, மெய்ப்பொடுசம்பூரணனக்கும் கொண்டு விமலனும்பார்வதியும்விண்ணோர்திரளுஞ்சூழ, சுப்பிரமணியர்மயிலேறிப்பவனிவந்தார்தோகையர்சோபனங்கள்சொல்லுவரே.

(வ-ம்) அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் சுப்பிரமணியருக்கும் வள்ளியம்மனுக்குந் திருக்கலியாணமுடிந்து மயில்வாகனரூடராய்மணக்கோலங்கொண்டு பவனிவருப்போது சுற்றிலும்நெருங்கிய மகளிர்ப்பெண்கள் சோபனம்பாடுகிற விதமெப்படியென்றால்,

சோபனம்பாடுகிறது-இ-ம்-ஆரபி-ரூபகதாளம்.

சோபனஞ்ஜெய-சோபனஞ்ஜெய-சோபனஞ்ஜெய-சோபனம்

பூபதிவேலையுதர்மணம்பெருந்தமேயிதர்சோபன  சோப
வள்ளிதெய்வானையுடன் வாழ்வுபெறச்சோபனமே  சோப
புள்ளிமயில்வேலவர்வள்ளிப்பொருந்தச்சோபனமே  சோப
அன்னைதெய்வானைவள்ளி அணைந்திருக்கச்சோபனமே  சோப
தின்னமுடன்முருகனும் வள்ளிசாந்திருக்கச்சோபனமே

தேவர்கள்-விருந்தருந்துதல்-விருத்தம்,

கந்தரும்வள்ளியும்புகழ்ந்துபவனிவந்து கருணைவாரிதிபொழிந்துக னம்பெற்றோங்க, இந்திரன்மால்யன்முனிவோர்சகலபேரும்இனிமையுட ன்றிருவுளப்பிரசாதமன்னம், பந்திவைத்துபடைத்துரசவர்க்கங்கூட்டிப் ப சிதீர்க்கச்சுவைசேர்த்துபன்னிரத்தர், சந்தனஞ்சவ்வாதுதாம்பூலங்கொண்டு சாற்றினார்மிகத்தொழுதுபோற்றினாரே.

தேவர்களுஞ் சுப்பிரமணியரும் வள்ளியம்மனும்
தங்கள்தலஞ்சேர்தல்-விருத்தம்,

திருக்கழுகாசலநகரந்தனிலேகந்தன் தெய்வானைவள்ளியுடன்சேர்ந்தந் நாளில், உருக்கமுடன்தேவர்கள்யாவர்களுஞ்சேர்ந்து உடனேதாமவரவ ர்தன்பதியிற்சேரப், பெருக்கியமானிடரிந்தச்சரிதைபாடப் பெருமையுட ன்மங்களசோபனம்பெற்றோங்கத், திருக்கலியாணச்சிறப்பைக்கேட்போ ர்க்கென்றுஞ் சித்தித்துசெல்வமிகச்சேருந்தானே,

(பொது-வசனம்) அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் திருப்ப ரங்குன்றத்தில் [illegible]முதல் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நம்பிராசன்முதல் [illegible] கூடியிருந்து சுப்பிரமணியக்கடவுளுக் குந் திருமணக்கோலஞ்செய்து அவரவர்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தபி ன் சுப்பிரமணியரும் வள்ளிதெய்வானை இவர்கள் தங்கள்கழுகாசலம்போ ய்ச்சேர்ந்து மங்களகரமாயிருக்கின்றார்கள்.

மங்களம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

மங்களம்மங்களமே ஜெயசுப மங்களம் மங்கள மங்களமே

மங்களஞ்செங்கதன் வல்லபைநாயகர்க்கும்
துங்கவள்ளிதெய்வானைசுப்பிரமணியருக்கும் மங்களம்
வாமபாதசிவகாமிசோமசுந்தரர்க்கும்
பூமிதேவிமணவாளன் விண்டுவினுக்கும் மங்களம்
முப்பத்துமுக்கோடி முனிவர்தேவர்புகழ்
தப்பிலாதுகலைவாணியெனுந்தாய்க்கும் மங்களம்
இந்நாடகந்தன்னை இன்பமாய்க்கேட்போர்க்கும்
வன்மையாயநுதினம வாசிப்பவர்க்கும் மங்கள
வள்ளியம்மைநாடகத்தை வாசித்திடுவோர்க்கு
புள்ளிமயிலோன்கிருபைப் பொருந்திவாழ்வர்தினம் மங்கள

வாழி-விருத்தம்.

சத்திவடிவேல்வாழிச்சேவல்வாழி தாய்வள்ளிச்சரிதைதனைச்சதிரா ய்க்கூறும், முத்துவீரப்பகவிராயன்வாழி முன்னூலுண்டாக்குவித்தமுக் கோர்வாழி, துத்தியமாய்ப்பூவுலகஞ்செழிக்கவாழி தோகைவள்ளிதெய் வானைச்சுகமேவாழி, வந்துவாழ்மென்கழுகாசலமும்வாழி மயில்வாழிவி த்தியாவிநோதம்வாழிதானே.

வள்ளியம்மைநாடகம் - முற்றிற்று.